# ★ கதர் தத்துவமும் சேவையும் ★

முதல் பாகம்.

ஆசிரியர்.

என். ராமஸ்வாமி.

★

கதர்மலர் (ஸர்வோதய) பிரசுராலயம்,

அகில பாரத சர்க்கா சங்கம், தமிழ்நாட்டுக்கிளை,

வீரபாண்டி, திருப்பூர்.

முதல் பதிப்பு.

செப்டம்பர் 1950—2000.

உரிமை பதிவு செய்யப்பட்டது.

விலை. 0—12—0

திருப்பூர் கமலா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 1950.

# முகவுரை.

மஹாத்மாவின் தலைமையில் நடந்த சுதந்திரப் போராட்டத்துடன் சேர்ந்தது கதர் இயக்கம். கதர் இயக்கத்தை அகில பாரத சர்க்கா சங்கம் நடத்தி வந்திருக்கிறது. சர்க்கா சங்கம் தரித்திர நாராணயன் சேவையுடன் சுதந்திர வீரர்களுக்கு கதர் அணி கொடுத்தது. சுதந்திர மூவர்ணக் கொடிக்கு சங்கத்தின் கதர் உபயோகப்பட்டது. கதர் கொடியை அலங்கரித்தது நமது சர்க்கா. சுதந்திரம் அடைந்த பிறகும் நமது தேசீயக் கொடி கதர்கொடியே. அதில் இப்பொழுது நமது சர்க்காவின் சக்கரமும், அசோக தர்ம சக்கரமும் ஒன்றாக பொருந்தி விளங்குகிறது. நாம் அடைந்த சுதந்திரம் கதர் மூலமும் சர்க்கா மூலமும்; அதே சின்னங்கள்தான் சுதந்திர இந்தியாவை இன்று ஆள்கின்றன.

கதரும் சர்க்காவும் ராஜீய சுதந்திரத்திற்காக உழைத்தது போல சமூகப் பொருளாதார சுதந்திரத்திற்கும் உழைக்க வேண்டும். கிராம அஹிம்சா சுயராஜ்யத்திற்கு பாடுபட வேண்டும். சர்க்கா சங்கம் இதுவரை செய்த சேவை சிறிது. இனி செய்ய வேண்டியது அதிகம். சர்க்கா சங்கம் கதர் உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபட்டு வந்தது. இனி தத்துவத்துடன் மகாத்மா உபதேசித்தபடி சத்தியத்திற்கும் அஹிம்சைக்கும் சர்க்காவை சின்னமாகக்கொண்டு புதிய லக்ஷியத்திற்கு வேலை செய்ய வேண்டும். சர்க்கா சங்கம் என்பது நூற்போர்களின் சங்கம்; உழைப்பாளிகளின் சங்கம்; கூலி, விலை, வியாபாரம் லாபம், சுரண்டல் முதலியவைகளிலிருந்து விடுபட்டு உழைப்பின் மூலம் ஏற்படும் சுயதேவைப்பூர்த்தி என்ற புதிய பொருளாதார தத்துவத்தில் நம்பிக்கையுள்ளவர்கள். இப்பேர்ப்பட்ட நூற்போர் சங்கம் அல்லது கதர் சமாஜம் எங்கும் பரவ வேண்டும். தன் தேவைக்கு நூற்பது

தேவைக்கு முதல் கவனம்-விசேஷ ஆர்டர்கள்-கிளைக்
ளுடன் கணக்கு-உற்பத்தி கிளைகளின் தேவைக்கு
விசேஷ கவனமும் உதவியும். 42-53

iv. **அச்சு சாய இலாக்கா:—** அவசியம் - சுதேசிச்சாயம்-
அன்னிய சாயம்-தேவைகள்-வெளிவியாபாரிகளிடம்
ஆர்டர் கொடுப்பது-நிர்வாக முறை-சிக்கனம்-நல்ல
சாயம் - கலை வளர்ச்சி - காலத்தில் சாயமிடுதல்-
தொழிலாளிகளின் கலை வளர்ச்சியும் ரஸிகத்தன்
மையும்-பழய கிராம கலையைக்காப்பாற்றி வளர்த்தல். 53-61

v. **நூற்புக்கருவி இலாக்கா:—** இதன் முக்கிய ஸ்தானம்-
குடிசை-பரவல் தொழில் - பாக்டரியின் எல்லை-
அமைப்பு-மூலதனம்-இயந்திரத்தின் எல்லை-நிர்வாகம்-
சிக்கனம்-நியாய விலை-பாகங்களின் திறமையான
வேலை-பழுதுபார்ப்பதும்-ஸ்பேர் பாகங்கள் கொடுப்
பதும்-நூற்போர்களும்-விசைச்சக்கிரமும் - அஹிம்சா
ஆயுதங்கள்-ஆராய்ச்சி-வேகமான ராட்டை-பஞ்சடிக்
கும் மிஷின்-மூலப்பொருள் சிக்கனமாக உபயோகித்
தல்-அடக்கவிலை சதாம்சத்தில் நிர்ணயித்து
குறைத்தல்-மிஷின்களை பாதுகாத்தல்-விநோபாஜியின்
உபதேசம்-குறையுள்ள ராட்டையை உடைத்துப்
போடவேண்டும்-வெளியே விற்பனைக்கு அனுப்பக்
கூடாது-தொழிலாளி என்றும் எழுத்தாளி என்றும்
வித்தியாசம் இருக்கக்கூடாது. 61-72

vi. **காதி வித்தியாலயம்:—** நோக்கம்-பயிற்சித் திட்டம்-
அகில இந்திய சிக்ஷாசமிதி-ஆசிரியர்களுக்கு மறு
பயிற்சி-அத்தாக்ஷி பத்திரம்-ஆசிரியர்களுக்கு கலைப்
பரிக்ஷையும்-ஐந்து ரூபாய் சம்பள உயர்வும்-நூற்றல்
கலையை துர் உபயோகித்தல்-பயிற்சி விஷயம்-
வாழ்க்கைமுறை-பிரார்த்தனை. 73-82

vii. **பிரசுராலயம்:-** தலைவர்களின் சேவை - 1937-க்கு பிறகு பிரசாரமின்மை-1940-க்குப் பிறகு வெளிவந்த ஹிந்தி கட்டுரைகளும் - பத்திரிகையும் - 1945-ல் கதரின் புதிய சகாப்தம்-கதரின் புதிய லக்ஷியம்-சுரண்டலற்ற அஹிம்சா சமுதாயம்-சம்பூரண கிராம சேவை-கருத்துக்களின் அவசியம்-தத்துவப்பிரசாரம்-பிரசுராலயத்தின் அவசியம்-தமிழ் நாட்டில் வேலை-வஸ்திராலயம் பிரசுராலயமாக மாறவேண்டும். 82-89

viii **இதர இலாக்காக்கள்:-** சாதல்வார்-காகித உற்பத்தி-காய்கறி தோட்டம்-பால் பண்ணை-தேனீ வளர்த்தல்-நெல் குத்தல்-எண்ணெய் ஆட்டுதல்-தலைமைக்காரியாலய அனுமதி-திறமையான நிர்வாகம். 89-92

ix. **அத்தாக்ஷி பத்திர விதிகள்:-** ஆரம்பத்தில் தனிப்பட்ட நபர்களின் சேவை-கதர் வளர்ச்சி-கதரின் விலை, லாபம், தரம், தூய்மை-கட்டுப்பாடு-ஆரம்ப விதிகள்-ஜீவாதாரக் கூலி-வியாபாரிகளின் அசிரத்தை-1945-க்கு பிறகு தனிப்பட்டவர்களுக்கு இடமில்லை-தர்ம ஸ்தாபனத்திற்கு மட்டுமே அத்தாக்ஷிப்பத்திரம் கொடுக்கப்படும்-லாபத்தின் எல்லையும் விநியோகமும்-அத்தாக்ஷிப்பத்திரம் பெற்ற தர்மஸ்தாபனங்கள்-நூல் விதி இல்லாமலும் கதர் விற்கலாம்-அத்தாக்ஷிப்பத்திரம் பெறாத வியாபாரிகள் இழைத்த தீமை. 92-98

x. **ஏஜன்ஸிகள்:-** விற்பனை ஏஜன்ஸிகள்-விதிகள்-வருங்காலத்தில்-கதாயி மண்டல்களுக்குத்தான் ஏஜன்ஸி கொடுக்கப்படும். 98-100

xi. **கதாயிமண்டல்கள்:-**1948ஷு ஸர்வோதய தீர்மானம் சங்கத்தின் புதிய வேலைத்திட்டம்-சமூக பொருளாதார சுதந்திரத்திற்கு கதர் பாடுபடவேண்டும்-கதர் பக்த சமாஜம்-கதாயி மண்டல்-சுயதேவை வேலையும்-கிராம

ஸ்வராஜ்யமும்-சாந்திசேனை - சமூகசேவை வேலைத் திட்டம். 100-104

xii மாகாண காரியாலயம்:—

தலைமைக்காரியாலயம்-டிரஸ்டிகள்-மாகாணக் காரிய தரிசியின் விசேஷ பொறுப்பு-முக்கியவேலை-தர்ம கர்த்தா-நூற்பவர், நெய்பவரின் வருமானம் - கதர் அன்பர்களுக்கு சேவை-சுயதேவை லக்ஷியம்-சர்க்கா மூலம் சத்தியம்—அஹிம்சா தத்துவப்படி பிரசாரம்-பட்ஜட்- ஜீவாதாரக்கூலி-கதரின் நியாயமான விலை-கிளைகளின் நிர்வாகம்-நிதியைப்பயன்படுத்தல்-தொண்டர்கள்-பரிசிலனை-புள்ளி—விபரம்—சுயதேவைப் பிரசாரம்—கண்காக்ஷி — பயிற்சி முகாம் — ஆடிட்டர்—காரியாலய சிக்கனமும் பண்பும்-தொண்டர்கள் முகாம் வட்டாரக்கூட்டம்-பிரசாரம்-சுயதேவை கண்காக்ஷி—சங்கத்திற்கு நூல்-நிதி சேர்ப்பது-வருஷம் 6 சிட்டம் கொடுக்கும் அங்கத்தினர் சேர்ப்பது-மாதம்குறைந்தது 7½ சிட்டம் நூற்கும்சுயதேவை நூற்போரை ரிஜிஸ்டர் செய்வது—முடிவுரை 104-127

# கதர் சேவையும் தத்துவமும்.

## I

### சர்க்கா சங்கத்தின் சரித்திரம்.

---

கதரியக்கம் தோன்றி சுமார் 30 வருஷம் ஆகிறது. அகில பாரத சர்க்கா சங்கம் சென்ற 25 வருட காலமாக வளர்ந்து வந்திருக்கிறது. இதற்கு எல்லா மாகாணங்களிலும் கிளைகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் பல உற்பத்தி விற்பனைக்கிளைகள் இருக்கின்றன. சுமார் 15000 கிராமங்களில் சங்கத்தின் வேலை பரவியிருந்தது. விற்பனை உற்பத்தி வஸ்திராலயங்கள் சுமார் 1000 இருந்தன. நூற்போர்கள், நெய்வோர்கள் சுமார் $3\frac{1}{2}$ லட்சம். இதில் வேலை செய்யும் தொண்டர்கள் சுமார் 3000. சமீப வருஷங்களில், வருஷத்திற்கு சுமார் 1 கோடி ரூபாய்க்கு அதிகமாக கதர் உற்பத்தி செய்தும், விநியோகித்தும் வந்தது. இதைத்தவிர இதன்கீழ் பல அத்தாட்சி பெற்ற ஸ்தாபனங்கள் வேலை செய்து வந்தன. தேசம் சுதந்திரமடைந்து, பாகிஸ்தான் பிரிந்தபிறகு கிழக்கு வங்காளம், மேற்கு பஞ்சாப், சிந்து மாகாணம், இவைகளில் நடந்த வேலை குறைந்து விடவே, மொத்தமாக கதர் வேலை குறைந்து விட்டது. இந்தியாவில் வேலை ஏறக்குறைய அதே அளவில் இருந்து வருகிறது.

இது ஒரு தர்ம ஸ்தாபனம். இதற்கு மூலதனம் காந்திஜி தேசத்தில் வசூல் செய்த நிதியாகும். முதலில் திலகர் ஸ்வராஜ்ய நிதியிலிருந்து பெரும்பாகம் கிடைத்தது. பிறகு தேசபந்து நிதியிலிருந்தும் கிடைத்தது. காந்திஜியின்

தரித்ர நாராயண சேவா யாத்திரையில் வசூல் செய்ததெல்லாம் சங்கத்திற்கு கொடுத்தார். இவைகள் எல்லாம் மூலதனமாக வைத்துதான் சங்கம் நடந்து வருகிறது.

இதை தர்மகர்த்தாக்கள் நிர்வகித்து வருகிறார்கள். தர்மகர்த்தா போர்டில் ஆரம்பமுதல் மகாத்மா காந்திஜி அக்ராசனராக இருந்தார். அவருக்குப்பின் தற்பொழுது ஸ்ரீ திரேந்திர மஜூம்தார் அக்ராசனராக இருந்து வருகிறார். இப்போர்டில் ஆயுள் டிரஸ்டிகள் 12 பேர். வருஷா வருஷம் 3 டிரஸ்டிகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இதுதான் ஸ்தாபனத்தின் சுருக்கமான சரித்திரம்.

## 2. சங்கத்தின் லட்சியங்கள்.

ஆரம்பத்தில் சங்கத்தின் லட்சியங்கள் கீழ்கண்டவாறு இருந்தன:—

1 தேசத்தில் அழிந்துபோன நூற்பு நெசவுத்தொழிலை உய்ப்பித்தல்.

2 கிராமத்தில் முக்கியமாக விவசாயிகளுக்கு வேலையில்லா நேரத்தில் உபதொழில் கொடுப்பது.

3 பஞ்ச காலத்தில் பஞ்ச நிவாரணமாக நூற்பை உபயோகிப்பது.

4 தேசத்திற்கு வேண்டிய ஆடையை கைராட்டையிலும் கைத்தறியிலும் தயார் செய்து தேசத்தின் ஐசுவரியத்தை வெளியில் போகாமல் பாதுகாப்பது.

மேலே சொன்னவைகளில் பொருளாதார அம்சங்கள் தான் இருக்கின்றன. ஆனால் முதலில் கதரியக்கம் ராஜீயப் போராட்டத்தின் முக்கிய அம்சமாக தோன்றியது. இதற்கு ராஜீயத்துடன் நெருங்கிய சம்பந்தம் இருந்த பொழுதிலும் பொருளாதார அம்சமே பின்னர் வற்புறுத் தப்பட்டு வந்தது. அதை நாம் தனியாக வேறு சந்தர்ப் பத்தில் விவரிக்கலாம்.

1935-ல் கதரியக்கத்தில் ஒரு முக்கியமான தத்து வத்தை மஹாத்மா வற்புறுத்தினர். அதுதான் ஜீவாதார சம்பளம் என்பது. இதில் பொருளாதாரம் மட்டுமல்ல மனிதனின் மதிப்பை உயர்த்தக்கூடிய தார்மீக தத்துவமும் அடங்கியிருக்கிறது. பொருளாதார சாஸ்திரத்திலேயே இதை ஒரு விதத்தில் கருத்துப் புரட்சி என்று சொல்ல லாம். இந்த தத்துவப்படி கதரியக்கம் திருத்தி அமைக்க வேண்டியிருந்தது. இது மிகவும் சிரமமாக இருந்தது. இருந்தபோதிலும் இதை லட்சியமாகக் கொண்டே சங் கத்தின் வேலையின் அமைப்பு ஓரளவு மாற்றப்பட்டது.

1945ல் மஹாத்மா சர்க்கா சங்கத்தின் இறுதி லட்சி யத்தை வற்புறுத்தினர். அதுதான் அஹிம்சையை அடிப் படையாகக் கொண்ட ஒரு சமுதாயம். அதன்படி சர்க்கா சத்தியத்திற்கும், அஹிம்சைக்கும் சின்னமாக விளங்கு கிறது. சர்க்கா சங்கத்தின்மூலம் 7 லக்ஷம் கிராமங்களி லும் எவ்வித சுரண்டலுமில்லாது கிராம ஸ்வராஜ்யம் ஏற் படவேண்டும். பரவல்முறை, சுயதேவைத்திட்டம், சம் பூர்ண கிராம சேவை இவைகள்மூலம் கிராம ஸ்வராஜ் யத்தை ஏற்படுத்துவது சர்க்கா சங்கத்தின்கடமையாகும்.

இவ்வாறு கதரியக்கத்தின் போக்கும் லட்சியங்களும் மஹாத்மாவின் உபதேசப்படி பல சமயங்களில் வெவ் வேறு விதத்தில் வற்புறுத்தப்பட்டுவந்தன.

## 3 சங்கத்தின் அமைப்பு.

இத்தகைய பொது ஸ்தாபனத்தில் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் வேலை செய்து வருகிறார்கள். லட்சக் கணக்கான ஜனங்களுடன் சம்பந்தம் இருந்துவருகிறது. ஏராளமான பொதுப்பணத்தை சங்கம் நிர்வகித்து வரு கிறது. நூற்றுக்கணக்கான கிளைகள் தேசம் பூராவும் பரவி யிருக்கின்றன. இவ்வளவு பெரிய ஸ்தாபனத்திற்கு குறிப் பிட்ட சட்ட திட்டங்கள் ஒன்றும் இல்லை. சம்பிரதாயங் களும் அவ்வப்பொழுது செய்யும் தீர்மானங்களும்தான் சங் கத்திற்கு ஆதாரம். நூற்றுக்கணக்கான தொண்டர்கள் சேவை செய்து விலகிவிட்டார்கள். நூற்றுக்கணக்கான வர் புதிதாக வந்து சேர்ந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் சர்க்கா சங்கத்தின் வியாபார ரீதியான கதர் உற்பத்தி-விற்பனை வேலையை இதைப்போன்ற இதர தர்ம ஸ்தாப னங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க் கிறோம். ஆகையால் பல தனிப்பட்ட ஸ்தாபனங்கள் வளரக்கூடும். அதன் கீழ் பல புதிய தொண்டர்கள் வேலை செய்ய முன் வருவார்கள். மாகாண சர்க்காரும், ஸ்தலஸ்தா பனங்களும், கிராம பஞ்சாயத்துகளும் கதர் வேலை செய்ய முன்வருவார்கள். அவர்களுடைய அதிகாரிகளும் கதர் வேலையைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஆதாரக்கல்வி இயக்கத்தினால் பள்ளிக்கூடங்களிலும் நூற் புக் கலையின்மூலம் கதர் வேலை தொடங்குகிறார்கள்.

கதாயி மண்டல்களும் ஸ்தல சுய தேவைக்கு கதர் உற்பத்தியும் விற்பனையும் செய்வார்கள். அவர்களும் வேலை முறையைப்பற்றி அறிந்துகொள்வது அவசியமாகிறது. அதனால் இவர்கள் எல்லோருக்கும் பயன்படக்கூடிய எளிதான புஸ்தகம் அவசியம். சர்க்கா சங்கம் இவ்வளவு வருஷங்களாக அடைந்த அனுபவத்தையும் ஸ்தாபனத்தின் வேலை முறையையும் கதர் தத்துவ விளக்கத்துடன் இச்சிறு புஸ்தகத்தில் விவரிக்கும். இச்சிறு நூல் ஆரம்ப நூலாகவே கருதவேண்டும். மேலே குறிப்பிட்ட விஷயங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி புத்தகமே அவசியமாகும் என்று கருதுகிறோம்.

## 4 மார்க சூசிகா.

ஆகிலபாரத சர்க்கா சங்கத்திற்கும், கதர் வேலைமுறைக்கும் ஒரு Guide அல்லது Manual மான்யூல் அவசியமாகும். இந்ததேவையை உணர்ந்து அகில பாரத சர்க்கா சங்க தலைமைக்காரியாலயம், 'மார்க சூசிகா' என்ற புஸ்தகத்தை 1943ல்வெளியிட்டார்கள். இப்புத்தகம் இரு பாகமாக வெளிவந்தது. முதல்பாகத்தில் பொதுவாக சர்க்கா சங்கத்தின் அமைப்பு, வேலை முறை, நிர்வாக ஏற்பாடு, பொதுவான விதிகள், சம்பிரதாயங்கள், முதலியவைகள் மட்டும் கூறப்பட்டன. இரண்டாவது பாகத்தில் ஒவ்வொரு மாகாணங்களின் பல இலாகாக்கள் வேலை செய்யும் முறைகளை விவரித்திருக்கிறது. ஆனால் இது மஹாராஷ்டிர சர்க்கா சங்கத்தில் நடக்கும் முறைகளையே அனுசரித்து எழுதப்பட்டிருக்கிறது. மற்ற மாகாணங்களின் முறைகளும் தனி அனுபவங்களும் இதில் சேர்ப்பதற்கு போதுமான அவகாசமில்லை. மேலும் மார்க சூசிகா இரண்டு பாகங்களும்

ஹிந்தியில் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டின் உப யோகத்திற்காக முதல் பாகத்தை மட்டும் தமிழில் மொழி பெயர்த்து முன்னமே பிரசுரித்துள்ளோம். இதன் பெயர் "அகில பாரத சர்க்கா சங்க வரலாறு" இதிலும் விவரங்கள் அதிகமாக இல்லை. இருந்தாலும் இதைப்படித்தவர்கள் சங்கத்தைப் பற்றி ஓரளவு தெரிந்துகொள்ளமுடியும்.

## 5. தமிழ் நாட்டின் வேலை முறை.

அகில இந்தியாவிலும் தமிழ் நாட்டில் பெரும் பாக மான கதர் வேலை நடந்திருக்கிறது என்பதை கதர் அன் பர்கள் அறிவார்கள். மற்ற மாகாணங்களை விட தமிழ் நாட்டில் கதர் வேலை மிக விரிவாக வளர்ந்துவிட்டது. இவ்வளர்ச்சிக்கு நிர்வாகஸ்தர்கள், ஊழியர்கள் முதலியவர் களுடைய தனித் திறமையும், கதர் அன்பர்களுடைய ஒத்து ழைப்பும் ஓரளவு காரணமென்று கூறலாம். தமிழ் நாட் டின் கதர்வேலையின் நிர்வாகத் திறமையை தலைமைக் காரி யாலயமும், இதர மாகாணங்களும் புகழ்ந்திருக்கிறார்கள். ஆகவே தமிழ் நாட்டின் ஸ்தாபனத்தின் அமைப்பு, வளர்ச்சி நிர்வாகம் இம்மூன்றையும் அனுசரித்தே மார்கசூசிகாவின் இரண்டாம் பாகம் தனியாக எழுதுவது அதிகமாக உப யோகப்படலாம். இந்த எண்ணத்துடன் தலைமைக் காரி யாலயத்தார் வெளியிட்ட மார்கசூசிகாவின் இரண்டாம் பாகத்தை மொழிபெயர்க்கவில்லை. இருந்தாலும் அதிலி ருந்து, மஹாராஷ்டிர சர்க்கா சங்கத்தின் முறையிலுள்ள நல்ல அம்சங்களையும் கருத்தில் கொண்டு இதை எழுதுகி றோம்.

## 6. கதரும் ஸர்வோதயமும்.

சமீப காலத்தில் முக்கியமாக 1945ற்கு பிறகு சங்கத்தில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளதை எல்லோரும் அறிவார்கள். காந்திஜி பிரிந்தபிறகு சர்க்கா சங்கத்தின் பொறுப்பு விசேஷ அளவில் அதிகரித்தது. 1948ல் மார்ச்சு மாதத்தில் சேவாகிராமத்தில் நடந்த மகாநாட்டில் ஸர்வோதய லக்ஷ்யம் உருப்பெற்றது. அந்த லக்ஷ்யத்தை அனுசரித்தே சர்க்கா சங்கத்தின் எதிர்கால வேலையை திருத்தி அமைக்கடிரஸ்டிகள் தீர்மானித்தார்கள். அந்த தீர்மானத்தின்படி சமூகத்தில், தேசத்தின் பொருளாதாரத் துறையிலும், சமூக வாழ்க்கையிலும் சமத்துவத்திற்காக பலாத்காரமற்ற அஹிம்சா புரட்சி ஏற்படுத்தவேண்டும். இந்தப்பணி நிர்மாண ஊழியர்கள் செய்யவேண்டியது. அதிலும் முக்கியமாக கதர் தொண்டர்கள் அதிக பங்கு எடுத்துக்கொள்ளவேண்டும். இக் கருத்துக்களையெல்லாம் நம்முன் வைத்துக்கொண்டு இனி கதர் வேலையை நடத்திவரவேண்டியிருக்கிறது. இதுவரையிலும் நடந்த வேலையில் தமிழ் நாட்டுத் தொண்டர்கள் ஓரளவில் விசேஷத்திறமையை காண்பித்திருக்கிறார்கள். அதைவிட பன்மடங்கு அதிகத் திறமையுடன் வேலைசெய்ய வேண்டியிருக்கிறது. நிர்வாகத்திறமை மட்டும் போதாது. நமது லக்ஷ்யத்தை அறிவுடன் ஏற்று சிரத்தையுடனும், அடக்கத்துடனும் பாடுபட்டு உழைத்தால் எதிர்கால வேலையிலும் தமிழ்நாடு முதல் ஸ்தானம் பெறுமென்பதில் சந்தேகமில்லை. இனி செய்யவேண்டிய வேலையை அனுசரித்தே இச்சிறு நூல் எழுதப்படுகிறது.

## 7 ஸ்தாபனத்தின் இலாகாக்கள்.

சர்க்கா சங்கத்தின் ஸ்தாபன அமைப்பில் கீழ்கண்ட இலாகாக்கள் முக்கியமானவை:—

1 உற்பத்தி வஸ்திராலயம்
  (அ) நூல் உற்பத்தி
  (ஆ) கதர் உற்பத்தி
2 விற்பனை வஸ்திராலயம்.
3 மத்திய வஸ்திராலயம்.
4 மாகாண காரியாலயம்.
5 அச்சு, சாய இலாகா.
6 நூற்புக்கருவி தொழிற்சாலை.
7 காதி வித்யாலயம்.
8 பிரசுராலயம்.
9 இதர இலாகாக்கள்.
10 அத்தாக்ஷிபெற்ற ஸ்தாபனம்.
11 ஏஜன்சிகள்.
12 கதாயிமண்டல்.

மேலே சொன்ன இலாகாக்களில் ஒவ்வொரு இடத்திலும் அனுசரிக்கப்படும் வேலைமுறை, தொண்டர்களின் கடமை முதலியவைகள் எல்லாம் பொதுவாக குறிப்பிடப்படும். சங்கத்தின் லட்சியத்திற்கு அனுகூலமாகவும், பொருத்தமாகவும், நமது வேலைமுறை அமைவது அவசியமாகும். தத்துவங்களும் அவசியமான இடங்களில் ஆங்காங்கு சிறிது விரிவாக விளக்கப்படும்.

# II

## சங்கத்தின் இலாக்காக்கள்.

### 1 உற்பத்தி வஸ்திராலயம்.

முதலாவதாக உற்பத்தி வஸ்திராலயத்தை எடுத்துக் கொள்வோம். உற்பத்தியில் இரண்டு பாகங்கள் உண்டு. 1 நூல் உற்பத்தி. 2 கதர் உற்பத்தி.

கதர் வளர்ச்சியில் பெரும்பான்மையாக நூற்பது ஒரு இடத்திலும், பெரும்பான்மையாக நெய்வது வேறு இடத்திலும் இருந்து வருகிறது. இது ஒரு குறையே. இதன் காரணத்தை இங்கு ஆராய அவசியமில்லை. ஆனால் இந்தக்குறை எதிர்காலத்தில் நீங்கவேண்டும். இருந்தாலும் இப்பொழுது ஸ்தலத்தின் நிலைமைக்கு தகுந்தபடி வேலை அமைந்து வளர்ந்திருப்பதால் அதை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இதே நிலைமை எல்லா மகாணங்களிலும் ஓரளவு இருக்கிறது. தமிழ் நாட்டிலும், பல மாகாணங்களைப்போல சில கிளைகள் நூல் உற்பத்திக் கிளைகளாக மட்டுமே இருந்துவருகின்றன. சில கிளைகள் நெசவு வசதியின் காரணத்தினால் நெசவுக்கிளைகளாகவே வளர்ந்து விட்டன.

பொதுவாக நூல் உற்பத்தி, நெசவு, கிளைகளின் நிர்வாகத்தைப்பார்க்கலாம். எந்த உற்பத்தி வஸ்திராலயத்திலும் புத்தகங்களும் ரஜிஸ்டர்களும் கீழ்கண்டவை அவசிய மாகும்.

1. நூல் கொள்முதல் குறிப்பு.
2. நூற்போர் பேரேடு.
3. கதர் உற்பத்தி குறிப்பு (எடையேடு.)
4. தினசரிக்குறிப்பு.
5. பொதுப்பேரேடு.
6. தறிகாரர் பேரேடு.
7. ஸ்டாக் புஸ்தகம்
8. ஐந்தொகை, கதரறிக்கை ரிஜிஸ்டர்.

நூல் கொள்முதல் குறிப்பில் கீழ்கண்ட முக்கிய விவரங்கள் இருக்கும்:-(1) தேதி, (2) நூற்போர் நெம்பர். (3) பெயர். (4) பேரேட்டு நெம்பர். (5) கொள்முதல் செய்த சிட்டம் எண். (6) நெம்பர் & பலம். (7) டெபாசிட் (கதருக்காக) (8) பஞ்சு விற்பனை (9) பாக்கி ரொக்கம் கொடுத்தது.

நூல் கொள்முதல் செய்வதற்கு முன்னால், நூல் நெம்பர், பலம், எடை, எல்லாம் சரி பார்க்க வேண்டும். நூற்போர் பாஸ் புஸ்தகத்தில் முதலில் பதிய வேண்டும். பிறகு நூலை வாங்கி பஞ்சை கொடுத்து பாக்கி ரொக்கம் கொடுக்க வேண்டும். ரொக்கம் கொடுப்பதற்கு முன்னால் நூற்பவர் பாஸ் புஸ்தகத்திலிருப்பதை நூற்போர் பேரேட்டில் பதிய வேண்டும். நூற்பவருக்கு போதுமான டெபாசிட் இருந்தால் கதர் கொடுக்க வேண்டும்.

கதர் உற்பத்தி குறிப்பில் அதைப்போல் கீழ்கண்ட விவரங்கள் காணப்படும்.

1. தேதி.
2. தறிகாரர் நெ.
3. பெயர்.
4. நெசவான ரகம்.
5. அளவு.
6. கெஜம்.
7. எடை.
8. செலவான நூல்.
9. நெசவு கூலி.
10. டெபாசிட் வரவு.
11. பாக்கி பெற்றுக்கொண்ட தொகை.

பொதுவாக தறிகாரரிடத்தில் நிரந்தரமான நூல் அட்வான்சுக்கு போதுமான ரொக்க டெபாசிட் இருக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் நெசவான துணி அளவிற்கு மட்டும் நூல் கொடுக்கவேண்டும். அப்படியானல் நூல் டெபாசிட் எப்பொழுதும் ஒரே அளவில் இருக்கும். புதிதாக அதிக நூல் கொடுத்தால் தனி கையெழுத்து புஸ்தகத்தில் கையொப்பம் வாங்கிக்கொள்ள வேண்டும். சில சமயம் தறிகாரர் நெய்த கதருக்கு நூல் வாங்கிக்கொள்ளாமல் போகலாம். அந்த சமயத்தில் கணக்கில் வரவு வைக்கவேண்டும். முதலில் நெசவுசெய்து வந்த ரகம், அகலம், நீளம், நெசவுதரம் முதலியவை எல்லாவற்றையும் நன்ருக பரிசீலனை செய்யவேண்டும். தறிகாரர் பாஸ் புத்தகத்தில் எழுதி கதர் உற்பத்தி குறிப்பில் பதிந்துகொண்டு பாக்கி கொடுக்கவேண்டிய ரொக்கத்தையும், நூலையும் தறிகாரருக்கு கொடுக்கவேண்டும். எல்லா வேலையும் துரிதமாக பார்ப்பதற்காக ஒவ்வொரு வேலையும் குறிப்பிட்ட ஒரு தொண்டரின் பொறுப்பாகும்.

மாலையில் நூல் கொள்முதல் குறிப்பில் ஒவ்வொரு கலத்தையும் கூட்டிப்போடவேண்டும். முதலில் பென்சிலால் கூட்டவேண்டும். அவைகளின் கூட்டுத் தொகையை குறிப்பில் எழுதவேண்டும். ரொக்கத்தை சரிபார்த்து, சரியான பிறகுதான் கூட்டுத் தொகைகளை மையால் எழுதவேண்டும். ரொக்கம் சரியாகாமலிருந்தால் குறிப்புக்கூட்டுத்தொகை மறுபடியும் சரிபார்க்கவேண்டும். இதே மாதிரிதான் நெசவு எடையேட்டையும் குறிப்பில் எழுதி சரிபார்த்துக் கொள்ளவேண்டும். பிறகு அன்றைக்கு செலவான பஞ்சு, கொள்முதல் செய்த நூல்,

வந்த கதர், இவைகளெல்லாம் தனித்தனியாக கணக்கிட்டு சம்பந்தப்பட்ட ஸ்டாக் புஸ்தகத்திலோ, குறிப்பிலோ பதிய வேண்டும். ஸ்டாக் புஸ்தக இருப்பையும் அன்றன்றைக்கு கையிருப்பையும் எண்ணி ஒத்துப்பார்க்கவேண்டும்.

தவறுதல் ஏற்படாமலிருப்பதற்கு சில அவசியமான முறைகளை அனுஷ்டிப்பது அவசியம். நூற்போருக்கு பஞ்சு போடும் இடம் தனியாகவும், நூல் வாங்குமிடம் தனியாகவும், ரொக்கம் கொடுக்குமிடம் தனியாகவுமிருக்க வேண்டும். அன்றாட ஸ்டாக்கும், பஞ்சு மலகின் எடையும் அன்று வேலை ஆரம்பிப்பதற்கு முன்பு குறித்துக் கொள்ள வேண்டும். மாலையில் செலவான பஞ்சின் எடை கழித்து பாக்கி சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

நூல் சம்பந்தமாக, நூற்பவரிடமிருந்து வாங்கிய நூல் மற்ற ஸ்டாக்குடன் கலக்காமல் தனியாக எண்ண வேண்டும். கொள்முதல் குறிப்பின்படி கூட்டுத் தொகை யுடன் சரிபார்த்துத் தான் மற்ற ஸ்டாக்குடன் கலக்க வேண்டும். இதில் ஏதாவது தவறுதலிருந்தால் கூட்டுத் தொகை மீண்டும் பார்க்க வேண்டும். சில தவறுதல்கள் ஞாபகத்திலேயே சீக்கிரம் கண்டுபிடிக்க முடியும். கண்டு பிடிக்கமுடியாத வித்யாசத்தை குறிப்பில் குறித்து வைத்துக் கொண்டு மீண்டும் மறுநாள் காலையில் தெளிவாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதேபோல்தான் தறிகாரரிடமிருந்து வாங்கிய கதரை ரகவாரியாக மாலையில் ஸ்டாக் எடுத்து சரி பார்க்க ேண்டும். கதர் உற்பத்தி குறிப்புப்படி ஒவ்வொரு ரகவாரியாக அதன் கூட்டுத்தொகையுடன் சரிபார்க்க வேண்டும். சரியான பிறகு தான் புது ஸ்டாக்குடன் கலப்பது நலம்.

நூல் கிளையில் உற்பத்தியாகும் நூலை ஒன்று அவ்விடமே நெய்யலாம், அல்லது நெய்யும் கிளைக்கு அனுப்ப வேண்டும். நெய்யும் கிளைக்கும், நூற்கும் கிளைக்கும் தொடர்பு இல்லாமலிருக்கலாம். அந்த சமயத்தில் அந்த இடங்களில் மத்ய வஸ்திராலயம் மூலம் நூலை அனுப்ப வேண்டும். வெளியில் அனுப்பும்பொழுது கீழ்கண்ட முறைகள் அவசியமாகும். 1. எடைவாரியாக நூலைப் பிரிப்பது (நியம ரகம், மத்திய ரகம், மெல்லிய ரகம் என்று குறைந்த பட்சம் மூன்று ரகமாக பிரிக்கவேண்டும்). நியமரகமென்பதுசுமார் 12 நெம்பரிலிருந்து 16 வரையிலும், மத்திய ரகம் 17 நெம்பரிலிருந்து 20 நெம்பர் வரையிலும், மெல்லிய ரகமென்பது அதற்கு மேற்பட்டதாகும். 2. பிரித்த நூலை ஐந்து சிட்டங்களாகவோ அல்லது பத்து சிட்டங்களாகவோ கழி அல்லது பந்தாக போடவேண்டும் 3. அவைகளை எண்ணி தனித்தனி சாக்கிலோ மலகிலோ போடவேண்டும். ஒவ்வொரு சாக்கிலும் மலகிலும் ஒவ்வொரு சீட்டு போடவேண்டும். அந்த சீட்டில், எந்த ரகம், எவ்வளவு சிட்டம், யார் எண்ணியது, யார் சரிபார்த்தது, யார் தைத்தது, மலகு நிரப்பிய தேதி முதலிய விபரங்கள் அவசியம். அதில் சம்பந்தப்பட்டவருடைய கையெழுத்தும் இருக்கவேண்டும். சாக்கின் தையலின் மேல் சாயம் போடவேண்டும். சாயம் பூசினால் வழியில் யாராவது பிரித்தால் கண்டுபிடிக்கலாம். விலாசம் சரியாக இருக்கவேண்டும். நூல் வெளியில் அனுப்பும் பொழுது பில் அல்லது இன்வாய்ஸ் போடவேண்டும். பில் அல்லது இன்வாய்ஸ் இல்லாமல் ஒரு சாமானையும் வஸ்திராலயத்தை விட்டு அப்புறப்படுத்தக்கூடாது.

வெளியே நூல் அனுப்பாவிட்டாலும் நெய்யாத கிளை கள் நூலை அனுப்புவதற்கு தயாராக மேலே சொன்னபடி வைத்திருக்கவேண்டும்.

நெசவு செய்யும் வஸ்திராலயங்களில் நூலை ஒவ்வொரு ரகத்திற்கும் தகுந்தபடி பிரித்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு சிட்டத்தையும் எடைபோட்டு ஒவ்வொரு ரகத் தையும் தனித்தனியாக வைத்துக்கொள்ளவேண்டும். கோட்டிங், துப்பட்டிகள், துண்டுகள் முதலியவைகளுக்கு மோட்டா நூல் இருந்தால் போதும். வேஷ்டி, சட்டை இவைகளுக்கு நல்ல நூல் வேண்டும். புடவை மெல்லிய தாகவும் சிறிது நெசவு வலவலப்பாகவும் இருந்தால் பாதக மில்லை. அதற்கு தகுந்தாற்போல் நூல் கொடுக்க வேண்டும். இம்மாதிரி ரகவாரியான நூலிருந்தால் நெசவின் தேவைக்கு தாமதமில்லாமல் கொடுப்பது சுலப மாக இருக்கும். நெசவுக் கிளையில் ஒவ்வொரு ரக நூலையும் பலகில் வைத்துக்கொள்ள அவசியமில்லை. மாத்திரைல் சிறு திரைகள் வைத்து சிறு அறைகளாக்கி நூலைத்தனி தனியே வைத்துக்கொள்ளலாம். எங்கேயும் தறிகாரர் நூல் இருக்கு மிடத்தில் வர விடக்கூடாது. துணி நோட்டம் பார்க்கு மிடம் தனி; நெய்த ரகத்தை வாங்குமிடம் தனி; நூல் கொடுக்குமிடம் தனி; பணம் கொடுக்குமிடம் தனி; இப்படியெல்லாம் தனித்தனியாக வேலை செய்தால் கூட்டம் இருக்காது. குழப்பமும், தாமதமும் இருக்காது. ஸ்டாக்கிலோ ரொக்கத்திலோ வித்தியாச மிருக்க நியாயமில்லை. எல்லாம் சுறுசுறுப்பாகவும் நன்ருக வும் நடக்கும்.

நூல் உற்பத்தி வஸ்திராலயத்தில் பஞ்சும், ரொக்கமும் தேவையாக இருக்கும். எவ்வளவு பஞ்சு வேண்டும், எவ்வளவு ரொக்கம் வேண்டும் என்பதை முன்கூட்டியே கணக்கிட்டு தலைமைக்காரியாலயத்திலிருந்து வாங்கிவைக்க வேண்டும். கையில் நூல் சேர்ந்தவுடன் நெய்யுமிடத்திற்கு தாமதமில்லாமல் உடனுக்குடனே அனுப்ப வேண்டும். வண்டி வாடகைச்செலவு அனாவசியமாக ஏற்படக்கூடாது. ஒரு வண்டி பாரத்திற்காவது நூல் சேரவேண்டும். நூல் போகிற வண்டியிலேயே எப்பொழுதும் பஞ்சு கொண்டுவரவேண்டும்.

நெசவு வஸ்திராலயத்தின் தேவை நூலும், ரொக்கமும் தகுந்த ரகத்தில் வேண்டிய அளவு நூல் முன்னாலேயே சேகரித்து வைத்துக்கொண்டால் நெசவாளர்களுக்கு கஷ்டமிராது. உற்பத்தியும் பாதிக்காமல் நடைபெறும். ஆகையால் முன்கூட்டியே இவை இரண்டையும் சேர்த்து வைத்துக்கொள்வது நிர்வாகியின் கடமை. நெசவு வஸ்திராலயத்தில் சலவைக்காக வண்ணார் இருக்கலாம். வண்ணாரிடம் உடனுக்குடன் போட்டு தாமதமில்லாமல் சலவை செய்யலாம். கோராவை, சலவை செய்வதற்கு மாகாண காரியாலயம் குறிப்பிடுமிடத்திற்கு தாமதமில்லாமல் அனுப்பவேண்டும். கதர் வண்டியிலேயே நூல் மலகும் வந்தால் வாடகைச் செலவு சிக்கனமாகும்.

நெய்த கதர் உடனுக்குடன் போகாவிட்டால் விற்பனை வஸ்திராலயத்திற்கு சமயத்தில் கிடைக்காது. விற்பனை பாதிக்கும். மறுபடியும் நூற்பதற்கும் நெய்வதற்கும் கொடுப்பதற்கு மாகாண காரியாலயத்திற்கு பணம்சேராது. ஆதலால் நூற்போரும் நெய்வோரும் கஷ்டப்படுவார்கள்.

சிறு தாமதத்தால் எவ்வளவு பேருக்கு ஏமாற்றம் ஏற்படு கிறது! எவ்வளவு வேலை தடைபடுகிறது என்பதை சிந்தித்து ஊழியர்கள் ஒரு துடிதுடிப்புடன் வேலை செய்யாவிட்டால் கதர் வேலையில் ஒரு ஹிம்சை ஏற்படும். இந்த ஹிம்சையை தடுத்து நாம் வேலை செய்தால்தான் அஹிம்சைக்கு முதல்படியில் போகமுடியும். தொண்டர்களின் திறமையினல்தான் நூற்போர், நெய்வோர், கதருடுத்துவோர் எல்லோருக்கும் திருப்திகரமாக சேவை செய்யமுடியும். திறமை என்பது கணக்கெழுதுவதுமட்டுமல்ல. சங்கத்தின் விதிகள் எப்பொழுதும் ஞாபகம் இருக்கவேண்டும். பின்னர் செய்யவேண்டியது மனதிற்கு முன்னல் இருக்கவேண்டும். வேலை நேரத்தில் துரிதமாக வேலை செய்யவேண்டும். அப்பொழுதுதான் பொறுப்புணர்ச்சியும், எதிர்கால மனேபாவமும் இருக்கும். காலத்தை நழுவ விடாமல் எவ்வளவு வேகமாக வேலை செய்கிறேமோ அவ்வளவு சேவா சக்தி நம்மிடத்தில் உயரும். அவ்வளவுக்கு சங்கத்தின் பெயரும், கீர்த்தியும்உயரும். அவ்வளவுக்கு கதர் அன்பர்களுக்கு சங்கத்திடமுள்ள நம்பிக்கை உயரும். அதனல் உழைப்பாளிகள், கதரன்பர்கள் எல்லோரையும் நாம் புதிய லக்ஷியத்திற்கு அழைத்தால் அவர்கள் மனமுவந்து வருவார்கள். சங்கத்தின் இறுதி லக்ஷ்யத்தை அடைவதற்கு, நம்முடைய தினப்படி வேலையின் திறமை எவ்வளவு அவசியம் என்பதை இதனல் உணரக் கூடும். மேலே சொன்னதற்கு ஒவ்வொன்றிற்கும் மாருக நடந்தால் சங்கத்தின் எதிர்கால வேலை கெட்டுப்போகும். தொண்டர்களின் கடமை பற்றி வேறு இடத்தில் இன்னும்

விஸ்தாரமாக கூறப்படும். இருந்தாலும் இந்த சமயத்தில் இவ்வளவு சொல்லவேண்டியது அவசியமும், பொருத்தமும் ஆகும்.

## (2) உற்பத்தி ஸ்தலங்களில் சுயதேவை.

கதரியக்கத்தின் ஆரம்பத்தில் கிராமவாசிகளின் ஜீவனத்திற்கு உதவியாகவே கதர் உற்பத்தி செய்யப்பட்டது. ஏழை குடியானவர்களுக்கு நூற்பது உபஜீவனமாக இருந்தது. பட்டினி கிடப்பவர்களுக்கு சொற்ப ஆகாரமாவது நூற்பதன் மூலமாக கிடைத்தது. அவர்களுடைய வறுமையை வர்ணித்து நகரத்திலுள்ள கதரன்பர்களின் தயவைப் பெற்று கதர் உற்பத்தி நடந்துவந்தது. இதனல் கிராமத்தில் கதர் உற்பத்திக்கு காரணமான நூற்பவர்கள் என்ன துணி உடுத்தி வந்தார்கள் என்பதை கூட நாம் கவனிக்கவில்லை. அவர்கள் மில்துணி உடுத்திக்கொண்டு கதரன்பர்களுக்காக பாடுபட்டு நூற்று வந்தார்கள். அதன்மூலம் ஏதோ கொஞ்சம் வாழ்க்கைக்கு உதவியாயிருந்தது உண்மைதான். ஆனல் அவர்கள் நூற்ற நூல் அவர்களுக்கு உபயோகப்படாமல் நாம் அதைக்கொண்டு கதர் தயாரித்து நகரவாசிகளுக்கே விற்ருேம். நூற்பவர்களுடைய நூல் அவர்களுக்கு கிடைக்காமல் அவர்கள் மில்துணியை வாங்கி உடுத்தி வந்தார்கள். மில்நூல் துணி வியாபாரிகளின் தயவில்லாமல் அவர்கள் தங்கள் மானத்தை காப்பாற்றிக் கொள்ள முடியாது. அதனல் தங்கள் மானத்திற்கு அவசியமான துணிக்கு ஒருவிதத்தில் அவர்கள் அடிமையாகிவிட்டார்கள். இதுவே பொருளாதார அடிமைத்தனத்திற்கு நல்ல உதா-

ரணமாகும். பிரிட்டிஷ்காரர் இந்தியாவிலிருந்து பஞ்சை எடுத்துக்கொண்டுபோய் துணி தயார் செய்து நமக்கே விற்றுவந்தார்கள். நம்முடைய மானத்திற்கே பிரிட்டிஷாரை நம்பி பொருளாதார அடிமையில் அகப்பட்டு விட்டோம். அதேமாதிரிதான் இப்பொழுது நூற்பவர்களின் கதி. நம்மை அறியாமலேயேகதர் வேலையில் இந்த தவருன நிலைமை எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

இதை திருத்தவேண்டுமென்று 1934 முதலே மஹாத்மா பிரயத்னம் செய்தார். 1935ல் ஜீவாதாரக் கூலி பிரச்னை ஏற்பட்டபொழுது, நூற்பவர்களுக்கு தேவையான கதர் அளவுக்கு நூல்நூற்ற பிறகுதான்,பாக்கியுள்ளதை சர்க்கா சங்கம் வாங்கவேண்டுமென்ற நிபந்தனை ஏற்பட்டது. ஜீவாதாரக் கூலி தத்துவப்படி நூற்பவருக்கு வருடத்திற்கு குறைந்தது 20 கஜம் கதர் கிடைக்கவேண்டும். அதுபோக அதிகமாக நூற்றதற்கு ஜீவாதாரக் கூலி கொடுத்து நூல் வாங்கவேண்டும். 1935ல் ஏற்பட்ட மாறுதலின்படி சங்கத்திற்கு இது ஒரு முக்கிய வேலையாகும். நூற்போர்களின் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் கதரை வாங்கி விநியோகிப்பது சர்க்கா சங்கத்தின் வேலை.

மேற்கண்ட திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர எல்லா உற்பத்தி கிளைகளும் பாடுபடவேண்டும். ஜீவனத்திற்காக நூற்பவர்களின் பெயர், ஊர், தோட்டம், காடு, வருமானம், குடும்பத்திலுள்ளவர்கள், வருடத்திற்கு தேவையான கதர், நூற்பது எவ்வளவு, உபரியாக நூற்பது எவ்வளவு என்ற விபரங்கள் எல்லாம் வஸ்திராலயத்தின்

ரிஜிஸ்டரில் இருக்கவேண்டும். இந்த விபரங்கள் எல்லாம் இருந்தால்தான் ஒவ்வொரு நூற்பவரின் குடும்பத்திற்கும் போதுமான கதர் கிடைக்கும்படி செய்யக்கூடும். தேவை அளவுக்கு நூற்க ஒரு வீட்டில் ராட்டை இல்லாவிட்டால் ராட்டை கொடுக்கவேண்டும். தேவைக்குமேல் அதிகம் உற்பத்தியானால் அதைமட்டும் வஸ்திராலயத்தில் வாங்கிக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு வஸ்திராலயத்திலும் கீழ்கண்ட விபரங்கள் எப்பொழுதும் தயாராக வைத்திருக்க வேண்டும். 1. நூற்பவர்களின் கிராமம் 2. ஒவ்வொரு கிராமத்திலும் நூற்பவர்களின் எண் 3. குடும்பத்திலுள்ளவர்களின் எண் 4. அவர்களுக்கு தேவையான கதர் 5. செலவான கதர் 6. தேவைக்குப் போக பாக்கி உற்பத்தி.

ஒவ்வொரு நூற்போருக்கும் நூற்போர் பேரேட்டில் ஒவ்வொரு பக்கம் இருக்கவேண்டும். பேரேட்டிலும் பாஸ் புஸ்தகத்திலும் சுயதேவைத்திட்டம் பூர்த்தி செய்ய வேண்டிய எல்லா விபரங்களும் இருக்கவேண்டும்.

இதற்குமுன்னால் 1925ல் நூற்போர் பேரேடு வைக்கும் வழக்கம் இருந்தது. ஊர், பெயர், விலாசம் எல்லாம் பேரேட்டில் பதிந்துகொள்வது வழக்கம். ஆனால் அப்பொழுது நூற்போருக்கு பஞ்சு போட்டு அதே பஞ்சில் நூற்ற நூலை வாங்கி வந்தோம். ஆனால் கொடுக்கப்பட்ட பஞ்சு சரியாக நூற்று வந்ததா என்ற கணக்கு முறைக்காக அப்பொழுது நூற்போர் பேரேடு வைக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்திலிருந்தே வியாபாரிகளின் போட்டி அதிகம். சங்கத்திலிருந்து பஞ்சை வாங்கி, நூல்

நூற்று மற்ற வியாபாரிகளுக்கு நூற்போர்கள் விற்று விடுவார்கள். இதை தடுப்பதற்காகத்தான் பேரேட்டு முறை வைக்கப்பட்டது. இப்பொழுதோ இந்த முறையின் நோக்கம் என்னவென்றால் ஒவ்வொரு குடும்பமும் சுயதேவைப் பூர்த்தி அடைந்து விட்டதா என்பதை அறிவதேயாகும்.

முன்னிருந்த முறையில் நூற்பதன்மூலம் எவ்வளவு கூலி கிடைத்தது என்பதை பார்க்க முடிந்தது. இப்பொழுதோ ஒவ்வொரு நூற்பவருக்கும் போதுமான கதர் கிடைத்துவிட்டதா என்பதை அறியவே பேரேடு உபயோகிக்கப்படவேண்டும்.

நூற்போர்களின் சுயதேவைப் பூர்த்தியை இரண்டு முறையில் செய்யலாம். 1. நூற்போர் கொடுத்த நூலைத் தனியாக வாங்கி நெய்து கொடுப்பது. 2. நூற்கும் நூலில் ஒரு பாகத்தை சுய தேவைக்காக டெபாசிட்டாக வைத்துக்கொண்டு பாக்கி நூற்பதற்கு பஞ்சும், சிலவிற்கு பணமும் கொடுப்பது. நுற்பவர்கள் பெரும்பான்மையோர் ஏழைகள். ஆதலால் முதலில் சொன்ன முறையில் நூற்கும் நூலை சேர்த்துவைத்து தனியாக நெய்வது சுலபமல்ல. அம்மாதிரி செய்ய பொருளாதார வசதியுள்ளோர் மிக சிலரே. இரண்டாம் முறைதான் பொதுவாக நடைமுறையில் இருக்கிறது.

ஒவ்வொருவரும் கதருக்காக டெபாசிட் செய்யும் நூலை தனித்தனியாக வைத்து ஒரு பாவுக்கு சேர்ந்தவுடன் நெய்து கொடுப்பது அசாத்யம். ஏனென்றால்

நூற்போர்கள் ஆயிரக்கணக்காக இருக்கிறார்கள். ஒவ்வொருவருடைய நூலையும் வாரத்திற்கு 2, 3, 4, 5 சிட்டம் விதம் வாங்கி தனித்தனியாக 50 சிட்டங்கள் சேரும் வரை சேர்ப்பது சாத்தியமாகாது. அதற்காக மொத்தமாக நூல் டெபாசிட் என்று வரவு வைக்கப் படுகிறது. போதுமான நூல் சேர்ந்தவுடன் புடவையோ வேஷ்டியோ நூற்பவருக்கு தேவையான கதர் கொடுக்கப் படுகிறது. கதர் புடவையின் விலை நூலிலேயே தெரிய வேண்டுமென்ற எண்ணத்தோடு சில வருடம் முன்னால் நூல் சிட்டத்திலேயே தனியாக கணக்கு வைக்கப்பட்டது. ஆனால் அதில் நடைமுறையில் பல கஷ்டங்களும் குழப் பங்களும் ஏற்பட்டது. அதனால் நூல் சிட்டம், அதன் கிரையம் இரண்டும் நூற்போர் பேரேட்டில் பதியப்பட வேண்டும். நூற்பவருக்கு கதர் கொடுக்கும்பொழுது சாதாரண விற்பனை விலைபோட்டு அதில் ரூபாய்க்கு இரண்டணா கமிஷன் தள்ளி கொடுக்கவேண்டும். சாதாரண மாக நிர்வாக செலவிற்காக இரண்டணா அடக்கத்துடன் சேர்க்கிறோம். உற்பத்தி செய்யும் கிளையிலேயே சுய தேவைக்காக கொடுக்கும் பொழுது நிர்வாகச் செலவை வஜா செய்துவிட வேண்டும். அப்பொழுது சுயதேவைக் கதரின் மலிவு நூற்போருக்குத் தெரியும். தங்களுடைய நூலை தனியாக சேகரித்து வைத்து நெய்து கொண்டால் என்ன செலவாகுமோ அந்த அளவிற்கு மலிவாகக் கிடைப் பதை நூற்போர்கள் உணர்வார்கள்.

சுயதேவை தத்துவத்தில் பண்டமாற்றுதல் முறையும் அடங்கியிருக்கிறது. கதருக்கு ரூபாய் இல்லாமல் நூல் கொடுத்தால் எந்த கதரும் கிடைக்கும் என்ற எண்ணம்

அவசியமாகும். ஆடைக்கு செலவாகும் நூலை விட நெசவு, சலவை, சாயம், அச்சு முதலியவைகளுக்கெல்லாம் பணம் இல்லாமல் நூல் கொடுத்தால் போதும். அப்பொழுது ஒரு கதர் உருப்படியின் விலை நூல் சிட்டத்தில் எவ்வளவு என்று சொல்ல வேண்டும். அப்பொழுது நூற்போர்களை இன்னும் அதிகமாக நூற்பதற்கு தூண்டும். அவர்களுக்கு கதர் உருப்படியின் ரூபாய் மதிப்பையே மறந்து பண்டமாற்றுதல் முறை வழக்கத்தில் கொண்டு வர உதவியாக இருக்கும். ஆதலால் ஒவ்வொரு உருப்படியின் மேல் விலை போடும் பொழுதும், ரூபாய் மதிப்பு சிறிதாகவும், சிட்டத்தில் விலை பெரியதாகவும் போட வேண்டும்.

மேற்சொன்னவைகளிலிருந்து நமது உற்பத்தி வஸ்திராலயங்களில் சுயதேவைதான் முக்கிய லக்ஷியமாக இருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. இந்த லக்ஷியம் நிறைவேற வஸ்திராலயத்தின் வேலைமுறை, ஒழுக்கம் எல்லாம் மாறவேண்டும்.

## (3) சம்பூர்ண கிராம ஸேவை.

சமீபகாலத்தில், 1945-ற்கு பிறகு சமக்ர கிராம சேவை அல்லது சம்பூரண கிராமசேவை என்ற லக்ஷ்யத்தை மஹாத்மா வற்புறுத்தி வந்திருக்கிறார். கதர் வேலையின் லக்ஷ்யம் முதலில் ஏழைகளின் உபஜீவனமாக இருந்தது. பிறகு ஜீவாதாரத்தத்துவமும் சுயதேவைப் பூர்த்தியும் வற்புறுத்தப்பட்டது. இப்பொழுது சமக்ர கிராம சேவை. 1948-ற்கு பிறகு கிராம ராஜ்யம், சர்

வோதயம் முதலிய லக்ஷ்யத்திற்கெல்லாம் சர்க்கா சங்கம் பாடு பட வேண்டும் என்று ஏற்பாடாகியுள்ளது. இதை எல்லாவற்றையும் இங்கு விவரிக்க இடமிராது. தத்துவங்களைப்பற்றி வேறு தனியாக புஸ்தகம் எழுத வேண்டும். இருந்தாலும் சமக்ர கிராம சேவையை பற்றி மட்டும் சில முக்கியமான விஷயங்களை அறிந்து கொள்வது அவசியமாகும். சர்க்கா சங்கம் வேலை செய்து வரும் கிராமங்களில் கிராம ராஜ்யத்தை அடைய வேண்டிய எல்லா முறையிலும் ஜனசக்தியை எழுப்ப வேண்டும். சுயதேவை தத்துவத்திற்கு அடிப்படையான தன்னம்பிக்கை, தன்முயற்சி, சுகாதாரம், முதியோர் கல்வி, ஹரிஜன முன்னேற்றம், சமூகத்தில் சமத்துவ உணர்ச்சி உண்டாக்குவது, தெய்வ பக்தி, ஸ்திரீகளின் முன்னேற்றம், உண்மையாகவும் அன்புடனும் நடந்துகொள்வது இவைகள் எல்லாம் சமக்ர கிராம சேவையில் அடங்கியிருக்கிறது. ஆதலால் சர்க்கா சங்கம் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் நூற்போர்கள், அவர்களுடைய கிராமங்களிலெல்லாம் சம்பூர்ண கிராமசேவை செய்ய முயற்சிக்க வேண்டும். இதற்காக நாம் சங்கத்திலிருந்து பணம் செலவழிக்க முடியாது. செலவு செய்ய முடிந்தாலும் அப்படி செய்வது தவருகும். ஏனென்றல் ஜனங்களுடைய தன்னம்பிக்கையும் முயற்சியும் வளர்வதற்கு பதிலாக சங்கத்தை நம்பி வாழும் வழக்கம் வளர்ந்து விடும். இதனல் தன் முயற்சியுடன் ஜனசக்தியை எழுப்பும் நம் நோக்கம் நிறை வேறுவதற்கு பாதகமேற்படும்.

மேலே சொன்னவைகள் எல்லாவற்றையும் கருத்தில் வைத்துக்கொண்டு நமது தினப்படி வேலை எப்படியிருக்க

வேண்டுமென்று ஆராய்வோம். இது வரையில் நாம் வியாபார முறையில் உற்பத்தி செய்து கூலி கொடுத்து வந்ததை நிறுத்த வேண்டும். சுய தேவை என்ற எண்ணம் நம் கருத்திலிருக்க வேண்டும். 1. சொந்த பஞ்சில் நூற்போர்கள் கூடுமான வரையில் தங்கள் நூல் பூராவிற்குமே கதர் எடுத்துக்கொள்ளும்படி செய்ய வேண்டும். 2. கதருக்காக பஞ்சு விலைக்கு வாங்கி நூற்போர், பஞ்சு போக பாக்கிக்கு கதர் எடுத்துக்கொள்ளும்படி தூண்ட வேண்டும். 3. நூற்காதவர்களுக்கு நூற்க பயிற்சியும் ஆசையும் உண்டாக்க வேண்டும். அவர்களுக்கு ராட்டை முதலிய கருவிகள் கிடைக்கும்படி செய்ய வேண்டும். 4. ஸ்தலத்தில் உற்பத்தியாகும் கதர் எல்லாம் கிராமத்திலுள்ளவர்களே உபயோகிக்கும்படி செய்ய வேண்டும். 5. சர்க்கா சங்கத் தொண்டர்கள் கிராமத்தின் உன்னதிக்காக உழைக்கும் ஊழியர்கள் என்ற பொது நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும். 6. கதர் மட்டுமல்லாமல் கூடுமான வரையிலும் எல்லாத் துறைகளிலும் கிராமத்தாருக்கு நாம் சேவை செய்ய வேண்டும். இது தான் நமது உற்பத்தி வஸ்திராலய தொண்டர்களின் வேலையாகும்.

நூற்பது மூலம் உபஜீவனம், அடுத்தார்போல் சுயதேவை, பிறகு சம்பூர்ண கிராமசேவை, அதன் மூலம் கிராமராஜ்யம். இம்மாதிரி எல்லா கிராமங்களும் முன்னேறி விட்டால் மஹாத்மாவின் இறுதி லக்ஷ்யம்—கிராம ராஜ்யம்—நிறைவேறலாம். இதற்காக வஸ்திராலய தொண்டர்கள் என்ன செய்யலாம், எப்படி நடந்து கொள்ளலாம் என்பதை நாம் யோசிக்கவேண்டும்.

## (4) வஸ்திராலயத்தின் வேலைமுறை.

முன் சொன்ன நோக்கம் நிறைவேற நம்முடைய வேலைமுறை எல்லாம் சரியாக அமைய வேண்டும். கிராமத்தவர்களுடைய மனோநிலைமைக்கும் வாழ்க்கை நிலைமைக்கும் பொருத்தமாக நமது பிரசார வேலை இருக்க வேண்டும். இதுவரை செய்து வந்த வேலை இனிமேல் பலனளிக்காது. சுயதேவை லட்சியம் நூற்போர் மனதிலே ஊறிப்போக வேண்டும். அதற்கு பின் கண்ட முறைகளை அனுஷ்டிக்கலாம்.

நூற்போர்களுடன் நாம் அன்புடனும், மரியாதையுடனும் பழகவேண்டும். அவர்களுக்கு அமைதியாக உட்காருவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். பல கிளைகளில் மல-ஜலம் கழிக்கக் கூட வசதியில்லை. இந்த குறைகளை எல்லாம் நீக்கினால் நூற்போர்கள் நமது வஸ்திராலயத்தை வெறும் நூல் கடையாக எண்ணாமல் ஒரு ஆசிரமமாக எண்ணுவார்கள். நூல் விற்க வந்தோமென்ற எண்ணம் மாறக்கூடும்.

நூற்போர்கள் வந்தவுடன் வஸ்திராலய வேலையை பிரார்த்தனையுடன் தொடங்கினால் நூற்போர்களுக்கு தெய்வ பக்தியும் மன அமைதியும் ஏற்படும். அவர்களும் அமைதியாக நடந்து கொள்வார்கள். இப்பொழுது கூட்டம் போட்டு சத்தமேற்படுவதால் தொண்டர்களுக்கு கோபமுண்டாகிறது. இதற்கிடமில்லாமல் ஒரு அமைதி ஏற்படும்.

நூல் வாங்கும் பொழுது தொண்டர்கள் பஞ்சு மலகு, தராசு, பணப்பெட்டி முதலியவைகளுடன் தான் உட்காருகிறார்கள். நூற்போர்களுடைய நூலினால் செய்த நல்ல ஆடைகள் எல்லாம் உள்ளே மறைவாக பீரோவிலோ, ரேக்கிலோ இருக்கின்றது. தராசையும், பஞ்சு மலகையும் தவிர நூற்போர்கள் கதராடையைப் பார்க்க முடிவதில்லை. கதரெல்லாம் விற்பனைக்காகவே விற்பனை கிளைகளில் கொண்டுபோய் வசீகரமாக அலங்கரித்து வைக்கின்றார்கள். ஆனால் இதை உற்பத்தி செய்த நூற்போர்களின் கண்ணில் காட்டுவதில்லை. இனிமேல் உற்பத்தி சாலைகளில் நூற்போர் கண்ணுக்கு முன்னால் அவர்கள் நூலினால் நெய்த ஆடையை வசீகரமாக காட்ட வேண்டும். இது தான் நியாயம். இவைகளுக்காக உழைத்த நூற்போர்கள் பெருமையும், சந்தோஷமும் அடைவார்கள். தங்கள் நூலுக்கு காசு வாங்கிக் கொள்வதற்கு பதிலாக கண்ணுக்கு நன்றாக இருக்கும் ஆடையை வாங்க எண்ணுவார்கள். கண்ணுக்கு முன்னால் இருப்பதே அவர்கள் மனதையும் கவரும். அவர்களாகவே இதை வாங்கவேண்டும், அதை வாங்கவேண்டுமென்று நிச்சயம் செய்து கொள்வார்கள். ஒவ்வொரு ஆடையிலும் அதன் விலை நூல் சிட்டத்தில் தெரிவித்திருந்தால் கையிலுள்ள நூலை கொடுத்து வாங்கிக்கொள்வார்கள். பாக்கி போதாமலிருந்தால் அதையும் சீக்கிரம் நூற்று கொடுத்து விடுவார்கள். விற்பனை வஸ்திராலயங்களில் நல்ல ரகம் ஏதாவது வந்தால் அதை தனக்காக ரிசர்வ் செய்ய போட்டி போடுகிறார்கள். இதே மாதிரி கண்ணுக்கு முன்னால் இருந்தால் நூற்பவர்களும் அதை வாங்க போட்டியிடுவார்கள். இதெல்லாம் சுயதேவை மனோ

சாஸ்திரப்படி தாண்டுதல் ஆகும். இந்த சூழ்நிலை இன்று இல்லை. நாம் இதை ஏற்படுத்த வேண்டும்.

நூற்போர்களிடத்தில் உபயோகப் படுத்தும் வார்த்தைகளும் முக்கியமானவை. இப்பொழுது டெபாசிட் பிடிப்பது என்று சொல்கிறோம். இந்த வார்த்தையில் கட்டாயம், பலாத்காரம், எல்லாம் இருக்கிறது. கூலிக்கு நூற்பவர், விலைக்கு வாங்குபவர் என்ற பேதம் உண்டு. மனதிலே அருவருப்பு ஏற்படுகிறது. சுயேச்சை இல்லை. இதற்கு பதிலாக நாம் "கதருக்காக டெபாசிட் எவ்வளவு கொடுக்கிறீர்?" என்று கேட்டால் ஒருவேளை மனமுவந்து எதிர்பார்ப்பதை விட அதிகமாகக் கொடுக்கக் கூடும். அதில் சுயேச்சை இருக்கிறது. சந்தோஷம் இருக்கிறது. இதெல்லாம் நம்முடைய நோக்கம் சித்தி அடைய உதவும்.

இப்பொழுது நூல் வாங்கும் தினத்தில் சில தொண்டர்கள்தான் அந்த வேலையில் ஈடுபடுகிறார்கள். இதரர் கணக்கு புஸ்தகங்களை வைத்துக் கொண்டு கண் மறைவில் உட்கார்ந்து விடுகிறார்கள். இது தவறு. நூற்கும் தாய்மார்களும், சகோதரிகளும் அயலூரிலிருந்து வரும்பொழுது இந்த வேலையில் எல்லோரும் ஈடுபடவேண்டும். எழுதும் வேலையை ஒத்திவைக்க வேண்டும். இவ்வளவு கிராமத்தாருடன் பழகும் சந்தர்ப்பத்தை சுயதேவை பிரசாரத்திற்கும், கிராம முன்னேற்றத்திற்கும் உபயோகப் படுத்தினால் நம்முடைய வேலை முன்னேறும். எல்லோரும் சேர்ந்து நூற்பவர்களை கவனித்தால் வேலையும் சீக்கிரம் முடியும். இருட்டிற்கு முன்னால் வெகுதூரத்தி

லிருந்து வந்தவர்கள் திரும்பிப்போக சௌகரியப்படும். விற்பனை வஸ்திராலயத்தில் செய்வது போலவே இங்கு நூல் கொண்டு வந்தவரிடம் விற்பனைக்கு எல்லா முயற்சியும் செய்ய வேண்டும். நகரங்களில் பணமுள்ளவர்களிடம் மட்டும்தான் விற்பனைக்கு பாடுபட்டோம். ஏழை உழைப்பாளியிடத்தில் நாம் கவனமே செலுத்த வில்லை. இனி நூற்போரிடம் கவனம் செலுத்தினால் உற்பத்தியாகும் கதர் அந்த ஸ்தலத்திலேயே செலவாகும். நபர் சுயதேவையுடன் ஸ்தல சுயதேவையும் நிறைவேறும்.

நூற்போர்களுடன், அவர்கள் கிராமம், குடும்ப யோகக்ஷேமங்கள் விசாரிக்க வேண்டும். இதெல்லாம் அவர்கள் மனதை கவரும். நம்மை வியாபாரிகளாக கருதாமல் அவர்கள் நன்மைக்காக உழைக்கும் தொண்டர்களாக கருதுவார்கள். நாம் சொல்வதில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். அவைகளை ஏற்று நடக்க முன்வருவார்கள்.

நூற்போருடைய நூற்புக்கருவிகளை (ராட்டை) பழுது பார்த்துக் கொடுக்கவேண்டும். நல்ல கதிர், வீசனங்கள் முதலியவைகள் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இது மிகவும் முக்கிய வேலை. இவைகளை எல்லாம் சரிவர செய்தால் எல்லா ராட்டைகளும் சரிவர வேலை செய்யும். இதனால் சுயதேவைப்பூர்த்திக்கு சாதகமேற்படும்.

நூல் வாங்கும் தினத்தில் பல கிராமங்களிலிருந்து சிறியோர், பெரியோர் எல்லோரும் வருவார்கள். அதிக நேரம் காத்திருக்க வேண்டும். சும்மா இருக்கும்பொழுது

அவர்களுக்கு கதை, கீர்த்தனம், பாட்டு, பஜனை முதலியவை களினால் அவர்கள் மனதிற்கு அமைதியும், சந்தோஷமும் உண்டாக்க வேண்டும். காந்திஜியின் சரித்திரம் படிக்க லாம். அவர்களுடன் சேர்ந்து உட்கார்ந்து நூற்புயக்ஞம் நடத்தலாம். படிக்கத் தெரிந்தவர்கள் மற்றவர்களுக்கு படித்துச் சொல்லலாம். இம்மாதிரி நூற்போர்கள் வரும் தினத்தில் வஸ்திராலயம் வித்யாலயமாக, கண் காக்ஷியாக, பிரசார மேடையாக, பஜனை மேடையாக, இருக்க வேண்டும்; காந்தி ஆசிரமமாக இருக்கவேண்டும். அவர்களுக்கு மல-ஜலம் கழிக்க வசதிசெய்து கொடுக்க வேண்டும். குழிகக்கூஸ் போட்டு அதை அவர்கள் எப்படி உபயோகிக்க வேண்டுமென்று தெரிந்து கொள்ள வேண்டும். அதேமாதிரி தங்கள் கிராமத்தில் துர் நாற்றமின்றி கக்கூஸ் அமைத்துக் கொள்வார்கள். அதை உரமாக்கி உபயோகப்படுத்த அறிந்து கொள்வார்கள். இவர்கள் வஸ்திராலயத்தில் கண்டு, கேட்டு அறிந்ததை எல்லாம் அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடமும், கிராமத்தார் களிடமும் சொல்வார்கள். இதைவிட பலன் கொடுக்கக் கூடிய பிரசாரமும், சேவையும் எதில் ஏற்படும்!

மேற்சொன்னவைகள்தான் நெசவு வஸ்திராலயங் களிலும் செய்ய வேண்டும். தறிகாரர்களில் அநேகர் கதர் உடுத்துவதில்லை. அவர்களை கதருடுத்தும்படி செய்வது தொண்டர்களின் கடமையாகும். நூற்போர்களை விட நெசவாளர்களை திருத்துவது சுலபமாகும். அவர்களில் பலர் படித்தவர்கள். நன்றாக விஷயம் தெரிந்தவர்கள். அவர்களிடத்தில் உண்மையாக நாம் அதிக சேவை இது வரை செய்யவில்லை என்றே சொல்லலாம். தறிகாரரில்

பலர் அடிக்கடி விட்டு போவதும் திரும்பி வருவதுமாக இருக்கிறார்கள். இதனால் நம்முடைய தொடர்பு நீடித்திருப்பதில்லை. கதரின் தத்துவத்தை அவர்கள் உணரும்படி செய்திருந்தால் பெரும்பான்மையானவர்கள் கதர் நெய்வதும் விடுவதுமாக இருக்கமாட்டார்கள். நம்முடைய தறிகாரரில் பலர் இடைவிடாது ஆரம்பமுதற்கொண்டு சங்கத்தினிடத்திலேயே நெய்து வருகிறார்கள். இது மிகவும் பாராட்டத்தக்கது. சங்கமும் கதரன்பர்களும் அவர்களுக்கு கடமைப் பட்டுள்ளார்கள். உண்மையில் தறிகாரர்களது நீடித்த உழைப்பு இல்லாவிட்டால் கதர் இவ்வளவு முன்னேறியிருக்காது.

நம்முடைய சில வஸ்திராலயங்களில் தறிகாரர் வந்தால் உட்கார இடம் போதாது. அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுப்பது நமது கடமை. அவர்களுடன் அன்புடன் பழகவேண்டும். நெசவில் குறைகள் இருந்தால் கோபித்துக்கொள்ளக் கூடாது. கதர் அன்பர்களுக்கு அவர்களுடைய கடமையை உணரச் செய்ய வேண்டும். அவர்களை கூலிக்கு நெய்பவர்களாகக் கருதாமல், சங்கத்தின் தொண்டர்களாகவே கருத வேண்டும். அவர்கள் தவறுதல் செய்தாலும் நமது நடத்தையே அவர்களை திருத்த சாதகமாக இருக்கும். நூற்போர்கள் சம்பந்தமாக இதற்கு முன்னால் என்ன சொன்னோமோ அவை அநேகமாக இவர்களுக்கும் பொருந்தும். நெசவுகாரர்களும் பஜனை, கீர்த்தனை, துப்பரவு முதலியவைகளில் ஈடுபடும்படி ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டும்.

பலர் ரசீதுகளில் கைரேகை போடுகிறார்கள். நம்மிடத்தில் பல வருடங்களாக இருந்தும் கையெழுத்துப் போட நாம் கற்றுகொடுக்கவில்லை. இது நமக்கே அவமானம். கையெழுத்துப்போட சுலபமாக கற்று கொடுக்கலாம். இது விஷயமாக நம் தொண்டர்கள் கொஞ்சம் கவனம் செலுத்தினால் ஆறுமாத காலத்தில் எல்லோரும் கையெழுத்துப் போட கற்றுக்கொள்வார்கள். கைரேகைக்கு அவசியமிராது.

தறிகாரர் வீட்டுக்குப் போய் பார்த்துவரும் வழக்கம் சில இடங்களில் இருந்து வருகிறது. தறியில் அச்சு, விழுது, அகலம், கரை, ராட்டு எல்லாம் சரியாக இருக்கிறதா? மில் நூல் கலக்காமலிருக்கிறார்களா? நெய்ததை விற்காமலிருக்கிறார்களா? என்பதை பார்ப்பதற்கே நாம் அவர்கள் வீட்டிற்கு போவது வழக்கம். இனிமேல் தறிகாரர், கிராமத்திற்குப் போகும் பொழுது ஊரிலே துப்புரவு பஜனை, நூற்பு யக்ஞம், சுயதேவைப் பிரசாரம், கிராமத்தின் பொது நன்மை இவைகளே முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். இதனால் நமக்கும் அவர்களுக்கும் நெருங்கிய பழக்கமும், நம்பிக்கையும் ஏற்படும். கிராமங்களில் மற்ற மில்நூல் நெய்யும் தரிகாரர்களையும் பார்த்துப் பேசவேண்டும். கைத்தறியைக் காப்பாற்றத்தான் மஹாத்மா ராட்டையை உய்ப்பித்தார். இந்த உண்மையை தறிகாரர் அறிவதே இல்லை. அவர்கள் மனதில் படும்படி இதை எல்லாம் விளக்கிச் சொல்வது தொண்டர்கள் கடமை.

அநேக நெசவு கிராமங்களில் நூற்பே இருப்பதில்லை. நெசவாளர்களுக்கும் நூற்பு கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்கள் நூற்போரை எப்பொழுதுமே நம்பியிருக்க முடியாது. விவசாயகாலத்தில் நூற்போர்கள் நூற்க மாட்டார்கள். அப்பொழுது தறிகாரர்களே சிலதினங்கள் நூற்பது அவசியமாகும். இதை நன்றாக நாம் எடுத்துக் கூறினல் நெசவு கிராமத்திலே நூற்புபரவும். ஒன்றுக் கொன்று ஆதரவாக இருக்கும். ஸ்தல சுயதேவை பூர்த்தியாகும்.

இதுபோல் நூற்கும் கிராமங்களுக்கும் நாம் போக வேண்டும். இப்பொழுது தொண்டர்கள் சரிவர போவதேயில்லை. ஒவ்வொரு தொண்டரும் குறிப்பிட்ட ஊருக்கு மாதம் ஒருமுறையாவது போகவேண்டும். அங்கு எல்லா ராட்டைகளும் சரியாக ஓடுகிறதா என்று பார்த்து பழுதான ராட்டைகளை ரிப்பேர் செய்து கொடுக்க வேண்டும். போகும் சமயத்தில் கிராமத்துப்புரவு, பிரார்த்தனை, யக்ஞம் முதலியவை செய்வது நல்லது. கிராமத்திற்கு போகும் பொழுது பல வேலைகளையும் சேர்த்துக்கொண்டு நாம் சேவை செய்தால் அது சம்பூர்ண சேவையாகும். நாம் போகும் கிராமத்தில் புள்ளி விபரங்கள் (ஜனத்தொகை, வீடு எண், குழந்தைகள் எண் முதலிய எல்லா விபரங்களும்) தொண்டர்கள் ரிஜிஸ்டர் செய்யவேண்டும். நூற்போர் பெருவாரியாக இருக்கும் கிராமத்தைப்பற்றி தொண்டர்களுக்கு எல்லா விபரமும் தெரிந்திருக்கவேண்டும். சம்பூர்ண கிராமசேவை செய்யும்பொழுது இந்த விபரங்கள் எல்லாம் மிகவும் பயன்படும்.

கிராமத்திற்கு போகும்பொழுது கட்சி, வகுப்பு-வாதங்களில் நாம் தலையிடக்கூடாது. நம்மால் செய்ய முடிந்த சேவையை மட்டும் செய்யவேண்டுமே ஒழிய மற்ற விவகாரங்களில் தலையிடக்கூடாது. நமது உண்மை சேவையினாலேயே கிராமத்தாரிடம் நியாய புத்தியும், மன மாறுதலும் ஏற்படும். தொண்டர்கள் பொறுமையாக சேவை மட்டும் செய்து வரவேண்டும்.

மேலே சொன்னவைகள் உற்பத்தி ஸ்தல தொண்டர்கள் அநுஷ்டிக்க வேண்டிய பொது வேலைகள், குறிப்பான வேலைத்திட்டங்கள் வேறு சந்தர்ப்பத்தில் கூறப்படும். பொது நிர்வாகத்துடன் இவ்வளவு மேலே சொன்னவைகளை மனதில் வைத்துக்கொண்டு தொண்டர்கள் வேலை செய்தால் போதுமானது.

## II
## விற்பனை வஸ்திராலயம்.

விற்பனை வஸ்திராலயங்களில் விற்பனை நோக்கம் ஒன்றையே கொண்டு இதுவரை வேலை செய்துவந்தோம். அழகாகவும், வசீகரமாகவும், மலிவாகவும் கதரை ஸ்டாக் செய்து விற்பனை செய்து வந்தோம். நன்றாக விற்கக் கூடிய கதர் ரகங்கள் வெளிமாகாணங்களிலிருந்து தருவித்து விற்றோம். அதனால் ஒரு மாகாண கதர் மற்ற மாகாண கதருடன் போட்டி போட்டு வந்தது. இதனால் பரஸ்பரமாக மாகாண கதர் வேலை தத்துவ ரீதியில் பாதிக்கப்பட்டது. ஆனால் அதிகமாக கதர் விற்றோமென்று திருப்தி செய்துகொண்டு வந்தோம். 1936-ல் நாம் இந்த தவறை உணர்ந்து நம்மை திருத்திக்கொள்ள முயற்சி செய்யப்

பட்டது. ஒவ்வொரு மாகாணமும் தன் தேவைக்கு கூடுமானவரையில் தானே கதர் உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். வெளி மாகாணங்களிலிருந்து தருவிக்கக் கூடாது. வெளி மாகாணங்களிலிருந்து தருவிக்கும் விசேஷமான கதர் ரகங்களையும் ஒவ்வொரு மாகாணமும் உற்பத்தி செய்ய முயற்சிக்க வேண்டும். இந்த கட்டுப் பாட்டின் மூலம் மாகாண சுயதேவைப் பூர்த்தி ஓரளவு நிறைவேறக்கூடும் என்று முடிவு செய்யப்பட்டது.

கதர் அதிகமாக விற்பதன் மூலம், உற்பத்தியில் ஈடு பட்ட ஏழை எளிய கிராமவாசிகளுக்கு உதவியாக இருக்கும் என்ற எண்ணத்துடன் நாம் விற்பனையில் அதிக கவனம் செலுத்திவந்தோம். 1945-ல் காந்திஜி ஒரு புதிய சூத்திரம் நமக்கு கொடுத்தார். அதாவது நூற்பவர் கதர் உடுத்தவேண்டும். கதர் உடுத்துவோர் நூற்கவேண்டும். நூற்போர் ஒரு வகுப்பாகவும், கதருடுத்துவோர் வேறு வகுப்பாகவும் இருக்கக்கூடாது. கதரின் மகத்துவம் ஒவ்வொருவரும் தனது தேவைக்காக உழைக்க வேண்டு மென்ற தத்துவத்தில் அடங்கியிருக்கிறது. அது சுயதேவைத் தத்துவம் என்பது. ஒருவருக்காக இன்னொரு வரை நூற்கும்படி செய்து, ஏதோ கூலிகொடுப்பது சரியல்ல. ஏழைகளுடைய உழைப்பினால் கிடைத்த நூலை அவர்களுக்கு சொற்ப காசு கொடுத்து வாங்கி கதராக நெய்து நகரங்களில் கதர் விற்கப்படுகிறது. நூற்போர்கள் அந்த சொற்பக் காசைக் கொண்டு மில்துணி வாங்கிக் கொள்கிறார்கள். அவர்கள் நூற்ற நூல் அவர்களுக்கு பயன்படவில்லை. தங்கள் ஆடைக்கு மில்லையே நம்பி யிருக்கிறார்கள். ராட்டையில் கிடைக்கும் கூலியால் மில்

துணி வாங்கி கொள்கிறார்கள் என்று கூறுவது மிகையல்ல. ஒருபக்கம் கதரன்பர்களுக்கு கதர் கொடுக்கிறோம். மறு பக்கம் நூற்கும் ஏழைகள் மில்துணி வாங்க நாமே உதவி செய்கிறோம். நாம் உணராமலேயே மில் துணிக்கும் மறை முகமாக ஏஜண்டாக ஆகிறோம். நகரங்களிலோ கதருக்கு விசேஷ மதிப்பும் கௌரவமும் இருக்கிறது. இதனால் கதராடை மூலம் தேசத்தின் சுதந்திரம் கிடைத்தது என்றே சொல்லலாம். நகரத்தில் கதருடுத்துவோர் அடைந்த சுதந்திரத்தை கிராமத்தார்கள் அனுபவிக்க வேண்டுமானால் கிராமவாசிகள் கதருடுத்த வேண்டாமா? மில்துணியிலிருந்து கதரன்பர்கள் விடுதலை அடைந்தது போல அவர்களும் விடுதலை அடைய வேண்டாமா? அப்படியானால் கிராமத்தில் உற்பத்தியாகும் கதரை கிராம வாசிகளே உபயோகித்துக் கொண்டால் நகரத்திலுள்ள கதரன்பர்கள் என்ன செய்வார்கள்? அப்பொழுது கதர் வாங்குவோர் ஓரளவாவது நூல் கொடுக்கவேண்டாமா? அவர்கள் நூற்காவிட்டால் அவர்களுக்கு கதர் கிடைக்காமல் போகும். கிராமத்தில் நூற்போருக்கு கதர் உபயோகிக்கக் கொடுக்காமல் அவர்கள் உழைப்பை நாம் பயன்படுத்திக் கொண்டால், இது சுரண்டல் இல்லையா? அவர்களுடைய தங்கம்போன்ற நூலை சொற்ப காசு கொடுத்து வாங்குவது பெரிய சுரண்டலாகும். தங்கள் தேவைக்கு ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும். உழைப்பின் பலனை அவரவர்கள் அனுபவிக்க உரிமை வேண்டும். இந்த கடமையும், உரிமையும் இல்லாமல் புதிய அஹிம்சா சமுதாயத்தை எப்படி ஏற்படுத்த முடியும்?

மேலேசொன்ன தத்துவத்தை நாம் மனதில் வைத்துக் கொண்டு நம் விற்பனை வஸ்திராலயத்தின் வேலைகளை மாற்றி அமைக்கவேண்டும். அப்பொழுது கதர் விற்பனை மட்டும் நமது நோக்கமாக இராது. கதர் வாங்குபவர்கள் நூற்கும் ஏழைகளின் உழைப்பை சுரண்டாமல் தாங்களே தங்கள் ஆடைக்காக நூற்க வேண்டியிருக்கும்.

இப்பொழுது புதிய கதர் திட்டப்படி கதர் வாங்கு கிறவர்களிடமிருந்து கதருக்காக ஓர் பாகம் நூல் வாங்கும் விதியை அனுஷ்டிக்கிறோம். அவர்களுக்கு நூற்பதற்கு வேண்டிய கருவிகளை கொடுக்கவேண்டும், பட்டை போடவும், நூற்கவும் பயிற்சி கொடுக்கவேண்டும். இனி மேல் கதர் விற்பனை மட்டும் போதாது. கதருக்காக நூற்பதற்கு மூலப்பொருள்கள் பருத்தி, பஞ்சு முதலியவை களும் கொடுக்கவேண்டும். இது மட்டுமல்லாமல் பருத்தி சாகுபடிக்கு தகுந்த யோசனைகளும், வசதிகளும் செய்து கொடுப்பது நமது கடமை.

மேலும் கதர்தத்துவம், காந்திய தத்துவம் இவை களையும் நாம் பரப்பவேண்டும். இவைகளை மனதில் படும் படி செய்தால்தான் கதருக்காக நூற்பார்கள். கதர் விற்பனை எளிதாகும். முன்னால் நம்முடைய சாமர்த்தியத் தாலும், சேவையினாலும், வசீகரமான கதர் ரகங்களாலும் கதர் ஏராளமாக விற்பனை செய்து வந்தோம். இனிமேல் தத்துவத்தின் மதிப்பினாலும், அதில் நம்பிக்கையினாலும் தான் கதருடுத்துவார்கள். இந்த நிலைமையில் விற்பனை வஸ்திராலயம் எப்படி இருக்கவேண்டும்? நாம் எப்படி

நடந்து கொள்ளவேண்டும் என்பதைப் பற்றி யோசிப்பது அவசியம்.

வஸ்திராலயங்களில் கதர் ரகங்களை அழகாக வைத்து, கௌண்டர்கள் போட்டு அவசரம் அவசரமாக விற்ரும். ஆனல் இனிமேல் நாம் கதர் வாங்குவோருக்கு நூற்பு கருவிகள் கொடுக்கவேண்டும். நூற்பும் கற்பிக்க வேண்டும். இப்பொழுதுள்ள கௌண்டர், மேஜை, நாற்காலி முதலியவைகள் எவ்வளவு இடத்தை அடைத்திருக்கிறது? இவைகளை எடுத்து விட்டால் வஸ்திராலயம் விஸ்தாரமாக இருக்கும். அப்பொழுது வஸ்திராலயமே வித்யாலயமாக மாறிவிடும். வருபவர்களை உட்காரவைத்து கருவிகளை காண்பித்து அவைகளை உபயோகப்படுத்த கற்றுக் கொடுக்கலாம். பிறகு கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். அதற்கு பிறகு அவர்கள் நூற்ற அளவுக்கு கொடுக்கக்கூடிய கதரை நாம் கொடுக்கலாம். இம்மாதிரி செய்வதால் கதரன்பர்களுக்கும் நமக்கும் பரஸ்பர அன்பும், நெருங்கிய பழக்கமும் எற்படும். அவசர அவசரமாக ஊர், பெயர் தெரியாமல் கதரை விற்று பணத்தை வாங்கி வந்தோம். இனிமேல் சாவகாசமாக அன்பர்களிடம் நாம் பழகலாம். கதரில் பற்றுள்ள அவர்களும் நம்மிடம் அவசரப்படாமல் கதர் தத்துவத்தை அறிந்து கொள்ள நம்மிடம் அடிக்கடி வருவார்கள். உண்மையான கதர் பக்த சமாஜத்தை நாம் எற்படுத்தக்கூடும். இவர்கள்மூலம் பின்னல் கதாயிமண்டல் ஆரம்பிக்கலாம். (மண்டலைப் பற்றி பின்னல் விபரமாக எழுதப்படும்.)

இம்மாதிரி கதரன்பர்களுக்கு சேவை செய்ய தொண்டர்களிடம் விசேஷ மாறுதல் ஏற்படவேண்டும். கதர் சம்பந்தமான எல்லா சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கதர் தத்துவத்தில் போதுமான அறிவும் ஆராய்ச்சியும் இருப்பது அவசியம். அத்துடன் அவர்கள் வாழ்க்கை முறையிலும், நடத்தையிலும் நமது தத்துவத்திற்கு அனுசரணையாக இருக்கவேண்டும். கதரன்பர்களிடம் மரியாதையாகவும் அன்புடனும் பழக வேண்டும்.

கதரன்பர்களுக்கு தேவையான பொழுது வாங்கிக் கொள்ள, நூற்புக்கருவிகள், பருத்தி, பட்டை பஞ்சு முதலியவைகள் வேண்டிய அளவு தயாராக வைத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் வரும் பொழுது ஏமாற்றமும், சிரமமும் இல்லாமல் கிடைக்கும். பஞ்சு, கதிர், பட்டைபஞ்சு முதலியவைகளுக்காக பலர் அதிக தூரத்திலிருந்து வந்து, கிடைக்காமல் ஏமாந்து போவதை நாம் பார்க்கிறோம். ஏமாற்றம் ஏற்பட்டால் இவர்களுக்கு சங்கத்திடமும் நூற்பதிலும் அருவருப்பு ஏற்பட்டுவிடும். ஒரு பக்கம் நூற்க பிரசாரம் செய்கிறோம். இன்னொரு பக்கம் நூற்பதற்கு சாமான்கள் கிடைக்காமல் அலுப்பு ஏற்படும்படி செய்கிறோம். இந்த சிறிய விஷயங்களை நுட்பமாக கவனித்து முன் யோசனையுடனும், துடி துடிப்புடனும் சேவை செய்தால்தான் நமது லக்ஷ்யம் நிறைவேறும்.

கதர் அன்பர்களுக்கு ஆங்காங்கு நூற்புக்கருவிகள் செய்வதற்கு யோசனையும், உதவியும் கொடுக்க வேண்டும்.

நூற்புக்கருவி முதலியவைகளை பழுது பார்த்து கொடுக்கும் திறமை தொண்டரிடம் அவசியம்.

சுயதேவைக்காக நூற்போருடைய நூலை அவருடைய விருப்பப்படி நெய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து நெய்து கொடுக்கவேண்டும். இதில் காலதாமதமாக, ஒன்றுக்கு ஒன்று மாருக நெய்து கொடுத்தால் சுய தேவைக்கு நூற்பதில் அருவருப்பு ஏற்பட்டுவிடும். அவர்களுடைய நூற்பை பாராட்டி துரிதமாக நெய்து கொடுத்தால்தான் அவர்களுடைய மனது திருப்தியாகி சுய தேவைக்காக பாடுபடுவார்கள்.

சுயதேவை நூற்போர்களுக்கு குறிப்பிட்ட ரகத்திற்கு நூல் எவ்வளவு வேண்டுமென்றும், நெசவுக்கூலி, சாயம் முதலிய செலவுகள் எவ்வளவு ஆகுமென்றும் விபரமாக சொல்லவேண்டும். உற்பத்தியைபற்றி விற்பனை கிளை தொண்டர் பூர்ண அறிவு பெற்றிராவிட்டால் சுயதேவை நூற்போருக்கு உதவிசெய்ய முடியாது. ஆகையால் அவர்கள் எல்லா விபரமும் அறிந்திருக்க வேண்டும். நாலிலுள்ள குணதோஷங்களைகாட்டி அவைகளை திருத்தும் படி சொல்லவேண்டும்.

உற்பத்தி கிளைகளில் நூற்போர் ரிஜிஸ்டர் வைத்திருப்பதுபோல விற்பனை கிளைகளில் கதரன்பர்கள் ரிஜிஸ்டர் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு அன்பர் வீட்டிற்கும் தேவையான கதர், அவர்கள் வீட்டில் நூற்கும் ராட்டைகள், வருஷம் நூற்கும் நூல், உற்பத்தியாகும் பருத்தி, முதலிய விபரங்கள் எல்லாம் இருப்பது அவசியம். இந்த

ரிஜிஸ்டர் வைத்திருந்தால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுய தேவைக்கு நூற்பதற்கு உதவி செய்ய முடியும். அவர்கள் வசிக்குமிடத்திற்கு போய் தொண்டர்கள் கருவிகளை பழுது பார்த்து, கதாயி மண்டல் ஸ்தாபித்து கதர் தத்துவத்தை பிரசாரம் செய்ய உதவியாக இருக்கும். இம்மாதிரியாக தொண்டர்கள் வாரத்திற்கு இரண்டு தினங்களாவது ஒரு குறிப்பிட்ட தெரு அல்லது வார்டு, கிராமம் முதலியவை களுக்கு போய் ஸேவை செய்து வரலாம். வஸ்திராலய மாமூல் வேலையிலிருந்து தப்பி கதரன்பர்களுடன் சேவை செய்ய அரிய சந்தர்ப்பம். இதற்காக பிரயாண செலவு செய்யக்கூடாது. கூடுமானவரையில் கால் நடையாகவே போய்வர வேண்டும்.

வஸ்திராலயம், வித்யாலய தோற்றத்தை அடைவதால் ஒவ்வொரு விஷயத்திலும் வித்யாலய சூழ்நிலை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். வஸ்திராலயத்தை வேலையாள் இல்லாமல் சொந்தமாக நாமே துப்புரவு செய்துகொள்ள வேண்டும். பிறகு காலை வேலையை நூற்பு யக்ஞம் அல்லது பிரார்த்தனையுடன் ஆரம்பித்தால் நலம். அதில் கதரன்பர் களும் கலந்து கொள்ள வசதியிருக்கவேண்டும். தினம் மாலை பிரார்த்தனையுடன் வஸ்திராலய வேலையை முடித்துக் கொள்ள வேண்டும். இம்மாதிரி செய்வதால் வஸ்திராலய சூழ்நிலை மாறிவிடும். நம்முடைய வஸ்திராலய அமைப்பில் கருத்துக்களை முதலில் பரப்பவேண்டும். பிறகு கருவிகள், அதற்குப்பிறகு மூலப்பொருள்கள், கடைசியாகக் கதர் இருந்தால் கதரன்பர்கள் படிப்படியாக இவைகளின் முக்யத்துவத்தை அறிவார்கள். கருத்துக்களை பரப்ப

முதலில் பிரசுரங்கள், இரண்டாவது பட்டை போடவும் நூற்கவும்கருவிகள், மூன்ருவது பருத்தி முதலிய மூலப்பொருள்கள் இருக்கவேண்டும். இப்மாதிரி கருத்துக்களுடன் நூற்றநூலினுல் கிடைக்கக்கூடிய கதர் ரகங்கள் கடைசியில் இருக்கும். அதற்கிடையில் சுயதேவைக்காக நூற்றநூலும் நெய்த கதர் ரகங்களும் சில சமயங்களில் பார்வைக்காக வைத்திருக்கலாம். அதை பார்ப்பதே ஒரு கண்காட்சி. பார்த்தவர்களே சுயதேவைக்கு நூற்க தூண்டும்.

இம்மாதிரி விற்பனை வஸ்திராலயத்தின் சூழ்நிலை எல்லாம் மாறிவிட்டால் நகரங்களில் உள்ள கதரன்பர்களின் மனம் மாறி புதிய சமுதாயத்தை அமைப்பதற்கு அவர்கள் இடைவிடாமல் உழைப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இதற்காக தொண்டர்கள் விற்பனைக்காக பாடுபட்டு வந்ததைவிட அதிகமாக உழைக்கவேண்டும். கதர் மூட்டைகளை தலையில் சுமந்து போய் தெருத்தெருவாக, கிராமம் கிராமமாக நமது தலைவர்கள் விற்ருர்கள். அவர்களின் தியாகத்தால்தான் நாம் இன்றுவரை கதர் விற்க முடிந்தது. அதுபோல கதர் சாஸ்திரமும், தத்துவமும் பரவுவதற்கு பிரசுரங்களையும், நூற்புக் கருவிகளையும் தலையில் எடுத்து தெருத்தெருவாக போனுல்தான் கதர் தத்துவம் பரவமுடியும்.

பழைய தியாகத்தின் பலன் எல்லாம் அநேகமாக தீர்ந்து விட்டதென தோன்றுகிறது. புதிதாக தொண்டர்கள் தியாகம் செய்யாவிட்டால் கதரும், சங்கமும் புதிய லக்ஷ்யத்திற்காக ஓங்கிவளர முடியாது. இவ்வளவு மகத்துவமுள்ள சேவைக்கு விற்பனை வஸ்திராலயங்களில்

சந்தர்ப்பமிருக்கிறது. இதை தந்நலத்துக்கும் சமூக நலத்துக்கும் பயன்படுத்திக் கொள்வது தொண்டர்களின் கடமையாகும்.

---

## III

## மத்திய வஸ்திராலயம்.

கதர் உற்பத்தியும் விற்பனையும் பல இடங்களில் பரவி இருக்கிறது. இவைகளுக்குவேண்டிய ரொக்கம், மூலப்பொருள்கள் முதலியவைகளை சேகரித்து கொடுப்பதற்கும் தயாரான கதரை சலவை, அச்சு, சாயமிட்டு, தேவைக்கு தகுந்தாற்போல் வினியோகிப்பதற்கும், மத்திய வஸ்திராலயம் அவசியமாகும். இது மாகாணத்திற்கு மட்டுமல்ல, ஜில்லாக்களுக்கும், விபாகங்களுக்கும் கூட அவசியமாகிறது. மாகாணத்திற்கோ, வட்டாரத்திற்கோ தகுந்தாற்போல் மத்திய வஸ்திராலயம் ஒன்றுக்கு மேல் அதிகமாகவும் இருக்கலாம்.

ரயில் வசதி, போக்குவரத்துக்கு ரோடு, தபால், தந்தி, பாங்கு முதலிய வசதிகள் உள்ள இடங்களில் மத்தியவஸ்திராலயம் இருந்தால் சௌகரியமாக இருக்கும்.

மத்திய வஸ்திராலயங்களின் முக்கிய வேலைகளாவன:—

பருத்தி, பஞ்சு முதலிய மூலப்பொருள்களை சேகரித்து வினியோகம் செய்வது.

உற்பத்தியான நூலைப்பிரித்து, கதரை சலவை, சாயம், அச்சு போட்டு வினியோகித்தல்.

உற்பத்திக்கு வேண்டிய ரொக்கத்தை சேகரித்து வினியோகித்தல்.

நூல் தரம், கதர் ரகம் முதலியவைகளை நிர்ணயம் செய்வதும், சீர்திருத்தம் செய்வதும்.

அதற்கு தேவையான அறிக்கைகளும், புள்ளி விபர கணக்குகளும் வைத்துக்கொள்வது.

சுயதேவைக்கு நூற்பவர்களின் நூலை நெசவு செய்து கொடுக்க ஏற்பாடு செய்தல்.

1. வட்டாரத்திலுள்ள எல்லா கிளைகளுக்கும் வருஷத்திற்கு தேவையான பருத்தி, பஞ்சு முதலியவைகளை மதிப்பிட்டு சரியான காலத்தில் குறைந்த விலையில், நல்ல தரமாக ஸ்டாக் செய்து வைத்துக்கொண்டு, அவ்வப்பொழுது கிளைகளின் தேவையை பூர்த்தி செய்வது முதல் வேலையாகும். நூல் உற்பத்தி கிளைகள் மூலம் தேவையான ரகத்தில் நூல் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்து ஸ்டாக் செய்து கொள்ளவேண்டும். அவ்வப்பொழுது தேவையான நூலை நெசவு கிளைகளுக்கு காலம் தவருமல் அனுப்பவேண்டும். மாதாமாதம் கதர் உற்பத்திக்கு எவ்வளவு நூல் தேவையென்று முதலிலேயே கணக்கிட்டு தயார் செய்து கொள்ளவேண்டும்.

தேவையான கதருக்கு நியமரக நூல் உற்பத்தி செய்யும்படி உற்பத்தி வஸ்திராலயங்களுக்கு சொல்ல வேண்டும். இது சாதாரணமாக நூல் ஆலையில் நடக்கும் முறையில் நிறைவேருது. நியமரகம் நூற்பதற்கு

சாதகமான பஞ்சைக்கொடுத்து விசேஷ காரணங்களையும் உற்பத்தி வஸ்திராலயங்கள்மூலம் நூற்போரிடம் கூறி நமக்கு தேவையான நூலை நூற்கும்படி செய்யவேண்டும். இவை வெறும் உத்திரவினாலும், மின்சார ஸ்விட்சினாலும் நடக்காது. நியாய பூர்வமாக பிரசாரம் செய்தால்தான் நிறைவேறும்.

உற்பத்தி கிளைகளுக்கு வேண்டிய நூலை அவர்களே பிரித்துக் கொள்ளவேண்டும். இருந்தாலும் நியம ரகம், மத்ய ரகம், மெல்லிய ரகம் என பொதுவாக மூன்று ரகமாக பிரித்து தேவைக்கு கொடுக்கவேண்டியதும் மத்ய வஸ்திராலயத்தின் பொறுப்பேயாகும்.

2. விற்பனை கிளைகளுக்கும் உற்பத்தி கிளைகளில் முக்கியமாக நூற்போர்களுக்கும் தேவையான கதர் ரகங்களை உற்பத்தி செய்யவேண்டும். பொதுவாக தேவையுள்ள ரகங்களை எல்லாம் அவ்வப்பொழுது கணக்கிட்டு கைவசமுள்ளது போக பாக்கி தேவையை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். கிளைகளிலிருந்து வரும் தேவை நமூனாக்கள் எல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்து எந்த ரகத்தில் எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டுமென்று உற்பத்தி கிளைகளுக்கு திட்டம் கொடுக்கவேண்டும். இதற்காக பிரதி மாதமும் அல்லது மூன்று மாதத்திற்கு ஒருமுறை திட்டம் வகுத்துக் கொள்வது அவசியம்.

இதைத்தவிர உற்பத்தியாகும் கதரின் தரம் குறையாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பும் மத்ய வஸ்திரா

லயத்தை சேர்ந்ததே. ரகத்தின் நீளம், அகலம் குறையாமலும் நெசவு நன்ருகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ரகங்களில் நெசவு மட்டமாக இருந்தால் அதை உடனே திருத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகளை உற்பத்தி கிளைகளுக்கு சொல்லவேண்டும், மட்டமாக இருந்தால் உற்பத்தி கிளையிலிருந்து டெலிவரி வாங்கும் பொழுது அவைகளை மட்டரகமாக குறிப்பிட்டு அதற்கு தகுந்த விலை குறைக்கபடவேண்டும். அதன் காரணத்தை ஆராய்ச்சி செய்து உடனே அதை திருத்தவேண்டும். இதை பலமுறைகளில் செய்யலாம். அவைகளை இங்கு விஸ்தரிக்க இடமில்லை. பூர்ண அனுபவமும், பயிற்சியும், சிரத்தையுமிருந்தால் கதர் ரகத்தில் குறைகள் ஏற்படாது. உற்பத்தி சாலைகளில் இருக்கும் தறிகளின் எண்ணிக்கை, ரகம், அளவு இவைகளின் புள்ளி விபரம் எப்பொழுதும் மத்ய வஸ்திராலயத்தில் இருக்கவேண்டும். தேவைக்கும், ஸ்டாக் நிலைமைக்கும் தகுந்தவாறு ரகங்களை அவ்வப்பொழுது மாற்றிக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தேவைக்கு கதர் கொடுக்கமுடியாமலும், கையிலுள்ள ரகம் முடங்கிக்கிடக்கவும் நேரிடும். அதனுல் மிகவும் ஜாக்கிரதையாக, முன் எச்சரிக்கையுடன் மத்ய வஸ்திராலயம் நடந்து கொண்டால் நெருக்கடியான நிலைமை ஒன்றும் ஏற்படாது.

3. தேவையான ரகங்களை ஆராய்ந்து அதற்கு தகுந்தபடி அச்சு, சாயமிட, சாயச்சாலைக்குஆர்டர்கொடுப்பது முக்கியமான வேலையாகும். தேவையான ரகங்கள் தயார் செய்ய அவசியமான சாயநூலும் தயாராக வைத்திருக்க வேண்டும். மார்க்கட்டில் உள்ள மற்ற துணிகளை

பார்த்து அதை அனுசரித்து புதிய ரகங்கள் தயார் செய்ய உற்பத்தி வஸ்திராலயங்களுக்கு யோசனையும், முறையும் கொடுத்து வழி காட்டவேண்டும். மழை காலத்தில் அதிகமாக சாயம் அச்சு போட முடியாது, அந்த காலத்தில் தீபாவளிபோன்ற விற்பனை காலம் வருகிறது. அதற்காக முன்னமே தேவையை மதிப்பிட்டு சாயம் அச்சுப்போட்டு வைத்துக்கொள்ளவேண்டும். கையிருப்பு ஸ்டாக்கை பத்திரமாக சிறு சிறு மூட்டைகளாக போட்டு வைத்திருப்பது நலம். எப்பொழுதும் கைவசமுள்ள ஸ்டாக்கை மதிப்பிடும்படி சௌகரியமாக வைத்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் குழப்பம் ஏற்படும்.

4. மத்ய வஸ்திராலய வேலைகளில் முக்கியமான பாகம், விற்பனை வஸ்திராலயங்களிலிருந்து ரொக்கத்தை ஊட்டனுக்குடன் சேகரிப்பதும் உற்பத்திக்குவேண்டிய ரொக்கத்தை தாமதமில்லாமல் உற்பத்தி கிளைகளுக்கு கொடுப்பதுமாகும். விற்பனை வஸ்திராலயங்களில் பணம் தேங்காமலும், உற்பத்தி வஸ்திராலயங்களில் பண நெருக்கடி ஏற்படாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். உற்பத்தி வஸ்திராலயங்களில் தேவைக்கதிகமான பணம் இருக்கக்கூடாது. விற்பனை வஸ்திராலயங்களிடமிருந்து மத்ய வஸ்திராலயத்திற்கு பணம் வந்து உற்பத்தி வஸ்திராலயங்களுக்கு தேவைக்குத் தகுந்தவாறு இடைவிடாது தொடர்ந்து போய் சேர வேண்டும். உற்பத்தியாகும் கதர் திரும்பி விற்பனை வஸ்திராலயங்களுக்குப்போய் பணமாக மாறி உற்பத்தி செய்வோருக்கு போய் சேர வேண்டும். இதை மிக சிரத்தையுடனும் திறமையுடனும் செய்யாவிட்டால் கதர் உற்பத்தி, விற்பனை ஸ்தம்பித்துவிடும். ஒருபக்கம் அன்பர்களுக்குக்

கதர் கிடைக்காமலும், இன்னொருபக்கம் உற்பத்தியாளருக்கு பணம் கிடைக்காமலும் போய்விடும். இந்த நிலைமை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு மத்ய வஸ்திராலயத்தை சேர்ந்ததே. உற்பத்தி விற்பனை வஸ்திராலயங்களிலிருந்து ரொக்கத்தை வாங்கி வினியோகிப்பதில் பாங்கு கமிஷன், பிரயாணச் செலவு, தபால் இன்ஷுர் செலவு முதலியவைகள் மிக சிக்கனமாக செய்யவேண்டும். பண நிலைமைக்கும், தேவைக்கும் தகுந்தவாறு சில சமயம் அதிக செலவுசெய்யவேண்டிவரலாம். அதற்கும் தயங்கக்கூடாது. சில சமயம் சிக்கனத்திற்கு கால் அணு அல்லது அரை அணுவுக்கு இடமிருந்தாலும் அதையும் நாம் இழக்கக்கூடாது. ஆகையால் துரிதமாக மக்களுக்கு சேவை செய்வதற்கும், சிறிது செலவானாலும் பாதகமில்லை. அவசியமில்லாத செலவை குறைத்து, பொதுஜன சொத்தைக் காக்கும் கடமையையும் நாம் மறக்கக்கூடாது. இவ்வளவு பொறுப்புள்ள வேலைக்கு புத்தி, சிரத்தை, கதர் தத்துவ ஞானம், சுறுசுறுப்பான உழைப்பு முதலிய குணங்கள் அவசியம்.

5. கதர்விலை சம்பந்தமாக முழு பொறுப்பும் மாகாண காரியாலயத்தை சேர்ந்ததாகும். இருந்தாலும் பொதுவாக மாகாண காரியாலயம், விதிப்படி விசேஷ ரகங்களுக்கு விலை சரியாக இருக்கிறதா என்று பார்த்துவரவேண்டும். விசேஷ ரகம் வரும்பொழுதெல்லாம் அதன் விலை சம்பந்தமான பூரு விபரமும் உற்பத்தி கிளையிலிருந்து கேட்டு சரியாக இருக்கிறதா என்று பரிசோதனை செய்வது அவசியம்

6. அறிக்கைகளில் எல்லாம், கைவச ஸ்டாக், தேவை உற்பத்தி இவைகளுக்கு விபரமான ரிஜிஸ்டர்கள்

(Statistics) எப்பொழுதும் தயாராக இருத்தல் முக்கியம். ஒரு வஸ்திராலயத்தில் சரக்கு தேங்கி கிடந்தால், தேவையுள்ள வஸ்திராலயத்திற்கு நேரடியாக அனுப்ப எழுதலாம். தறி அறிக்கை கைவசமிருந்தால், புள்ளி விபர ரிஜிஸ்டர்களை வைத்துக்கொண்டு தேவையான தறி ரகங்களை மாற்றலாம். புள்ளி விபரங்கள் மிகவும் அவசியம். இவைகள் மத்ய வஸ்திராலயத்தின் இரண்டு கண்கள். இவைகள் இல்லாவிட்டால் குருடன்மாதிரி வேலை நடைபெறும். இதனால் பொது சொத்திற்கு நஷ்டம் ஒருபக்கம், மறுபக்கம் கதரன்பர்களின் தேவையை பூர்த்தி செய்யமுடியாமல் அதிருப்திக்கும் புகாருக்கும் இடமாகிறது. தவிர கிராமத்திலுள்ள உற்பத்தியாளருக்கு வேலை இல்லாமல் பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள். இவைகள் எல்லாம் தடுக்க புள்ளி விபர ரிஜிஸ்டர் மிக அவசியம்.

7. சர்க்கா சங்கத்தின் லக்ஷ்யம் சுயதேவை திட்டமாகும். நமது உற்பத்தி விற்பனை எல்லாம் சுயதேவை லக்ஷியத்திற்கு அனுகூலமாக இருக்கவேண்டும். சுயதேவை நூற்போரின் நூலை பத்திரமாக பாதுகாத்து, தேவையான ரகத்தை நெய்யக்கூடிய கிளைக்கு அனுப்பி அதை எவ்வித குறையுமில்லாமல் கேட்ட ரகத்தை தயார் செய்து தாமதமில்லாமல் அனுப்பி வைப்பதே மத்ய வஸ்திராலயத்தின் முக்கிய கடமை. நெசவு கூலி, சாயக்கூலி முதலியவைகளுடன் குறைந்த செலவில் சுயதேவை நூற்போருக்கு ஆடை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். சரியான சமயத்தில் அவர்களுக்கு கிடைக்கும்படி அவர்கள் சம்மதத்துடன் சர்க்கா சங்க செலவிலோ, தனி

பார்சலிலோ, சில சமயத்தில் ஆள் மூலமோ அனுப்புவதும் அவசியமாயிருக்கலாம். சுயதேவை நூற் போர்கள் பொருளாதார லாபத்தை அதிகமாகக் கருதுவ தில்லை. தங்களுடைய உழைப்பால் கிடைத்த கதரை அணிந்து ஆத்ம சந்தோஷத்தை அடைய காத்திருக்கிறார் கள். ஆகையால் அவர்களுக்கு ஒருவித அதிருப்தியோ, தாம தமோ இல்லாமல் அவர்கள் நூலை விரும்பியபடி நெய்ய ஏற்பாடு செய்யவேண்டும். இப்படி செய்வதனால் அவர்கள் மேன்மேலும் சுயதேவைக்கு நூற்பதற்கு ஊக்கம் அடை வார்கள். சர்க்கா சங்கத்தினிடம் அவர்கள் மதிப்பும் அன்பும் உயரும். காந்திய புரட்சியை நிறைவேற்ற சங்கத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு முன் வருவார்கள். சுயதேவை நூற்போர்தான் சங்கத்தின் தூண்கள்.

சுயதேவை நூற்போரின் ரிஜிஸ்டர் வைத்துக்கொள்ள வேண்டும். அதில், பெயர், விலாசம், நூல், நெம்பர், பஞ்சின்பெயர், நெய்தஇடம், வந்ததேதி, திருப்பி அனுப்பிய தேதி, நெசவு கூலி, சதுரகஜம், முதலிய விபரங்கள் பதிந்து கொள்வதுஅவசியம். நூலைப்பற்றிய குறைகளையும், விசேஷ குணங்களையும் அவர்களுக்கு தெரிவித்தால் நூற்பது அபி விருத்தியாகும். தறிகாரருடைய அபிப்பிராயத்தையும் அவர் களுக்கு தெரிவிக்கவேண்டும். நெய்யமுடியாத நூல் என்று ஒன்றையும் மறுக்கக்கூடாது. ஈரிழையாக்கியாவது நூலை துணியாக்கவேண்டும். அவர்களுடைய சம்மதம் பெற்று நெய்து கொடுக்கலாம். சொந்த நூலுடன் சங்கத்தின் நூல் கலக்கும்படி நேரிட்டால் நூல் சொந்தக்காரர்களுக்கு தெரிவிக்க வேண்டும். அம்மாதிரி கலந்துகொள்ள முன்னா லேயே சம்மதம் வாங்கிகொள்வது அவசியம். பொதுவாக

நூல் கொடுத்த தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள்ளாக் நெய்த கதர் நூற்றவர்களுக்கு போய் சேரவேண்டியது முறை. இதற்கு அதிககாலமானுல் திருப்திகரமான கார ணங்களும் சொல்லவேண்டும்.

8. நமது கதர் உற்பத்தி எல்லாம் கிராமத்திலேயே நடைபெறுகிறது. நமது ரிஜிஸ்டரில் பதிந்து கொண்டிருக்கும் நூற்போர்களின் உழைப்பால்தான் கதர் உற்பத்தியாகிறது. ஆதலால் நீதிமுறையில் பார்த்தாலும், சுயதேவைத்திட்டத்தின் லக்ஷியத்திற்காக வும், நூற்போருக்கும், கிராமவாசிகளுக்கும் தேவையான கதரை முதலில் கொடுப்பதே சங்கத்தின் லக்ஷியமும் கடமையுமாகும். உற்பத்தி ஸ்தலத்திலுள்ள நூற்போர் கேட்ட ரகத்தை முதலில் உற்பத்தி செய்து அவர்கள் தேவையை பூர்த்தி செய்யவேண்டும். பிறகுதான் நகரத்தின் தேவையை கவனிப்பது நியாயமாகும். மத்ய வஸ்திராலயம் இந்த கொள்கையுடனும், வேலைத் திட்டத்துடனும் உற்பத்தி-வினியோகம் நடத்த வேண்டும். அப்படி இல்லாமல் நகரத்தேவையைமட்டும் கவனித்தோ மானுல், சர்க்கா சங்கத்திற்கும், சுயதேவைக்கும் நாமே தீங்கு விளைவிப்போம். இந்த பொறுப்பை சரியாக செய்வதற்கு, மத்ய வஸ்திராலயம் ஸ்தாபனத்தின் ஒரு அச்சு போல் அமைந்திருக்கிறது. இந்த கடமையிலிருந்து நழுவி விடக்கூடாது.

கதர் அன்பர்களிடமிருந்து ஸ்பெஷல் ஆர்டர் (Special order) வந்தால் அவைகளை ரிஜிஸ்டர் செய்து கொண்டு கூடுமானவரையிலும் அவர்களை திருப்தி செய்ய

வேண்டும். முடியாமற்போனால் அவர்களுக்கு காரணங்களை விளக்கி எழுதவேண்டும். சுயதேவை நூற்போருக்கு ஏதாவது ரகம் நெய்து கொடுக்க முடியாமற்போனால், சாத்தியமான வேறு ரகம் ஏதாவது அவர்கள் சம்மதத்துடன் நெய்து கொடுக்கலாம். இதற் கவசியமான கடிதப்போக்குவரத்து நடத்தவேண்டும்.

9. கணக்கு சம்பந்தமான வேலைகள் மத்ய வஸ்திராலயத்தின் முக்கிய பாகம். மத்ய வஸ்திராலயங்களில் கிளைப் பேரேடு (Branch Ledger) இருக்கவேண்டும். மத்ய வஸ்திராலயத்தின் மூலதனமெல்லாம் கிளையிலேயே முதலீடாக பங்கிடப்பட்டிருக்கிறது. மத்ய வஸ்திராலய கணக்கு சரியாக வைத்துக்கொள்ளப்படாவிட்டால் மூலதனம் எந்த ரூபத்தில் எங்கு கிடக்கிறது என்பது தெரியாது. மத்ய வஸ்திராலயத்தில் ரொக்க கணக்குப், ஸ்டாக் கணக்கும் முக்கியமானவை. தினப்படி ரொக்க குறிப்பில் ரொக்கம், பாங்கு இருப்பும் சேர்ந்திருக்கவேண்டும். எந்த நிமிஷத்திலும் பாங்கு இருப்பு எவ்வளவு என தெரிந்திருத்தல் அவசியமாகும். ரொக்க குறிப்பிலேயே பாங்கின் பெயரேடு தனி காலத்தில் இருக்கும். இப்படி இருந்தால் தேவையான பணத்தை கிளைகளுக்கு உடனுக்குடன் கொடுக்கவும், கிளைகளிலிருந்து தருவிக்கவும் சௌகரியமாக இருக்கும். கிளைகளுக்கு கொடுக்கவேண்டிய பணத்திற்கு இரண்டுமாதம் முன்னாலேயே பட்ஜட் (Budget) போட்டுக்கொள்ளவேண்டும். விற்பனை கிளையிலிருந்து வரவேண்டிய தொகை, உற்பத்திக்கு கொடுக்கவேண்டிய தொகை என நிதானப்படுத்தி வைக்கவேண்டும். கிளை பணம் கேட்கும்பொழுது (Requisition Slip) தேவை

நமூனு அல்லது வாராந்திர அறிக்கைகள் வந்தபிறகு அதன் படி அவசியமான தேவை அளவுக்குமட்டும் ரொக்கம் கொடுக்கவேண்டும்.

ரொக்கத்திற்கடுத்தது பஞ்சு, நூல், கதர் முதலியவை களின் தினப்படி பாக்கி இருப்பு அவசியமானது. பாங்கு ரொக்கத்திற்கு குறிப்பில் தனி இடம் இருப்பதைப்போல் இவைகளையும் குறிப்பில் பதிந்துகொள்ள தனி காலம் அவசியம். அன்றுடம் ஆரம்ப இருப்பு, கொள்முதல்; விற்பனைக்குபிறகு முடிவிருப்பு இவைகளை தினசரிகுறிப்பில் பாக்கி கட்டவேண்டும். இந்த வேலை மத்ய வஸ்திராலய நிர்வாகி தானே செய்துகொண்டால் பூரு நிலைமையும் நிர்வாகி அறிந்துகொள்ளமுடியும். இரண்டு வாரத்திற்கு ஒரு முறையோ, மாதம் ஒரு முறையோ கிளைகளிலுள்ள ஸ்டாக் விபரம் வாங்கி இங்குள்ள ரிஜிஸ்டரில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

மத்ய வஸ்திராலயத்தில் இவ்வளவு சாமான்கள் புழங் குவதால் சிறிது குழப்பமேற்படக்கூடும். ஆகையால் எல்லாம் ரகவாரியாக, சுத்தமாக, தனித்தனியாக ராக்கிலோ அல்லது பேலர்கக் கட்டியோ த்யாராக வைத்திருக்கவேண்டும். மத்ய வஸ்திராலயம் மிகவும் சுத்தமாகவும் அழகாகவும் இருந்தால்தான், வந்துபோவோர் ருக்கு ஒரு உதாரணமாக விளங்கும்.

10. உற்பத்தி ஸ்தலங்களிலிருந்து மூலப்பொருளை கொடுப்பதற்கும், வாங்குவதற்கும் அடிக்கடி சகஊழி யர்கள் வருவார்கள். அவர்களை மரியாதையாகவும், சீக்கிர

பார்கவும் வேண்டியவைகளை கவனித்து இருட்டிற்கு முன்னால் பஸ் அல்லது ரயில் தவருமல் திரும்பி ஊர் சேர உதவி செய்யவேண்டும். அவர்களுடைய கிளைகளில் உற்பத்தி, நிர்வாக கஷ்டங்கள், எல்லாவற்றையும் விசாரித்து திறமையான நிர்வாகத்திற்கும் சேவைக்கும் வேண்டிய ஆலோசனைகளும் கொடுப்பது மத்திய வஸ்திராலயத்தின் கடமை. உற்பத்தி வஸ்திராலய ஊழியர்களுக்கு மாகாண கிளையை விட மத்திய வஸ்திராலயத்துடன் அதிக தொடர்பு உண்டு. ஆதலால் அவர்கள் உற்பத்திக் கிளைகளின் குறையை விசாரித்து திருப்தி செய்வது கடமையாகும். அங்கிருந்து வரும் வண்டி மாடுகள் நிற்க நிழலும் தொண்டர்களுக்கு தங்க வசதி, தேவையான சில்லரை, நாணயம், முதலிய எல்லா வகையிலும் உதவிசெய்து கொடுப்பதும் மத்யவஸ்திராலயத்தை சேர்ந்த பொறுப்பு.

---

## IV

## அச்சு சாய இலாகா.

மாகாண காரியாலயத்தைப் பற்றி விரிவாக சொல்ல வேண்டியிருப்பதால் கடைசியில் அதைப்பற்றி எழுதலாம்.

முன்னால் சொன்ன மத்திய வஸ்திராலயத்திற்கு அடுத்தபடியாக முக்கியமான வேலை அச்சு சாயமிடுதலும் அதற்காக உள்ள தனி இலாகாவும் ஆகும். கதர் ரகங்களில் இவ்வளவு அபிவிருத்தி ஏற்பட்டதற்கும் இதர துணியைப்போல வசீகரமாக செய்வதற்கும் காரணம் அச்சு சாயமே. ஆகையால் கதர் உற்பத்திக்கு அச்சு

சாயம் இன்றியமையாததாகிவிட்டது. ஆடம்பரமில்லாமல் வெள்ளைத்துணி உடுத்துவோருக்குக்கூட வேஷ்டி, துண்டு முதலியவைகளின் கரைக்கு சாயமிட்ட நூல் வேண்டியிருக்கிறது. புடவைக்காக சுய தேவைக்கு நூற் போருக்கும், அவர்கள் நூலை சாயம்போடவேண்டியிருக்கிறது. அல்லது வெள்ளை பீஸாக நெய்தாலும் அதற்கு கரை முதலியவைகள் அச்சிட வேண்டியிருக்கும். ஆகையால் கதர் அபிவிருத்தியில் அச்சு சாயம் முக்கிய ஸ்தானம் பெற்றுவிட்டதை மறுக்க முடியாது.

நாம் அச்சு சாயத்திற்கு உபயோகிக்கும் கலர்கள் எல்லாம் சுதேசி அல்ல. அன்னியநாட்டிலிருந்துதான் வருகின்றது. நீலம், கடுக்காய் போன்ற சில பழைய காலத்து சாயங்களை தவிர பாக்கியுள்ள கலர்கள் எல்லாம் விதேசிதான். இதன் மூலம் நாட்டின் செல்வம் வெளியே போய்க்கொண்டிருக்கின்றது. இதை நிறுத்துவதற்கு டாக்டர் P. C. ரே முதலிய விஞ்ஞான நிபுணர்கள் ஆராய்ச்சி செய்தார்கள். ராய் காகி என்ற ஒரு நிறத்தை தவிர வேறு ஒன்றும் அதிகமாக பலிக்கவில்லை என்று சொல்லலாம். நமக்கு வேண்டிய சாய பொருள்கள் எல்லாம் உள்நாட்டிலேயே தயார் செய்யும் பொறுப்பு நம்முடைய விஞ்ஞானிகளையும், சர்க்காரையும் சேர்ந்தது. கூடிய சீக்கிரத்தில் தேசத்திற்குவேண்டிய சாயகலர்களை எல்லாம் இங்கேயே உற்பத்தி செய்ய சர்க்கார் முயற்சி எடுக்கக்கூடுமென நம்புகிறோம்.

அச்சு சாய தொழில் ஒரு குடிசைத் தொழிலே. துணியில் அச்சு போடுவது பெரும்பாலும் மரக்கட்டைகள் மூலமாகத்தான் செய்யப்படுகிறது. கட்டைகள் ஒரு

ஜாதி தேக்கு மரத்தால் செய்யப்படுகிறது. இதில் அழகான சித்திரங்களைப்போட சித்திர கலா நிபுணர்கள் தமிழ் நாட்டில் திருப்பூர், மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களில் இருக்கிறார்கள். இரண்டாவது முறை, துத்தநாகத்தில் அழகான பூக்கள் வெட்டி ஸ்டென்சில் (Stencil) முறையில் அச்சிடுவது. மூன்றாவது முறை சாயத்தை பிரஷினால் ஒரு அழகான முறையில் சமமாக தெளிப்பது. இன்னொரு முறை (Airograph) எரோக்ரேப் என்று சொல்லப்படுகிறது. புதிதாக ஸ்கிரீன் ப்ரிண்டிங் (Screen Printing) என்ற ஜப்பான் முறையும் இப்பொழுது அமுலில் இருக்கிறது. ஆனால் இந்த முறைக்கு ஏராளமான துணி இருந்தால்தான் நடத்தலாம்.

சாயத்தில் பலமுறைகள் உண்டு. இவைகளையெல்லாம் விவரித்து தனி புஸ்தகம் ஒன்று பிரசுரிக்க உத்தேசித்திருக்கிறோம்.

ஒவ்வொரு மாகாண சர்க்கா சங்க கிளைகளிலும் அச்சு சாய இலாகா இருப்பது அவசியம். ஒவ்வொரு விபாகத்திற்கும் சிறிய அளவில் அச்சு சாய இலாகா கூடுமானால் வைத்துக்கொள்வது நலம். வட்டார சுயதேவையை கருதும்பொழுது இது இன்றியமையாதது.

அச்சு-சாய தொழில் குடிசை தொழிலாக இருந்தபோதிலும் இதற்கு மூலதனம் கொஞ்சம் அதிகமாக வேண்டியிருக்கிறது. இதற்கு போதுமான கட்டிடங்கள், தண்ணீர், உலர்த்துவதற்கு தாராளமாக இடம் முதலியவை

அவசியம். ஏராளமாக தண்ணீர் வசதியுள்ள இடங்களில் தான் சாய அச்சு சாலை வைத்துக்கொள்ளக்கூடும். மேலும் இதற்கு தளவாடங்கள் அதிகமாக தேவை. அச்சடிக்கும் பிளாக்குகள் (Blocks) புதிய புதிய ரகங்களாக தயாரிக்க வேண்டியிருக்கிறது. தவிர சலவை, சாய, அச்சு சாமான்கள், கலர், மருந்துகள், திராவகங்கள் எல்லாம் ஸ்டாக் செய்து கொள்ளவேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் அதிக மூலதனம் தேவை. சாயம் போடுவதற்கு ஒரேகாலத்தில் எவ்வளவுக்கெவ்வளவு பீஸ்களும், நூல் சிட்டங்களும் அதிகமாக போடப்படுகின்றனவோ அவ்வளவுக்கு சாயமும் இதர செலவும் சிக்கனமாகும். வேலை செய்கிறவர்களுக்கு எப்பொழுதும் வேலை கொடுத்துக் கொண்டிருக்கவேண்டும். இதற்கு கதர் பீசும் நூலும் ஏராளமாக தேவையாக இருக்கும். வேலை செய்வோருக்கு போதிய வேலை இல்லாவிட்டால் நஷ்டம் ஏற்படும். இந்த காரணத்தினல் எல்லா இடத்திலும் சாய அச்சு வேலை வைத்துக் கொள்வது சாத்தியமில்லை. குடிசை தொழிலாக இருந்தபோதிலும், தொழிற்சாலை முறையில்தான் நடத்தவேண்டியிருக்கிறது. தொழிற்சாலையாக நடத்துவதற்கு நிர்வாக கவனமும், திறமையும் மிக அவசியம்.

அச்சு சாயம் போடுவதற்காக சர்க்கா சங்கம் கதரை வெளி வியாபாரிகளிடத்தில் கொடுக்கமுடியாது. இதர சாய தொழிற்சாலைகள் மில் நூலையும், மில் ஜவுளியையும் சாயமிடுவதினல் அவைகளுடன் கதரை கலந்து சாயம், அச்சு இடுவது முறையல்ல. மில் நூலிலும் மில் துணியிலும் சம்பந்தமுள்ளவரிடத்தில் நமது கதரை எப்படி ஒப்புவிக்கமுடியும்? வேறு, மில் நூல் துணி வேலை

யில்லாமல், கதர்மட்டுமே சாய அச்சு போடக்கூடிய தனிப்பட்ட நபர்கள் முன்வருவது அபூர்வம். அவர்களுக்குக் கதர்மூலம் போதுமான வேலை கிடைக்காததால் கட்டிவராது. மேலும் தனி வியாபாரிகள் லாபத்தையே முக்கியமாக கருதுவதால் சங்கத்தைப்போல் நல்ல சாயம் போடுவது சாத்தியமாகாது. தியாக மனப்பான்மையுடன் கதர் அன்பர்களை திருப்தி செய்யவேண்டும் என்று எண்ணும் தனி வியாபாரிகள் அரிது. இதற்காகவே சர்க்கா சங்கம் சொந்தமாக அச்சு-சாயசாலை நடத்துவது அவசியமென்று கருதுகிறது. ஆதலால் அநேகமாக ஒவ்வொரு மாகாண சர்க்கா சங்க கிளையிலும் அச்சு-சாயசாலை இருக்கிறது.

அச்சு சாயசாலையின் நிர்வாக வேலைமுறை பற்றியும் பொதுவான சிலவிஷயங்களை மட்டும் இங்கு குறிப்பிடுவது போதுமானது என்று கருதுகிறோம்.

முன்னால் சொன்னது போல சுயதேவைக்கதருக்கும், விற்பனை கதருக்கும் அச்சு-சாயம் மிக அவசியம். இந்த வேலையை துரிதமாகவும், திறமையாகவும் செய்வதை பொறுத்துதான் சுய தேவைக் கதர் அபிவிருத்தி இருக்கிறது என்று சொல்லலாம். கீழ்கண்ட முக்கியமான விஷயங்கள் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

1. குறைந்த மூலதனத்தில் வேலையை நடத்துவது.

2. சாயம் போகாமலும், திடமாகவும், சாயத்தில் கதரன்பர்களுக்கு திருப்தி கொடுக்கும்படியும், சாஸ்திர முறைப்படியும், சிக்கனமாகவும் சாயமிடுவது.

3. லாபத்தை முக்கியமாக நோக்காமல், குறைந்த சார்ஜுக்கு அச்சு, சாயம் போட்டு கொடுப்பது.

4. சாயத்தில் புதிய புதிய ரகங்களை லாபரட்டரியில் ஆராய்ச்சி செய்து, கதரை வசீகரமாகச் செய்து, திராவகங்களால் அதன் பலம் குறையாமல் பாதுகாத்து கதரை கதரன்பர்களுக்கு பரப்புவது.

5. சாய தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களின் கலைத்திறமைக்கு ஊக்கம் கொடுத்து அவர்களுடைய திறமையையும், வாழ்க்கையையும் அபிவிருத்தி செய்வது.

6. காலத்திற்கேற்றவாறு கதர் அன்பர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் கிளைகளின் தேவை நமூனுக்களை நன்ருக ஆராய்ச்சி செய்து கூடுமானவரை துரிதமாகவும், திருப்திகரமாகவும் அச்சு சாயம் போட்டுக் கொடுக்கவேண்டும்.

7. காற்று மழை காலங்களுக்கு முன்னுல் தேவையான சாய அச்சு சாமான்களை சேகரம் செய்து வைக்கவேண்டும். அத்துடன் மார்க்கெட் நிலவரத்துக்கு தகுந்தாற்போல், மருந்து, திராவக சாமான்களை எல்லாம் முன்னதாக சேகரித்துக் கொள்ளவேண்டும்.

8. அதிகமாக அச்சு-சாயம் இட்ட கதர் தேவையாக இருக்கும் பொழுது, எல்லோருக்கும் உபயோகப்படக் கூடிய கதர் ரகம் எவ்வளவு அதிகமாக அச்சு சாயம் போடமுடியுமோ, அம்மாதிரி செய்து அதிக அன்பர்களை

திருப்தி செய்ய வேண்டும். அப்பொழுது ஒரு நிறம் அல்லது இரண்டு நிறத்துக்கு மேல் அச்சு போடக் கூடாது.

9. சாவகாசமாக இருக்கும் பொழுது வசீகர ரகங்கள், டேபிள் கிளாத், கர்ட்டன், ஸ்கிரீன் முதலிய வசீகரமான ரகங்களை தயார் செய்வதில் காலத்தை உபயோகப்படுத்த வேண்டும். நான்கு அல்லது ஐந்து கலர் வசீகரமான ரகங்கள் தயார் செய்யலாம். இப்படி செய்தால் சாய இலாக்காவில் வேலை தொடர்ந்து நடத்த முடியும். புதிய கதர் ரகங்களும் அபிவிருத்தியடைந்து கதர் அதிகமாக பரவும். தொழில் செய்வோருக்கு நிரந்தரமாக வேலையும் கொடுக்கலாம்.

10. தொழிலாளிகள் எல்லோரும் அவர்கள் செய்யும் தொழில் கலையில் விசேஷ சிரத்தை எடுத்துகொண்டு, அவர்கள் செய்யும் வேலையின் அருமையை அவர்களே உணர்ந்து ரஸித்து அனுபவிக்கும்படி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தொழிலாளர்களின் தன் மதிப்பும் கலை உணர்ச்சியும் வளரும். மனித மதிப்பை உயர்த்துவதும், மனிதனின் உள் சக்தியை வெளியே இழுத்து ஜனசேவைக்கு உபயோகப்படுத்துவதும் கதர் ஸேவையின் முக்கிய நோக்கம். இதற்கு விசேஷ சந்தர்ப்பம் சாய அச்சு இலாகாவில் இருப்பதை கதர் ஊழியர்கள் உணர்ந்து பூரணமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதுவரை கலையின் பெயராலும், நாகரீகத்தின் பெயராலும் வியாபார மனோபாவத்துடன் நாம் நகர வாசிகளை திருப்தி செய்யவே முயற்சித்து வந்தோம். கிராம மக்கள் புராதனமாக உபயோகப்படுத்தி வந்த சாயங்களையும், அச்சுகளையும் நாம் கவனிப்பதில்லை. சுகாதாரத்திற்கும், இயற்கைக்கும் சீதோஷ்ண ஸ்திதிக்கும் பொருத்தமான முறையில் நமது கிராம நாகரீகமும், கலையும் அமைந்திருக்கிறது. ஆகையினால் நகரநாகரீகத்தை கிராம மக்களுக்கு கொண்டு போவதற்கு பதிலாக, கிராமத்திலுள்ள நாகரீகத்தை நாம் நன்றாக ஆராய்ந்து அதை காப்பாற்ற முயற்சிக்க வேண்டும். அவசியமானால் அதை காலத்திற்கேற்றாற்போல் சிறிது மாற்ற முயற்சிக்கலாம். நமது சாய அச்சு வேலைகள் எல்லாம் முதலில் கிராம மக்களின் தேவையையும், கலாசாரத்தையும் பூர்த்தி செய்யவேண்டும். நகர வஸ்திராலயங்களுக்காக மேஜை விரிப்பு, கதவு, ஜன்னல், படுக்கை விரிப்போ, திரையோ, போடுவதற்குமுன் கிராம மக்களுக்கு தேவையான புடவை, சீட்டி முதலியவைகள் அச்சு-சாயமிட்டு கொடுப்பது நமது கடமை. கிராமத்திலுள்ள நமது நூற்போர்களையும், நெய்வோர்களையும், மற்ற கிராமவாசிகளையும் திருப்தி செய்த பிறகுதான் நகரத்திலுள்ளவர்களின் தேவையை கவனிக்கவேண்டும். தமிழ் நாட்டில் முக்கியமாக ஸ்திரீகள் அதிகமாக கலர் உபயோகப்படுத்துகிறார்கள். ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் கலர் தேவையை பூர்த்தி செய்து கொடுக்கவேண்டும். ஆண்களுக்கு வேண்டிய கதர் ரகங்களை பிறகுதான் கவனிக்க வேண்டும்.

இதற்கு முன்னால், கதர் அதிகமாக விற்க வேண்டுமென்ற எண்ணத்தினால் பஞ்சாப், ஐக்ய மாகாணம் முதலிய இடங்களிலிருந்து அச்சு-சாயமிட்ட ரகங்களை தருவித்து விற்றோம். மாகாண சுயதேவைக்கு இதனால் நீங்கு விளைந்ததைக் கண்டு, இனி அம்மாதிரி செய்வது தவறு என்பதை அறிந்தோம். இந்த முறையினால் நம் மாகாணத்திலுள்ள அச்சு சாயம் போடுவோருக்கு வேலை இல்லாமலும், மாகாணக் கதர் விற்காமலும் போகக்கூடும். ஆதலால் ஒவ்வொரு மாகாணமும் பிறமாகாணத்திலுள்ள அச்சு சாய விசேஷ கலைகளைக்கற்று, அந்தந்த மாகாண நிலைக்கு தகுந்தாற்போல் மாறுதல்கள் செய்து, தமது அச்சு-சாய கலையை அபிவிருத்தி செய்வதுடன் மாகாணக் கதரை வெளிமாகாணக் கதரைபோல வசீகரமாக்கி, மக்களிடையே தத்துவத்துடன் கதர் பிரசாரம் செய்ய வேண்டும்.

---

## V

## நூற்புக் கருவி இலாகா.

சர்க்கா சங்கத்தில் நூற்புக்கருவிகள் தயார்செய்து கொடுப்பது முக்கிய வேலையாகும். அதற்காக ஒரு தனி இலாகா அவசியம். பொதுவாக ராட்டையும் மற்ற கருவிகளும் ஒவ்வொரு ஸ்தலத்திலேயே கிடைக்கும் மூலப் பொருள்களைக்கொண்டு ஆங்காங்குள்ள தச்சர், கொல்லர் முதலியவர்களைக்கொண்டு தயார் செய்வது

தத்துவ முறையாகும். இதனுல் தேவையான கருவிகள் ஸ்தலத்திலேயே உற்பத்தியாகும்படி செய்ய முடியும். உற்பத்தியான கருவிகளை செய்த இடத்திலேயே பழுது பார்க்க இயலும். கருவி உற்பத்திக்காகவும், சுயதேவை மூலம் கிடைக்கக்கூடிய நன்மைகளுக்காகவும் கருவிகள் ஸ்தலத்திலேயே செய்யவேண்டும். கிராம வண்டிகள் கிராம தச்சரும் கொல்லரும் செய்து, பழுதுபார்த்து கொடுப்பதுபோல் ராட்டையும் கிராமத்திலேயே செய்வது நமது லக்ஷியம்.

இருந்தாலும் ஆரம்ப காலத்தில், நல்ல இராட்டை கருவிகள் செய்ய அனுபவம் உள்ள தொழிலாளிகளும், மூலப்பொருள்களுக்கு இடவசதியுள்ள இடத்திலேயே செய்ய நேரிடுகிறது. இதை ஓரளவு குவியல் முறையில் நடத்தவேண்டியிருக்கிறது. யுத்த காலத்திலும் அதற்கு பின்னும் கருவி செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள் கள் கிடைப்பது அரிது. கருவிகளின் இரும்பு பாகங்கள் சுத்தமாக முறைப்படி செய்வதற்கு லேத் தேவையாக இருக்கிறது. இதற்காக இரும்பு, கம்பி, ஸ்குரு (Screw) ஆணி முதலியவை எல்லாம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. தற்கால சர்க்காவுக்கு (Kisan & Box) அதிகமாக இரும்பு, ஸ்ஃகு, பாகங்கள் தேவையாக இருப்பதனுல் இவை செய்ய தொழிற்சாலையும் தேவையாகிவிட்டது. இதற்கு சில இடங்களில் மின்சாரத்தின் அவசியமும் ஏற்பட்டுவிட்டது. தற்சமயமுள்ள விசேஷ காரணத்தினுல் யந்திரஉதவியைக்கொண்டே ராட்டையின் பலபாகங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பொழுதுள்ள நெருக்கடியில் கிராமத்திலுள்ள நூற்போருக்கு கருவிகள் கொடுக்க

முடிந்தபோதிலும், பிற்காலத்தில் சீக்கிரமாக பரவல் முறையில் அமைந்து ஒவ்வொரு ஸ்தலத்திலும் ராட்டை உற்பத்தி செய்யப்படவேண்டும்.

இராட்டையும் மற்ற கருவிகளும் தயார் செய்வதில் அதிக திறமையும், சாஸ்திர முறையும் அவசியம். ஆகையால் சர்க்கா சங்கம் ராட்டை தயாரிப்பதில் அதிக பொறுப்பு எடுத்துகொள்ளவேண்டியிருக்கிறது.

சாஸ்திரப்படி செய்த சாமான்கள் லாப நோக்கமில்லாமலும், நஷ்டமில்லாமலும் நியாயமான விலைக்கு வினியோகிக்கும் பொறுப்பை ஏடுத்துக்கொள்ளக்கூடியது சர்க்கா சங்கம். கதருடன் கதரை உற்பத்தி செய்யக் கூடிய கருவிகளும் கொடுத்தால்தான் சுயதேவைக்கு நூற்பது பரவும். கருவிகளை கொடுக்காமல் கதரைமட்டும் கொடுத்தால், விற்பனையுடன் நின்றுவிடும். சுயதேவை பரவாது.

சாயச்சாலைமாதிரி இதற்கும் அதிக மூலதனம் தேவை. இதற்கு காட்டிலிருந்து மரம் முதற்கொண்டு எல்லா மூலப்பொருள்களும் குறைந்த விலையில் நல்ல சாமானை வாங்கி வைத்துக்கொள்ளவேண்டும். மரத்தை நன்றாக எல்லா பருவங்களிலும் வைத்திருந்து பதப்படும்படி செய்யவேண்டும். இதற்காக சூளை (Kin) யிலும் சீசன் (Season) செய்து கொள்ளலாம். தேக்கு, பில்ல மருது இவைகள் தகுந்தவை. சக்கரத்திற்கு எல்லாம் தேக்குமரம்தான் போடுவது நலம். இராட்டையைப்

பற்றி பல புத்தகங்கள் வெளியிட்டுள்ளோம். பொதுவாக நூற்புக்கருவி உற்பத்தியை மட்டும் பற்றி இங்கு சொன்னால் போதுமானது.

கீழ்கண்ட விஷயங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டும்.

1. இராட்டை முதலிய எல்லா நூற்பு கருவிகளையும் சாஸ்திர முறைப்படி, நல்ல மூலப் பொருள்களைக் கொண்டு, சிக்கனமான விலையில் தயாரிக்கவேண்டும்.

2. ஒவ்வொரு சாமானும் வெளியில் அனுப்புவதற்கு முன் சரியாக வேலை செய்கிறதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். சரியில்லாததை விற்பனைக்கு அனுப்பக் கூடாது.

3. சங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாமலும், லாபமில்லாமலும், கருவிகளின் விலையை நியாயமாக நிர்ணயிக்க வேண்டும்.

4. பேக்கிங் செய்து அனுப்பும்பொழுது உடையாமலும், சேதமாகாமலும் ஜாக்கிரதையாக அனுப்பவேண்டும். ஒவ்வொரு மூட்டையிலும் பேக் செய்தவர், எண்ணியவர், தேதி முதலிய விபரம் காணப்படவேண்டும்.

5. நாம் தயாரிக்கும் இராட்டை முதலிய எல்லா கருவிகளுக்கும் உபரி பாகங்கள் (Spare parts) கிளைகளுக்கு அனுப்பவேண்டும். இவைகள் கருவிகளுக்கு சுலபமாக பொருந்தவேண்டும். இல்லாவிட்டால் உபயோகப்படாதுபோகும்.

6. எந்த சிறிய சாமானாக இருந்தாலும் ஒருவித குறையுமில்லாமல் பார்த்து அனுப்பினால்தான் வாங்குவோருக்கு பயன்படும். ராட்டை எவ்வளவு நன்றாக இருந்தாலும், கதிரோ, கதிர் தாங்கியோ, சரியாக இல்லாவிட்டால் நூற்பதையே பாதிக்கும். எவ்வளவுக் கெவ்வளவு ராட்டை, சப்தமில்லாமல் கதிர் கோட்டமில்லாமல் வேலை செய்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நூற்போருக்கு சிரத்தையும், சந்தோஷமும் உண்டாகிறது. அவர்களை விடாமல் நூற்கத்தூண்டும். அவர்கள் நூற்பதில் மன சாந்தி அடைவார்கள். அப்படியில்லாமல் பழுதுள்ள கருவிகள் கொடுப்பதினால் நூற்றுக்கணக்கான இராட்டைகள் வேலைசெய்யாமல் நின்றுவிடுகின்றன. இது சம்பந்தமாக ஆச்சாரியா விநோபாஜி காந்தி நகரில் பேசியதை பிரிதோரிடத்தில் காணலாம்.

7. ராட்டை பழுதுபார்ப்பது மிகவும் முக்கியமான வேலை. இதற்கு எல்லா வஸ்திராலயங்களிலும் தகுந்த ஏற்பாடுகள் தேவை.

8. எங்கெங்கு இடங்களில் இராட்டையின் மர பாகங்கள் உற்பத்தி செய்யப்படுகிறதோ, அந்த இடங்களுக்கு கிடைக்காத இரும்பு பாகங்கள் அனுப்பிக் கொடுத்தால் ஸ்தலத்திலேயே ராட்டைகளை பூர்த்தி செய்து பூட்ட (assembly) உதவியாக இருக்கும். இதற்கு சர்க்கா சங்கம் போதிய உதவி செய்யவேண்டும்.

கூலிக்காக நூற்பதைவிட சுயதேவைக்காக நூற்பதைப் பரப்புவதே சர்க்காசங்கத்தின் லக்ஷியம். ஆகையால் சுயதேவை நூற்போருக்கே முதலில் ராட்டை

கருவிகள் கொடுக்கவேண்டும். நூற்புக் கலையைப் பரப்ப ஆதாரபள்ளிகள் முன்வந்திருக்கின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மூலமாக, அவர்கள் வீட்டிலும் நூற்றல் பரவக்கூடும். அதேபோல் ஆதாரக்கல்வி ஆசிரியர்களுக்கும், நூற்பில் பற்றுள்ள மற்ற ஆசிரியர்களுக்கும் பிறருக்கு கற்றுக்கொடுக்கவோ தங்கள் சுய தேவைக்கோ ராட்டை கருவிகள் தேவையாகும்பொழுது, அடுத்தபடியாக அவர்களுக்கே கொடுத்து உதவி செய்ய வேண்டும். கடைசியாகத்தான் ஜீவனத்திற்குமட்டும் நூற்போருக்கு கொடுக்கலாம். ஆங்காங்கு வீடுகளில் உள்ள ராட்டைகளை பழுதுபார்த்து கொடுத்தால் புதிய ராட்டைகளுக்கு அதிக தேவை இராது.

உற்பத்தி ஸ்தலத்தில் உள்ள நூற்போர்களுக்கு 1936-1938 ல் விசை சக்கரங்கள் வைத்துக் கொடுத்தோம். அவைகள் எல்லாம் அநேகமாக கெட்டுபோய் விட்டன. அவைகளை மாற்றி புதிய விசை சக்கரம் வைத்துக் கொடுத்தால் நூற்பின் வேகம் அதிகமாகி சுயதேவைக்காக நூல் அதிகம் கொடுப்பார்கள். நூற்போர்களின் இந்த தேவையை பூர்த்தி செய்வது சர்க்கா சங்கத்தின் முக்கிய வேலை. ராட்டைகள் கெட்டு விட்டமையால் நூற்போர்களின் நூலின் வேகமும், அவர்களின் வருமானமும் குறைந்து போய்விட்டது. தவிர நூலின் முறுக்கும் பலமும் குறைந்துபோய் கதரும் நீண்ட நாள் நிற்பதில்லை. ஆதலால் சுயதேவைக்காகவும், வியாபாரத்திற்காகவும் நூற்கும் நூலை திருத்துவதற்கு விசை சக்கரம் சப்ளை செய்தால் தான் நூற்பவர்களுக்கு ஜீவாதாரச் சம்பளம் கிடைக்கும்.

வஸ்திராலயத்திலும், ராட்டைஸ்டோரிலும், கருவிகளை அழகாகவும், வசீகரமாகவும் வைக்கவேண்டும். இந்த அஹிம்சை ஆயுதங்களை விறகு கட்டைகள் போல தாசி படிந்து மூலைமுடுக்கில் உடைந்தும் கட்டு சாமானுடன் போட்டும் வைத்திருப்பது முறையல்ல. சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றக் கூடிய இந்த உற்பத்திகருவிகளை அலக்ஷியமாக வைத்திருக்கக்கூடாது.

## ஆராய்ச்சி. (Research.)

ராட்டையில் செய்யவேண்டிய சீர்திருத்தம் பல இருக்கின்றன. புராதன ராட்டைக்கும் தற் காலத்திய ராட்டைக்கும் அதிக வித்யாசம் உண்டு. எரவாடா ராட்டை (Box charka) மகாத்மா தான் எர்வாடா ஜெயிலில் கண்டுபிடித்தார். அதற்கு பிறகு மகன் சர்க்கா கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கடுத்தபடி தனுஷ் தக்ளி; பஞ்சு உடைக்கும் மிஷன்பின்னல் செய்யப்பட்டது. இதற்கு மேல் விசேஷமான அபிவிருத்தி செய்யப்பட வில்லை. மணிக்கு சுமார் 2000 கஜம் நூற்கக்கூடிய புதிய சர்க்கா சொற்ப விலையில் கண்டுபிடிப்போருக்கு ஒரு லட்சம் ரூபாய் பரிசு கொடுப்பதாக சர்க்கா சங்கம் 1929 ல் அறிவித்தது. பலவித ராட்டைகள் காண்பிக்கப்பட்டன. ஆனால் பரிசின் நிபந்தனைப்படி தகுதியுள்ள ராட்டை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுசம்பந்தமாக இன்னும் பலர் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இம்மாதிரி புதிய ராட்டைகள் கண்டு பிடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து முயற்சி செய்வார்கள்

என நம்புகிறோம். ஜப்பானில் யுத்தத்திற்கு பிறகு சமீப காலத்தில் புதிய ராட்டை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிகிறது. அதை பார்க்க சர்க்கா சங்க கோஷ்டி ஒன்று இவ்வருஷம் ஜப்பான் செல்கிறது.

நூற்பதின் மூலம் எல்லோருக்கும் வேலை கிடைக்க வேண்டும் என்று சங்கத்தின் முக்கிய நோக்கம் இருந்தபொழுது வேகமாக நூற்கும் புதிய ராட்டை அவசியமாக இருந்தது. ஆனால் தத்துவபூர்வமாக சுய தேவைக்கு நூற்பதை பிரசாரம் செய்யவேண்டுமென்று சங்கம் தீர்மானித்தபிறகு ஒவ்வொருவரும் சுயதேவைக்கு அனுகூலமாக சமமாகவும், முறுக்குள்ளதுமான நூல் நூற்பதற்கும், வீட்டில் தானே பஞ்சடித்துக் கொள் வதற்கும், பருத்தி சாகுபடி செய்வதற்கும் அவசியமான பயிற்சி கொடுப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டி யிருக்கிறது. வேகமாக நூற்பதைவிட சுலபமாக நெய் வதற்கும், கதர் நெடுநாள் உழைப்பதற்கும் தேவையான நூல் நூற்பதே தற்சமயம் அதிக மகத்துவம் பெற்றுவிட் டது. தினம் ஒருமணி மெதுவாக நூற்றாலும் வருஷத்தில் சுலபமாக 25 கஜம் கதருக்கு சுமார் 120 சிட்டம் நூற்று விடலாம். மேலும் இப்படி நூற்கும் நூல் மிக நன்றாக இருந்தால் அதிலிருந்து தயாரான கதர் ஒரு வருஷத்திற்கு பதிலாக இரு வருஷங்களுக்கு உழைக்கும். இந்த நோக்கத் துடன் நூல் நூற்றவர்களே வீட்டில் நெய்து கொள்ளும் பொருட்டு நூலை ஈரிழையாக முறுக்குவதற்கு ஈரிழை முறுக்கு ராட்டை கண்டு பிடித்துள்ளார்கள். இதில் நூற்று கொண்டே ஈரிழை நூலும் தயார் செய்யலாம்.

முறுக்கும் நேரம் மிச்சமாகும். நூற்பதற்கு வேண்டிய பட்டையும் சுயதேவை முறையில் செய்து கொண்டால் அதில் நூற்கும் நூல் இன்னும் பலமாகவும், சமமாகவும் இருக்கும். இதற்கு வேண்டிய துணை கருவிகள் முதலியவைகளை நூற்புக்கருவி இலாகா கதரன்பர்களுக்கு ஏராளமாக கொடுக்க வேண்டும். அத்துடன் பருத்தி அரைக்கவும், பட்டை பஞ்சு தயாரிக்கவும் வில், நரம்பு, பணை முதலிய கருவிகளையும் கொடுக்க வேண்டும். சுயதேவை நூற்போருக்கு பஞ்சு வெட்ட சௌகரியத்திற்காக ராட்டையிலேயே பஞ்சடிக்கும் ஒரு சிறிய சாதனத்தை கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் இது இன்னும் பூரணமாகவில்லை. இது சம்பந்தமாக ஆராய்ச்சி நடந்து வருகிறது. இதுவும் நகர சுயதேவை நூற்போருக்கும், மத்ய வகுப்பாருக்குமே தவிர கிராம வாசிகளுக்கு பயன்படாது.

உற்பத்தியாகும் இடத்தில் உள்ள சாமான்களை எல்லாம் வீணாக்காமல் சிக்கனமாக உபயோகிக்க வேண்டும். காலாகாலத்தில் தேவைக்கு மட்டும் வாங்கிக் கொள்ளவேண்டும். இதற்கு கணக்கும் ஸ்டாக் புக்கும் அவசியம். யுக்தியாலும் புத்தியாலும் சாமான்களை வீணாக்காமல் பாதுகாக்க வேண்டும். கைவசமுள்ள மூலப்பொருள்களுக்கு தகுந்தாற்போல் வேலையில் உபயோககரமான மாறுதல்கள் செய்யலாம். எப்பொழுதும் யோசனை, ஆராய்ச்சி, சிக்கனம், பொது சொத்தை பாதுகாக்கும் சிரத்தை, இவை மிக அவசியம். இரண்டு ஆணி போட வேண்டியதற்கு பதிலாக அதிகம் போடுவது, இரும்பு, கம்பி, தகடுகள், மரத்துண்டுகளை வீணாக்குவது

பாரத்தை சேதப்படுத்துவது போன்ற தவறுதல்கள் இல்லாமல், அடக்க விலையை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்து அந்த லாபத்தை கதரன்பர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். நமது கருவிகள் சாஸ்திர முறையில் பார்வையாகவும் இருக்க வேண்டும். அடக்க விலை நிர்ணயிப்பது தற்கால யந்திரசாலைகளில் ஒரு கலை. ஒரு பைசாவில் கூட தசாம்சத்தில் கணக்கிட்டு அடக்க விலை நிர்ணயிக்கப்படுகிறது. அவர்கள் தங்கள் லாபத்தை கருதி இதர உற்பத்தியாளர்களுடன் போட்டி போடுவதற்கு இம்மாதிரி செய்கிறார்கள். ஆனால் நாம் இந்த முறையில் கணக்கிட்டு எவ்வளவு சிக்கனப்படுத்தமுடியுமோ அவ்வளவு சிக்கனப்படுத்தி, மக்களுக்கு சேவை செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

எல்லா மிஷின்களையும், மிஷின் கருவிகளையும் சுத்தம் செய்து எண்ணெயிட்டு பழுதாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வேலை செய்யுமிடம் தூசு படியாமல் சுத்தமாக இருக்க வேண்டும். யந்திரம் பழுது பட்டால் வேலை பாதிக்கப்படும். ஆகையால் முன் எச்சரிக்கையுடன் மிஷின், மின்சார யந்திரம், கன்னார் உலை தச்சுப்பட்டரை முதலியவை சுத்தமாக வைத்திருப்பது, மரம், மூலப் பொருள்கள் தேவையான அளவுக்கு சேகரித்து வைப்பது போன்ற வேலைகள் தொழிற்சாலையில் திறமையாக நடைபெறும்படி பார்த்துக் கொள்வது கடமையாகும்.

ராட்டைக்கருவி தொழிற்சாலையின் மகத்துவத்தைப் பற்றி ஆச்சாரிய வினோபாஜி 19-5-1949 ல் காந்திநகரில் பேசியதை நாம் மறக்கமுடியாது. அவர் பேசியதாவது:

"இங்கே அநேக தொழிற்சாலைகள் நடக்கின்றனவே அவற்றையெல்லாம் நான் இப்பொழுது பார்த்தேன். இங்கிருந்து எத்தனையோ கிராமங்களுக்குச் சாமான்கள் போகின்றன. ஆனால் கிராமங்களுக்குப்போகும் எல்லா சாமான்களும் சிறந்த வகையில் அமைந்திருக்க வேண்டுமென்பதை நாம் மறக்கக்கூடாது. இந்தியாவின் பலவிடங்களில் தொழிலாளர்கள் பழுதுபட்ட கருவிகளைக்கொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டே வேலை செய்கிறார்களேதவிர, அவற்றை ஒழுங்கு செய்து வீண் சிரமப்படாமல் வேலை செய்வோமேயென்று எண்ணுவதில்லை. நாம் இங்கிருந்து அனுப்பும் ஒவ்வொரு ராட்டையின் ஒவ்வொரு பகுதியும் நம்பகமானதாயிருக்கவேண்டும். நம்பகமான நல்ல ராட்டை எது என்பதை கண்டுபிடிப்பதற்கு உரியவழி அது சத்தமில்லாமல் சுற்றுகிறதா? சக்கரத்தைச்சுற்றும்பொழுது கைக்கு பாரமில்லாமல் சுற்ற முடிகிறதா? என்பதைப் பார்ப்பதேயாகும். இவ்வாறு ஒழுங்காக முறைப்படி செய்யப்படாத ராட்டையைச் சுற்றுவதும் சிரமமாயிருக்கும். எப்படியோ சுற்றினாலும் பலமாகச்சத்தம் போடும். நல்ல ராட்டையொன்று ஒருவருக்குச் சுற்றக் கிடைக்குமானால் அதனால் சுற்றுகிறவர்களுடைய மனம் மகிழ்ச்சியடையும். கலங்கியுள்ள மனதிற்கு அமைதி கிட்டும்.

"பெரிய அளவில் வேலை நடந்து ஏராளமான ராட்டைகளை குறைந்த காலத்திற்குள் செய்யவேண்டி வருகையில் இவ்வளவு தூரம் கவனிப்பதற்குச் சமயம் எங்கே கிடைக்கிறதென்று நாம் சொல்வதுண்டு. ஆனால் மேல் நாட்டார் இப்படியெல்லாம் சொல்வதில்லை.

அவர்கள் தம் தொழிற்சாலைகளில் தயாராகும் கருவிகள் எல்லாம் முறைப்படி சிறந்த வகையில் அமைந்திருக்க வேண்டுமென்பதில் பெரிதும் கவனம் செலுத்துகிறார்கள். இதனாலேயே அவர்களுடைய வியாபாரம் உலகமெங்கும் நடக்கிறது. ஸேவை மனப்பான்மை என்பது இதுவே. வியாபாரத்திலும் ஸேவை மனப்பான்மையிருக்கவேண்டும். நாம் ஆயிரம் ராட்டைகள் தயாரித்தாலென்ன, வாங்குகிறவர் ஒரு ராட்டைதானே வாங்கப்போகிறார். அந்த ஒன்றும் நன்றாயில்லை என்றால் அவருக்கு அதனால் தொந்திரவே ஏற்படுகிறது. ஆகையால் ஒவ்வொரு ராட்டையையும் நாம் இங்கேயே சுற்றிப்பார்க்கவேண்டும். குறை ஏதேனு மிருந்தால் அதை உடனே திருத்திவிடவேண்டும். அதை திருத்தமுடியாதபொழுது அதை உடைத்துப்போடலாமே தவிர விற்கக்கூடாது. நாம் இவ்வாறு செய்வதனால் நமது மதிப்பு பெருகுவதோடு நம்மால் மக்களுக்கு உண்மையான சேவை செய்வதும் சாத்தியமாகும்.

* * *

இந்தத் தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு வாழ்க்கை யென்னும் தொழிற்சாலையும் சிறந்த முறையில் நடக்க வேண்டும் என்ற போதனையை நீங்கள் பெற வேண்டும். நீங்கள் காந்திநகரில் வேலை செய்கிறீர்கள். நீங்கள் காந்திஜியின் பெயரை வைத்திருப்பதால் இங்கே உள்ள தொழிலாளர்களின் வாழ்க்கையில் நீங்கள் பிரவேசிக்கவேண்டும். அவர்களுக்கும் நமக்கும் வித்தியாசமெதுவும் இருக்கக் கூடாது. அந்த நிலைமை ஏற்படும் பொழுது தான் காந்திஜியின் பெயரை வைத்துக் கொள்வதற்கு உங்களுக்குத் தகுதி ஏற்படும்."

# VI

## காதி வித்யாலயம்.

சர்க்கா சங்கத்தின் லக்ஷியம் பரவ வேண்டுமானல் பயிற்சி பெற்ற தொண்டர்கள் அவசியம். அத்தொண்டர்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு காதி வித்யாலயம் சங்கத்தின் முக்யமான அம்சமாகும். சங்கத்தின் வேலையே காதி வித்யாலயத்தை பொறுத்துதான் இருக்கும் என்றே சொல்லலாம். காதி வித்யாலயத்தின் மகத்துவம் அளவற்றது. இதை ஆசிரியர்களும் மாணவர்களும் நன்ருக அறிந்து கொள்ளவேண்டும். ஆசிரியர்களுக்கு பொறுப்பும் கடமையும் அதிகம். அவர்களை பொறுத்துதான் வித்யாலயத்தின் வெற்றி இருக்கும். ஆகையால் வித்யாலய வேலை திட்டம், பயிற்சிமுறை, பண்புகள், வாழ்க்கைமுறை முதலியவைகளை நன்கு ஆராயவேண்டும்.

காதி வித்யாலயங்களுக்கு பாடத் திட்டம் வகுப்பதற்கும், பரீட்சைகள் நடத்துவதற்கும், வித்யாலயங்களை மேல்பார்வை பார்ப்பதற்கும் சர்க்கா சங்கத்தில் சிக்ஷா சமிதி நியமிக்கப்பட்டிருக்கிறது. எல்லா மாகாணங்களிலும் உள்ள காதி வித்யாலயங்கள் அகில இந்திய சிக்ஷா சமிதியின் கீழ் நடைபெற்று வருகின்றன.

தற்பொழுது கதாயி (நூற்பு) தொண்டர் பயிற்சி, துபட்டா (ஈரிழை) பயிற்சி, துணயி (நெசவு) தொண்டர் பயிற்சி, 'காதி பிரவேசிகா' பயிற்சி என்று நான்கு வித

பயிற்சி பாடத்திட்டம் அமுலில் இருக்கிறது. முதல் பயிற்சி திட்டம் ஆறுமாதகாலம்; இரண்டாவது பயிற்சியும் ஆறுமாதகாலம். நெசவு பயிற்சியும், காதி பிரவேசிகாவும் ஒவ்வொன்றும் ஒரு வருஷ காலம். நூற்பு பயிற்சி திட்டத்தில் பருத்தி அரைப்பதிலிருந்து துபட்டர் நூற்பு வரையிலும், ஈரிழை நெசவு பயிற்சியில் நூலை ஈரிழையாக்கி நெய்வதிலும் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

நெசவு பயிற்சியில் 27" முதல் 45" அகலம் வரையிலும் நெய்வதற்கு கற்றுக் கொடுக்கப்படுகிறது. காதி பிரவேசிகா பயிற்சியில் பருத்தி அரைப்பதிலிருந்து, துபட்டா நெசவு வரையிலும் எல்லா வேலை முறையும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

மேலே கண்ட பாடத்திட்டங்களுடன் கதர், இதர நிர்மாணத்திட்டங்கள், காந்திய பொருளாதார வாழ்க்கை தத்துவங்கள், பொது அறிவு முதலியவைகளும் போதிக்கப்படும். பயிற்சியில்சேரும் மாணவர்கள் 25 வயதிற்கு குறைந்தவர்களாகவும், குறைந்த பட்சம் E. S. L. C. தேறியவர்களாகவும் இருந்தால்தான் பயிற்சியில் சுலபமாக தேறமுடியும். இந்த பரீட்சைகளில் எதாவது ஒன்றில் எல்லா கதர் தொண்டர்களும் தேற வேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. சர்க்கா சங்க தொண்டர்களுக்கு பயிற்சி கொடுப்பது வித்தியாலயத்தின் முதல் நோக்கம். வெளி மாணவர்களும் சேர்ந்து கொள்ளலாம். முதலில் இரண்டு மாதம் அவர்கள் தங்களுடைய சொந்த செலவிலேயே வித்யாலயத்தில் பயிற்சி பெறவேண்டும். பயிற்சி காலத்தில் அவர்கள் திறமை, சிரத்தை, அறிவு,

ஒழுக்கம் முதலியவைகளில் திருப்தியாக இருந்தால் சங்கத்தின் உபகார சம்பளத்துடன் பூரண பயிற்சி பெறலாம். சங்கத்தின் உபகார சம்பளம் மாதம் ரூ. 25 முதல் ரூ. 30 வரையில் இருக்கும். உபகார சம்பளத்துடன் பயிற்சி பெற்றவர்கள் சங்கத்தில் குறைந்தது 3 வருஷ காலம் சங்கம் கொடுக்கும் ஊதியத்தில் குறிப்பிட்ட வேலை செய்ய வேண்டும். தன் சொந்த செலவிலேயே பூரு பயிற்சி பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு சங்கத்தில் வேலை செய்ய வேண்டுமென்ற நிபந்தனை இல்லை.

பயிற்சி நிபந்தனைகள் அகில இந்திய சிக்ஷா சமிதியினால் அவ்வப்பொழுது தகுந்தவாறு மாற்றப்படும். சிக்ஷா சமிதியின் பரீட்சைகளில் தேறியவர்களுக்கு சமிதியின் அத்தாட்சி பத்திரம் வழங்கப்படும். ஒரு முறை பயிற்சியில் தேருதவர்கள் மறுமுறையும் பரீட்சையில் உட்காரலாம். வித்யாலயப் பயிற்சித்திட்டத்தைப் பற்றிய பூரு விபரங்களையும் வித்யாலய பயிற்சித் திட்டம் என்ற பிரசுரத்தில் காணலாம். அவ்வப்பொழுது செய்யப்படும் மாறுதல்களும் மற்ற அறிவிப்புகளும் 'கதர் மலரில்' பிரசுரிக்கப்படும். சிக்ஷாசமிதியின் அங்கீகாரம் பெற்றுத்தான் மாகாணங்களில் காதி வித்யாலயம் நடத்தலாம். மாகாண வித்யாலயங்களில் பயிற்சி திறமையாக நடைபெருவிட்டால், அவைகளை நீடித்து நடத்த சிக்ஷாசமிதி அனுமதிக்காது. வித்யாலயத்தின் ஆசிரியர்களும் சிக்ஷாசமிதியின் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி (Refresher course) வேண்டியிருந்தால் சிக்ஷாசமிதியே நேராக சேவாகிராமத்திலோ, மற்ற இடத்திலோ நடத்துவார்கள்.

மேலேகண்ட பயிற்சிகளைத்தவிர வேறு எவ்விதமான அத்தாட்சி பத்திரமும் சர்க்கா சங்கம் கொடுக்காது. விசேஷ காரணத்திற்காக சர்க்கார் கதர்திட்டத்தின் கீழ் மூன்றுமாத துரித நூற்பு பயிற்சி திட்டம் ஒன்று தயாரித்து அதற்காக பயிற்சி நடத்தி தேறியவர்களுக்கு சங்கத்தின் மூலம் அத்தாட்சி பத்திரம் வழங்கப்பட்டது. அம்மாதிரியான திட்டத்தையும் இனிமேல் சங்கம் அங்கீகரிக்காது. ஆறு மாதத்திற்குக் குறைந்த எந்த பயிற்சி திட்டத்தையும் சர்க்கா சங்கம் ஏற்பது சாத்யமில்லை. அறைகுறையாக பயிற்சி பெற்றவர்கள் மூலம் கதர்க்கலைக்கும் சாஸ்திரத்துக்கும் தீங்கு ஏற்படுமேயொழிய நன்மை ஏற்படாது. கதரில் நம்பிக்கையில்லாமல் சர்க்கா சங்க அத்தாட்சி பத்திரத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு உத்தியோகத்திற்கோ, அதிக சம்பளத்திற்கோ பலர் பிரயாசைப் படுகிறார்கள். அவர்கள் சங்கத்தின் உதவியையும், ஆதரவையும் எதிர் பார்க்கமுடியாது.

பள்ளி ஆசிரியர்கள் ஏதாவது ஒரு தொழில் பரீட்சையில் தேறினால் 5 ரூபாய் சம்பள உயர்வு கொடுக்கப்படுமென்று சென்னை சர்க்கார் இரண்டு வருஷங்களுக்கு முன்பு அறிவித்தது. குறிப்பிட்ட பல தொழில்களில் நூற்பதும் ஒன்று. சம்பள உயர்வைக்கருதி பலர் நூற்கும் தொழிலில் தேறியதாக சுலபமாக அத்தாட்சி பத்திரம் வாங்கி விடலாமென்று எண்ணினார்கள். இதற்காக சர்க்கா சங்கம் அவர்களுக்கு 30 மணிநேர பயிற்சிதிட்டமும், ராட்டையிலும், தக்ளியிலும் நூற்பதில் பரீட்சையும் நடத்தியது. பரீட்சை அளவு மிக கடினமென்று பல

ஆசிரியர்கள் ஆக்ஷேபித்தார்கள். சர்க்கா சங்கத்தின் கீழ் நடந்த பரீட்சையில் தேரியவர்கள் வெகு சிலரே.

நூற்புக்கலை சாதாரணமான தொழில் போலல்ல. சுயதேவை லக்ஷியம், வாழ்க்கை தத்துவம், சமூக பொருளாதார சாஸ்திரம் முதலியவைகளுக்கு இது அஸ்திவாரமாகும். இக்கலையில் சிரத்தையுடனும், திறமையுடனும் தேர்ச்சி பெற்றால்தான் இதன் பலன் பூர்ணமாக கிடைக்கும். சுயதேவைக்கு முதற்படியாக வீட்டிலுள்ளவர்களுக்கும், சமூகத்தில் உள்ள குழந்தைகள், பெரியோர்கள் எல்லோருக்கும் நூற்ககற்றுக்கொடுக்க முடியும். இல்லாவிட்டால் நூற்புக் கலைக்கே தீமை உண்டாகும். ஆகையினால்தான் சர்க்கா சங்கம் கதரில் நம்பிக்கையும் சிரத்தையுமில்லாதவர்களுக்கு பயிற்சி கொடுப்பதில்லை. கொடுக்கும் பயிற்சியும் அகில இந்தியாவிலும் ஒரே சாஸ்திரீய முறையில் கொடுப்பதில் சிக்ஷாசமிதி விசேஷ கவனம் செலுத்தி வருகிறது. வித்யாலயத்தில் கொடுக்கும் பயிற்சி பொதுவாக கீழ் கண்டவாறு இருக்கும்:—

1. கதர்க்கலை சம்பந்தமானவை.
2. கருவிகள் சம்பந்தமான நுட்ப அறிவு.
3. மூலப்பொருள் சம்பந்தமான பாடம்.
4. கதர் தத்துவம் சம்பந்தமானவை.
5. இதர நிர்மாண வேலையும், சம்பூர்ண கிராம சேவையும்.
6. தினசரி வாழ்க்கை முறைப் பயிற்சி.

மேலே சொன்ன எல்லாவற்றிலும் கடைசியில் சொன்ன வாழ்க்கை முறைதான் வித்யாலய தினசரி திட்டத்தில் முக்கியமானதாக கருதவேண்டும். வாழ்க்கை முறையும் மனோபாவமும் சரியாக திருத்தப்பட்டுவிட்டால் மற்றவை எளிதாகிவிடும். வாழ்க்கை முறையில் பலபாகங்கள் உண்டு. பிரார்த்தனை, துப்புரவு, சமையலும் சாப்பாடும், யக்ஞம், தோட்டவேலை, வாழ்க்கைக்கு அவசியமான பண்புகள், கட்டுப்பாடு, கூட்டுறவுவாழ்க்கை, சிக்கனம், சுறுசுறுப்பான உழைப்பு, தன்னம்பிக்கையும் பொறுப்புணர்ச்சியும், அடக்கமும் பணிவும், மரியாதை, பொதுநல உணர்ச்சி, சமூக பழக்க வழக்கங்கள் இவை முக்கிய அம்சங்களாகும்.

## பிரார்த்தனை.

பிரார்த்தனையின் அவசியத்தைப்பற்றி குறிப்பிடத் தேவையில்லை. மகாத்மா காந்தி இதுபற்றி எழுதிய கட்டுரைகளை பார்த்தால் அதன் மகத்துவம் நன்கு விளங்கும். வித்யாலயங்களைத் தவிற காதி வஸ்திராலயங்களிலும், இதர நிர்மாண ஸ்தாபனங்களிலும், பயிற்சி முகாம்களிலும் பிரார்த்தனை முக்கியமானதால் இதைப் பற்றி மட்டும் இங்கு விவரமாக கூறுவது அவசியம்.

பிரார்த்தனை காலையிலும் மாலையிலும் இருக்கவேண்டும். காலை பிரார்த்தனை 4 மணியிலிருந்து 5ற்குள்ளாக இருப்பது நலம். சில இடங்களில் காலை துப்புரவு முடிந்து சூரிய உதய சமயத்தில் பிரார்த்தனை செய்கிறார்கள். அதை விட படுக்கை விட்டெழுந்தவுடன் கை கால் அலம்பி பல்

துல்க்கி பிரார்த்தனை செய்வது நலம் என்பது பெரும்பான்மையோரின் அநுபவம். பிரார்த்தனைக்கு பிறகு துப்புரவு முதலிய காரியங்களைச் செய்ய போதிய வெளிச்சமும், அவகாசமும் இருக்கும். அதேபோல் மாலை பிரார்த்தனை சாப்பாட்டிற்கு முன்னே பின்னே 6மணி முதல் 8க்குள்ளாக வைத்துக் கொள்வது நலம். சாப்பாட்டிற்கு பின் இருந்தால் போஜனத்திற்கு ½மணிக்கு பிறகு வைத்துக்கொள்வது நலம்.

பிரார்த்தனைக்கு தகுந்த இடம் வெட்ட வெளியே. மழை, அதிக காற்று முதலியவை இருந்தாலொழிய பிரார்த்தனை வெளியே இருப்பதுதான் மனதுக்கு உகந்தது. பிரார்த்தனை செய்யுமிடம் சுத்தமாக இருக்கவேண்டும். பக்கத்தில் துர்நாற்றம் இருக்கக்கூடாது. நாய் முதலிய மிருகங்களின் உபத்திரவம் இல்லாமல் இருக்க வேண்டும். அக்கம் பக்கத்திலிருப்போரையும் சத்தம் போடாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். பிரார்த்தனை ஆரம்பிப்பதற்கு 10 நிமிஷம் முன்னால் மணி அடிக்கவேண்டும். வருவோர் அமைதியாக வந்து வரிசையாக உட்கார்ந்து கொள்ளவேண்டும். "ப" மாதிரியாக உட்கார்ந்து கொள்ளலாம். "ப" வரிசை பார்வையாக இருக்கும். அதிக நபர் இருந்தால் வரிசை வரிசையாக உட்கார்ந்து கொள்ளலாம்.

பிரார்த்தனை நடத்தும் கோஷ்டி முன்னால் சேர்ந்து உட்கார வேண்டும். பிரார்த்தனையில் பாடுகிறவர், படிப்பவர், தம்புரா வாசிப்பவர், எல்லோரும் சேர்ந்தாற்போல் முன் வரிசையில் உட்கார வேண்டும். விருந்தினர் வந்தால் அவர்களை தனியாக முன்னால் உட்கார வைத்துக்கொள்ள

வேண்டும். பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தனி இடம் முன்பக்கத்தில் இருப்பது அவசியம். தாமதித்து வருவோர் சப்தம் செய்யாமல் கடைசி வரிசையில் உட்கார வேண்டும். அவர்கள் தம் இடத்தில் உட்காரச்செல்ல பாதை விடவேண்டும். பிரார்த்தனை கலையும்போது ஒழுங்காக ஒருவர்பின் ஒருவராகப் போகவேண்டும். பிரார்த்தனை முடியும் வரையில் வேறொன்றும் பேசக்கூடாது.

பிரார்த்தனை காலம் பொதுவாக 15 நிமிஷத்திற்கு மேற்படாமல் இருந்தால் நலம். பிரார்த்தனைக்கும் பஜனைக்கும் வித்தியாசமுண்டு. பஜனையில் மணிக்கணக்காக இருந்து பாடலாம், ஆடலாம். ஆனால் பிரார்த்தனையிலோ ஏகாக்ர மனதுடன் வாயிலே பாடிக்கொண்டு, பூர்ணமான தியானம் செய்வது. இதில் ஏகாக்ர மனம் அவசியம். இந்நாளில் இது மிக சிரமமானது. ஆகையினால் குறுகிய காலத்தில் நமது மனம், இதயம் எல்லாம் நாம் சொல்லும் பிரார்த்தனையில் ஈடுபடும்படி செய்தால் பிரார்த்தனையில் பலன் ஏற்படும். இல்லாவிட்டால் நமது பிரார்த்தனையில் பலன் இருக்காது. இதற்காக பிரார்த்தனை திட்டம் அமைய வேண்டும். பிரார்த்தனையில் பொதுவாக காந்திஜியின் ஆசிரம முறை அனுஷ்டிக்கப்படுகிறது. இது உயர்ந்த முறையாகும். சம்ஸ்கிருத சுலோகம் சொல்வதினாலும், படிப்பதினாலும் தேசீய பாஷையான ஹிந்தியை கற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கும். ஆனால் இதன் அர்த்தமும் படிக்கப்படவேண்டும். ஆசிரம சுலோகம் சொன்னபிறகு சேர்ந்து பாடல் ஒன்றும் தனி பாடல் ஒன்றும் பொருத்தமாக இருக்கும். பிரார்த்தனை ராம் துனுடன் முடியவேண்டும். பிரார்த்தனை முடிந்தவுடன்

ஏதாவது பக்தி விஷயங்களை பற்றி பேசலாம். இல்லா விட்டால் முக்கிய புஸ்தகங்களிலிருந்து படிக்கலாம். பிரார்த்தனை சமயத்தில் விளக்கும் சிறிதாக தணித்து சந்திகாலம் போல இருட்டும் வெளிச்சமும் சேர்ந்து இருப்பது நலம். ஒரு மதத்தினரை தவிர மற்ற மதத்தினர் யாராவது இருந்தால் அவருடைய பிரார்த்தனையை சொல்ல முன்னாலேயே சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். பிரார்த்தனை சுலபமாகவும், எளிதாகவும், மனதுக்கு ரம்யமானதாகவும் இருப்பது அவசியம். பிரார்த்தனை ஆரம்பிப்பதற்கு முன் எந்த பிரார்த்தனைகள் எவர் சொல்வார் என்ற விபரங்களை அறிவிப்பது நலம். பிரார்த்தனையில் சப்த பிழைகளும் அபஸ்வரமும் இருக்கக்கூடாது. மனதுலயிக்கக் கூடிய வகையில் இருக்கவேண்டும். கூட சொல்லமுடியாதவர்கள் மௌனமாக இருப்பது நலம். பாடுகிறவர்கள் அதிக ராகம் போட்டு பாடுவது அவசியமில்லை. அதிக ராகத்துடன் பாடினால் பாட்டுக்கச்சேரியாக மாறிவிடும். பாடுகிறவர்கள் உணர்ந்து சப்த பேதமில்லாமல் பாடுவது அவசியம். அதிக ராகமிருப்பதை சர்க்கரை அதிகமாகவும் பால் குறைவாகவுமிருப்பதாக, அதாவது, தியானம் குறைந்து சங்கீதம் அதிகமாகிவிடுகிறது என்ற கருத்தில் ஆசாரிய விநோபாஜி வர்ணித்திருக்கிறார்.

பிரார்த்தனையில் ஈடுபடுவோர் எல்லோரும் தனித்தனியாக பிரார்த்தனை நடத்த திறமை பெறவேண்டும். ஆகையினால் ஒருவரே பிரார்த்தனை நடத்தாமல் ஒவ்வொருவரும் பிரார்த்தனை நடத்த சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். பிரார்த்தனையில் பாடும் பாட்டுகள் கடவுளின் ஸ்தோத்திரம், பக்தி உணர்ச்சி முதலியவை கொண்டதாக

இருத்தல் வேண்டும். பிரார்த்தனை கட்டாகவும், துரிதமாகவும், மனதை தியானத்தில் லயிக்கும்படியாக இருக்க வேண்டும். தட்டு தடுமாற்றம், தாமதம், யார்பாடுவது, என்ன பாடுவது போன்ற பிரச்னைகள் எல்லாம் இருக்கக் கூடாது.

---

# VII

## பிரசுராலயம்.

சர்க்கா சங்கம் ஆரம்பத்திலிருந்து கதர் உற்பத்தி விற்பனையில் ஈடுபட்டது. 1936 முதல் நூற்புக் கருவிகளும் உற்பத்தி செய்து கொடுக்க ஆரம்பித்தது. பின்னர் நூற்புக் கலையில் பயிற்சி கொடுக்க காதி வித்தியாலயங்கள் ஏற்பட்டன. மேலே சொன்னவைகளில் சங்கம் கூடுமான அளவு வேலை செய்து வந்தது. சங்கத்தின் இந்த அனுபவத்தைக் கொண்டு இதே போல இதர பரோபகார ஸ்தாபனங்கள் வேலை செய்வது சுலபம். 1944-லிருந்து சர்க்கா சங்கம் கிராம மக்களின் சுயதேவைக்கும், கிராமங்களின் சம்பூரண வளர்ச்சிக்கும் சர்க்கா மூலம் எப்படி பாடுபட வேண்டுமென்றும் அஹிம்சா சமுதாயத்தை ஏற்படுத்த சர்க்கா ஒரு உயர்ந்த சாதனமாகும் என்பதையும் மகாத்மா விளக்கினார். அதிலிருந்து கதரின் கருத்துக்களையும், தத்துவத்தையும் பொது ஜனங்களிடத்தில் பரப்புவது சர்க்கா சங்கத்தின் அதிக அவசரமும் முக்கியமானதுமான வேலையாகி விட்டது. ஆரம்ப முதற் கொண்டு மகாத்மாவைத்தவிர ராஜாஜி, ராஜன்பாபு

போன்ற எல்லா தேசிய தலைவர்களும் காங்கிரஸ் அன்பர்களும் கதருக்காக மேடையிலும், பத்திரிக்கையிலும் பிரசாரம் செய்து வந்தார்கள். 1936-37-ல் காங்கிரஸ், மாகாண ஆட்சியை ஏற்ற பின்னர் மாகாண சர்க்கார்களால் கதர் அபிவிருத்திக்கு சர்க்கா சங்கத்திற்கு பல்வேறு திட்டங்கள் மூலம் பண உதவியும் ஆதரவும் கிடைத்தது. காங்கிரஸ் மாகாண அதிகாரத்தை ஏற்ற பிறகு சர்க்கார் மூலம் கிடைத்த பண உதவியைத்தவிர கதருக்காக விசேஷ பிரசாரம் ஒன்றும் நடக்கவில்லை. இரண்டாவது உலக யுத்த சமயத்தில் காங்கிரஸ் அதிகாரத்திலிருந்து விலகி 1944 வரையிலும் ராஜீய போராட்டத்தில் ஈடுபட்டது. தேசீயத் தலைவர்களும், காங்கிரஸ் அன்பர்களும் சிறையிலிருந்ததால், விசேஷ பிரசாரம் ஒன்றும் செய்ய முடியவில்லை. 1945-க்கு பிறகு இன்று வரையில் தேசீய சுதந்திர பிரசினையிலோ அல்லது அரசியல் அதிகார சம்பந்தமாகவோ தலைவர்கள் எல்லோரும் ஈடுபட்டு வருகிறார்கள். ஆகவே சென்ற பனிரெண்டு வருஷகாலமாக கதருக்காக விசேஷ பிரசாரமே இல்லையென்று சொல்லலாம்.

காந்திஜி எப்பொழுதும், கதருக்காகவும் சர்க்கா சங்கத்திற்காகவும் விசேஷ கவனம் செலுத்தி வந்திருக்கிறார். சர்க்கா சங்கத்தின் ஹிந்தி 'காதி ஜகத்' பத்திரிக்கை மூலம் அவருடைய கட்டுரைகள் எல்லாம் வெளிவந்தன. 1940-க்கு பிறகு சர்க்கா சங்க டிரஸ்டிகளின் கூட்டங்கள் எல்லாம் சிறிய பொதுக்கூட்டங்களாகவே அமைந்தன. இந்த கூட்டங்களில் காந்திஜி பல பிரசினைகளைப் பற்றி பேசும் பொழுதெல்லாம் கதர் தத்துவத்திற்கு புதிய

ஒளி கிடைத்து வந்தது. 1940-க்கு பிறகு மகாத்மா கதரைப் பற்றி எழுதியதும் பேசியதும் அநேகமாக எல்லாம் ஹிந்தியிலேதான். சென்ற பல வருஷங்களில் சங்கத்தின் லக்ஷியமே அடிப்படையில் மாறி விட்டது. இவைகளை எல்லாம் வடநாட்டினர் ஓரளவு ஹிந்தியில் அறிந்திருக்கலாம். ஆனால் தென்னாட்டினருக்கு இவைகளைப் பற்றி அநேகமாக தெரியாது. முக்கியமாக கதர் அன்பர்களுக்கு சர்க்கா சங்கத்தின் போக்கே விளங்கவில்லை என்று சொல்லுவது மிகையல்ல. ஜீவாதாரக்கூலி, சுயதேவை தத்துவம், கண்காக்ஷி சம்பந்தமான தத்துவமும் முறையும், சமக்ர கிராம சேவை, அத்தாட்சி பத்திர புதிய விதிகள், கதருக்கு நூல் விதியின் அடிப்படை தத்துவம் இவைகள் எல்லாம் கதர் அன்பர்கள் விபரமாக தெரிந்து கொள்ள சௌகரியமும் சாவகாசமும் இல்லை. சர்க்கா சங்கத்தின் பெரும்பான்மையான தொண்டர்களுக்கும் சாவகாசமில்லை. தலைமைக்காரியாலயத்தில் நெருங்கிய தொடர்புள்ளவருக்குத்தான் இவைகளை அறிய சந்தர்ப்பம் இருந்தது. சர்க்கா சங்கத் தொண்டர்கள் அநேகமாக மேடை பிரசங்கிகள் அல்ல, அவர்கள் எழுத்தாளர்களும் அல்ல. அடக்கத்துடன் குறிப்பிட்ட வேலையை பொறுப்புடன் செய்து வருகிறவர்கள். பத்திரிக்கைகளிலும் இந்த காலத்தில் கதருக்கு போதுமான இடம் கிடைப்பதரிது. மேடையில் பிரசாரம் செய்வதற்கும் சந்தர்ப்பமும் சௌகரியமும் இல்லை. கதர் தத்துவத்தைப் பற்றி ஒரு விதத்தில் கருத்துப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. கதர் என்றால் கதர் மட்டுமல்ல; இதர நிர்மாண திட்டங்களும் கதரில் சேர்ந்தவைதான்.

காந்தீய பொருளாதார திட்டத்தையும், காந்தீய சமுதாயத்தையும் விளக்கும் தத்துவம் சாதாரணமானதல்ல. இவைகளை பற்றிய புத்தி பூர்வமான ஆராய்ச்சி செய்து சிரத்தையுடன் நேரிடையான வேலை செய்து அதில் பெறும் அனுபவத்துடன் சமூக சாஸ்திரம், சரித்திரம், காந்தீய பொருளாதாரம் எல்லாம் இன்னும் பல வருஷம் விளக்கி அறிவுடன் பிரசாரம்செய்தால்தான்கதர் சமுதாயம் அல்லது அஹிம்சா சமுதாயம் ஆரம்பித்து நிலவ முடியும். இவைகளின் அவசியத்தை மகாத்மா அடிக்கடி சர்க்கா சங்கக் கூட்டத்திலும் தனி சம்பாஷணையிலும் தெளிவாக விளக்கி இருக்கிறார். கதரும் இதர நிர்மாண வேலையும் தற்காலிக ராஜ்ய வேலையல்ல. அஹிம்சா மூலம் சுய ராஜ்யத்தை அடைவதற்கு ஓரளவில் அது உதவியது. ஆனால் அஹிம்சா மூலம் சுயராஜ்யத்தை அனுபவிப்பதும் உலக சாந்தி ஏற்படுத்துவதும் தான் நிர்மாண வேலையின் நோக்கம். ஆகையினால் கருத்துப் பிரசாரமும், தத்துவ பிரசாரமும் சங்கத்திற்கு இரு கண்கள் போன்றவை. இவை இல்லாவிட்டால் சங்கத்தின் வேலை பயனற்றுப் போகும். கருத்தின் ஆதாரமில்லாவிட்டால் கதர் நிலைத்து இருக்காது.

மேலே சொன்ன காரணங்களினால்தான் சர்க்கா சங்கம் பிரசுர வேலையும் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. தலைமைக் காரியாலயம் இதை உணர்ந்து 1940-ல் 'காதி ஜகத்' என்ற ஹிந்தி பத்திரிகை ஆரம்பித்தது. அது 1942 இயக்கத்தில் நின்று விட்டது. மீண்டும் 1945-ல் ஆரம்பித்து இப்பொழுது 'ஸர்வோதய' த்துடன் இணைக்கப்பட்டு விட்டது. அத்துடன் நூற்பு, நெசவு முதலிய தொழில்

கலையைப் பற்றி சில புத்தகங்கள் வெளியிட்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து சென்ற இரண்டு மூன்று வருஷங்களில்தான் அதிக பிரசுரங்கள் வெளியாகி இருக்கின்றன. கர்நாடக, மஹாராஷ்டிர, ஆந்திர மாகாணங்கள் தங்களால் முடிந்தவரை சில பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள். இதர மாகாணங்களில் அநேகமாக பிரசுர வேலை இல்லையென்று கூறலாம். கேரள மாகாணத்தில் சென்ற இரண்டு வருஷகாலமாக சுமார் 10 புத்தகம் பிரசுரித்தது விசேஷம்.

தமிழ்நாடு அகில இந்தியாவிலும், பிரசுரத்தில் முன்னணியில் நிற்கிறது. 1926-ல் குடிநூல் பத்திரிகை ஆரம்பித்து கொஞ்சகாலம் நடந்தது. பின்னர் 1937-ல் மீண்டும் தோன்றி 1940-ல் மறைந்து விட்டது. 1947-ல் **கதர்மலர்** என்ற மாதப்பத்திரிகை ஆரம்பித்தது. இது கொஞ்சம் கொஞ்சமாக கதர் அன்பர்களின் ஆதரவினால் வளர்ந்து வருகிறது. இதைத்தவிர பல புத்தகங்கள் மூன்று வருஷங்களாகவே பிரசுரிக்கப்பட்டன. பருத்தி சாகுபடி, நரம்பு செய்தல் முதல் சரிமைநூற்பு வரையிலும் கதர் சாஸ்திரம், தொழில் சாஸ்திரம், கணித சாஸ்திரம் முதலியவைகளைப் பற்றி பல புத்தகங்கள் வெளியாகி யிருக்கின்றன. நெசவு சம்பந்தமாகவும், சாய அச்சு சம்பந்தமாகவும் பாக்கி பிரசுரிக்க வேண்டியிருக்கிறது. கதர் சம்பந்தமான சரித்திரம், ராட்டைப் புரட்சி முதலியவைகளை பற்றியும் பல புஸ்தகம் வெளிவந்திருக்கின்றன. காந்திய தத்துவம், சர்வோதயம், மஹாத்மாவும், கஸ்தூரிபாவும் நடத்திய சத்திய வாழ்க்கைச் சித்திரங்கள் சம்பந்தமான புத்தகங்கள் பல பிரசுரிக்கப்பட்

டிருக்கின்றன. இவைகள் எல்லாம் சுமார் இதுவரையிலும் ஒருலக்ஷம் பிரதிகள் அச்சாகி பெரும்பாகம் செலவாகி விட்டது. இதைத்தவிர தனிப்பட்ட பிரசுரங்களும் கதர் மலருக்குத் துணையாக 30,000 பிரதிகள்வரையிலும் வெளி வந்துள்ளன. கதர்மலர் இதுவரையிலும் சுமார் ஒரு லட்சம் பிரதிகள் அச்சிட்டு விநியோகிக்கப் பட்டிருக் கின்றன.

குறைந்த விலையில் அதிக பிரதிகள் அச்சிட்டு ஜனங் களிடத்தில் கருத்துக்களைப் பரப்ப வேண்டுமென்பதே சங்கத்தின் நோக்கம். கதரைப்போலவே இதிலும் வியாபார நோக்கமோ, லாப நோக்கமோ இல்லை. ஆனால் சர்க்கா சங்கத்தின் மூலதனம் பொது சொத்தானதினால் பிரசாரத்திற்கு பணம் செலவு செய்யக்கூடாது. ஆகையி னால் நஷ்டமில்லாமல் பிரசுரவேலை நடைபெற வேண்டும். சர்க்கா சங்க பிரசுரங்களுக்கு இதுவரை கிடைத்த ஆதரவுக்கு மிகவும் நன்றி செலுத்துகிறோம். பற்றற்ற முறையில் பத்திரிகை மூலம், பிரசுரங்கள், கருத்துக்களை பரப்புவதற்காக சேவா நோக்கத்துடனும் பிரசுராலயம் உழைத்து வருகிறது. மனச்சாட்சியையும் சிந்தனையையும் சேவா பாவத்தையும் தூண்டி கருத்துப் புரட்சியை ஏற் படுத்தி, காந்தீய வழியில் கிராம சுயராஜ்யம் ஏற்படுத்து வதே பிரசுராலயத்தின் லக்ஷயம்.

இந்த புதிய துறையில் சங்கத்தில் போதுமான அனு பவமும் ஆற்றலும் உள்ள புதிய ஊழியர்கள் தேவை. காந்தீய தத்துவத்திற்கு இந்தத்துறையில் சேவைசெய்ய அறிவாளிகள் தேவை. இதில் ஆராய்ச்சிக்கு அவசியமும்

சந்தர்ப்பமும் அதிகமாக இருக்கிறது. பிரசுரங்களை தொண்டர்களே நன்றாக படித்து அவர்களே விளக்கி சொன்னால்தான் பிரசுரங்கள் பரவும். கதருக்காக உழைத் தவர்களின் வறுமையும், கதர் ரகங்களின் மேன்மையைப் பற்றி எடுத்து சொல்லியதுபோல் புத்தகத்தின் கருத்துக் களை எடுத்துக்கூறி விற்கவேண்டும். கதரை தெருவில் விற்றதுபோல் பிரசுரங்களையும் கிராமத்திலும், தெருவிலும் விற்று தத்துவ பிரசாரம் செய்யவேண்டும். கதருடுத்து கிறவர்கள் தத்துவமறிந்து நூற்கவும், கதருடுத்தாதவர்கள் புதிதாக உணர்ந்து, நூற்று கதர் உடுத்துவதற்கும் பிரசுரம் மிகவும் அவசியம். கதருடுத்தாதவர்கள் லக்ஷக்கணக்காக இருக்கிறார்கள். நமது பிரசுரம் எல்லாம் லக்ஷக்கணக்காக பரவுவதற்கு போதிய இடம் இருப்பதால் மேலும் மேலும் நமது பிரசுர வேலை வளரக்கூடும். இம்மாதிரி யான பிரசுரங்கள் மலிவாக வெளியிடுவதற்கு கிருஸ்தவ மிஷனரி போல, அல்லது கீதா பிரசார சபை மாதிரி தர்ம ஸ்தாபனங்கள் முன் வரவேண்டும். சங்கம் இது வரைசெய்த சிறியவேலை ஒரு ஆரம்பம்தான். மற்றவர் களுக்கு வழிகாட்டியாக உள்ளது. அவர்கள் முன்வந்து பெரிய அளவில் இந்த வேலையை நடத்துவார்கள் என்று நம்புகிறோம்.

வஸ்திராலயங்களில் பிரசுரங்கள் எல்லாம் சுத்தமாக வும், பார்வையாகவும், அழகாகவும் வைத்திருக்கவேண்டும். புஸ்தகங்கள் அழுக்கடைந்து போனால், சங்கத்திற்கு நஷ்டம் ஏற்படும். புஸ்தகங்களை கவனத்துடனும் வைத் திருந்து அன்பர்களுக்கு வினியோகிக்க வேண்டும். எதிர் கால வேலை, கதர் கருத்துக்களையும், சுயதேவைத் திட்டத்

தையும் பொறுத்தே இருக்கின்றது. இவ்வளவு மகத்துவமான இந்த கருத்து சேவையில் எல்லா கதர் ஊழியர்களும் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டாலொழிய அஹிம்சா சமுதாயம் ஓர் சொப்பனமாகத்தான் முடியும்.

---

## VIII

## இதர இலாக்காக்கள்.

அவசியத்திற்கும் சக்திக்கும் தகுந்தாற்போல் மாகாண சர்க்கா சங்கம் பேப்பர்செய்தல், எண்ணெய் ஆட்டுவது போன்ற குடிசைத்தொழில், விவசாயம், தோட்டம், பால் பண்ணை முதலிய வேலையும் செய்யக்கூடும். இவைகளை சங்கத்தின் தேவைக்கல்லாமல் விற்பனைக்காகச் செய்யக்கூடாது. தலைமைக் காரியாலயத்தின் முன் அனுமதி பெற்றுத்தொடங்கவேண்டும். இம்மாதிரியான வேலை ஒவ்வொன்றிற்கும் தனித்தனி இலாக்கா இருப்பது அவசியமாகும். ஒவ்வொரு இலாக்காவும் திறமையும், பயிற்சியும் உள்ளவரிடம் ஒப்புவிக்கப்படவேண்டும்.

தமிழ் நாட்டில் காகித உற்பத்தியும் சாதல்வார் இலாக்காவும் முக்கியமானது. சங்கத்தில் உள்ள பல கிளைகளுக்கு ஏராளமான கணக்கு புத்தகங்கள், காகிதம், இதர சாதல்வார் தேவை. இவைகளை எல்லாம் ஒரே இடத்தில் நல்லதாகவும், மலிவாகவும் வாங்கி சேர்த்து வினியோகித்தால் செலவு மிச்சமாகும். மேலும் சங்கத்தின் வேலைக்குத் தேவையான பலவித கணக்குப் புத்தகங்

களும், ரிஜிஸ்டர்களும் ஒரே இடத்தில் தயார் செய்து கிளை களுக்கு வினியோகிப்பது சிக்கனமாகவும் திறமையாகவும் இருக்கக்கூடும். தேவையானபொழுது தாமதமில்லாமல் கிடைக்கும். அதற்காகவே சங்கத்தில் 1927 முதல் பைண்டிங், ரூலிங் முதலிய வேலையுடன் சாதல்வார் இலாக்கா இருந்து வருகிறது. யுத்தகாலத்தில் இது விசேஷ அளவில் உதவியாக இருந்தது. பில் புத்தகம், ரிஜிஸ்டர்கள், கணக்குப்புத்தகம் முதலியவைகள் வெளியில் அச்சுசாலையில் அச்சிடப்படுகிறது. பிற அச்சுசாலையை நம்பியிருப்பதால், பலசமயம் தாமதமும் நிர்வாக சிரமமும் ஏற்படுவது உண்மை. சங்கம் பத்திரிக்கையும் பிரசுரங் களும் ஏராளமாக அச்சிடும்பொழுது அச்சுசாலையும் ஏன் வைத்துக்கொள்ளக் கூடாதென்ற கேள்வி எழுகின்றது. சங்கத்தின் முதலும் சக்தியும் ஒரு வரம்புக்குள்தான் உபயோகிக்கவேண்டும். அதன் சாதாரண வேலையை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக புறம்பாகப்போனல் நம் முக்கிய வேலையாகிய காந்திய கருத்துப் புரட்சிக்கும் சுய தேவைத்திட்டத்திற்கும் கவனம் கொடுக்க முடியாமல் நம் கவனம் சிதறுண்டு போகும். அச்சு வேலையைப் போன்ற வேலையில் சங்கம் தலையிடாமல் இருப்பது நலம்.

கைக்காகிதம் செய்யும் இலாக்கா 1940 முதல் நடந்துவருகிறது. இதற்கு மூலப்பொருள், பல்ப் (Pulp) காகிதத்துண்டும், கந்தைத்துணியும். இதை பீட்டர் யந்திரத் தினல் மின்சாரசக்தி மூலம் தயாரித்து கையினல் பேப்பர் தயாரிக்கப்படுகிறது. யுத்தகாலத்தில் வேறு பேப்பர் கிடைக்காதபொழுது கைக்காகிதத்தையே சங்கம் உப யோகித்தது. இந்த நெருக்கடியில் சங்கம் பேப்பர்

சம்பந்தமாக சுயதேவைப்பூர்த்தி செய்துகொண்டது. இதை விற்பனைக்காக தயாரிப்பதில்லை. இதில் பெரும் பாகம் தற்சமயம் கதர் மலருக்காக உபயோகப்படுகிறது.

இந்த இரண்டு இலாக்காக்களும் மிகவும் திறமை யாகவும், சிக்கனமாகவும், திட்டத்துடன் வேலைசெய்தால் தான் சங்கத்திற்கு உபயோகப்படும். இந்த இலாக்காக் களில் விசேஷ அபிவிருத்திக்கு இடமிருக்கிறது. அநேக இலாக்காக்கள் ஒரே முறையில் சிறிது காலம் வளர்ந்து பின்னர் அபிவிருத்தியடைவதில்லை. எந்த வேலையும் பூரண மடைந்ததாகச் சொல்லமுடியாது. எதிலும், வளர்ச்சிக் கும், மாறுதலுக்கும் இடமுண்டு. எல்லா வேலைக்கும் சிரத்தையோடு கூடிய ஆராய்ச்சியும் சிந்தனையும் அவசியம் என்பதை மீண்டும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்வது நலம்.

கதர் உற்பத்தி விநியோகப், ராட்டை தொழிற்சாலை இலாக்காக்கள் சம்பந்தமாக கூறிய பொது வேலை முறை யெல்லாம் சாதல்வார் பேப்பர் இலாக்காக்களுக்கு பொருந்தும்.

வித்தியாலயங்களுக்காகவும் அதைப்போல சங்கத்தின் தொண்டர்கள் சேர்ந்து கூட்டுறவு வாழ்க்கை நடத்தும் இடத்திலும் பால்பண்ணை நடத்த முயற்சிக்கலாம். தங்களுக்கு தேவையான எண்ணெயை ஆட்டிக் கொள்ள செக்கு வைத்துக்கொள்ளலாம். சேர்ந்து காய் கறி தோட்டமும் போட்டுக்கொள்ளலாம். கூட்டு முயற்சி யால் விவசாயம் ஆரம்பிக்கலாம். தேனீ வளர்க்கலாம். இம்மாதிரியே பல வேலைகள் நடத்த சந்தர்ப்பம் உண்டு. ஆனல் ஒவ்வொரு வேலையிலும் தலைமைக்காரியாலய

அனுமதி பெற்று முதல் முடங்காமலும் நஷ்டம் ஏற்படா மலும் பார்த்துக்கொள்வது அவசியம். இதற்காகவே ஒவ்வொரு இலாக்காவிற்கும் தனித்தனி கணக்கு அவசியம். இலாக்காக்களில் காரணமில்லாமலும் ஒருவித நன்மையும் இல்லாமல் நஷ்டம் ஏற்பட்டால் கிளை வஸ்திரா லயத்தைப்போலவே மூடவேண்டியிருக்கும். இந்த இலாக்காக்களிலும் கிளைகளின் பொதுவான நிர்வாக முறை பொருந்தும்.

---

## IX

# அத்தாட்சி பத்திரம் பெற்ற ஸ்தாபனம்.

கதர் இயக்கத்தின் ஆரம்பம் முதல் பல தனிப்பட்ட நபர்கள் கதர் உற்பத்தி விற்பனைப் பணியில் ஈடுபட்டு வந்தார்கள். அவர்களுடைய விசேஷ முயற்சி, தியாகம், நிர்வாகத்திறமை, சொந்த மூலதனம் முதலியவைகளைக் கொண்டு பல இடங்களில் கதர் வேலை ஆரம்பித்து நடத்தி னார்கள். ஆரம்ப காலத்தில் இவர்களுக்கு காங்கிரஸ் நிதியிலிருந்து மூலதனத்திற்காக கடன் கொடுக்கப்பட்டது. அந்தக் காலத்தில் கதர் வேலை ஆரம்பித்து நடத்துவதில் ஏற்பட்ட கஷ்டமும் நஷ்டமும் சொல்ல முடியாது. மாகாண, ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளும் இம்மாதிரி தனிப்பட்ட நபர்களும் செய்த முயற்சியின் பலனாக பின்னர் கதர் வேலை வேரூன்றி வளர முடிந்தது.

கதர் வேலை வளர்ந்து வந்த போதிலும், நூற்பு-நெசவு கூலி, நூல்-கதர் தரம், கதர் விலை, இவைகளில் அதிக

வித்தியாசமிருந்தன. இவைகளை ஒரே மாதிரியாக நிர்ணயிப்பது அவசியமாயிற்று. இத்துடன் கதரின் தூய்மையும் பாதுகாக்க வேண்டியிருந்தது. பல தனிப் பட்டவர்கள் தியாகத்துடன் கதர் வேலையில் ஈடுபட்ட போதிலும் சில சுயநல வியாபாரிகள் லாபத்தை உத்தேசித்து மில் நூலை கலந்து அதிக விலைக்கு விற்று ஏமாற்றத் தொடங்கினார்கள். கதரின் பெயருக்கும், சுத்தத்திற்கும் ஆபத்து ஏற்பட்டு விட்டது. கதரின் பெயரால் உற்பத்தியாகும் துணி எல்லாம் மில் நூல் கலக்காமல் பாதுகாத்து கதர் என்று மக்களுக்கு உறுதி கூற வேண்டியிருந்தது. இந்த காரணங்களுக்காக 1924-ல் காங்கிரஸ் கதர் போர்டு சுத்தமாகவும் நியாயமான விலையில் கதர் உற்பத்தி செய்வோருக்கு அத்தாட்சி பத்திரம் கொடுக்க ஆரம்பித்தது. உற்பத்தி செய்வோர் களின் கதரின் தூய்மை, தரம், கூலி, விலை முதலியவைகளை பரிசீலனை செய்து மேற்பார்வை பார்த்து வந்தது. இதனால் சுத்தமான கதர், நியாயமான விலைக்கு மக்களுக்குக் கிடைத்ததைத் தவிர கதரும் அபிவிருத்தியாக முடிந்தது. ஆகவே 1924 முதல் கதர் போர்டிலிருந்தும், பின்னால் ஏற்பட்ட சர்க்கா சங்கத்திலிருந்தும் அத்தாட்சி பத்திரம் பெற்றவர்களிடம்தான் சுத்தமான கதர் கிடைக்கும் என்று ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

இம்மாதிரியாக அத்தாட்சி பத்திரம் கொடுக்கும் திட்டத்தின்கீழ் மேலும் தனி வியாபாரத்திலும் நிர்வாகத் திலும் அனுபவம் பெற்றவர்கள் சொந்த மூலதனத்தை போட அதிகமான நபர்கள் முன் வந்தார்கள். இதனால் சர்க்கா சங்கத்தின் உற்பத்தியை விட அத்தாட்சி பத்திரம்

பெற்றவர்களின் உற்பத்தி அதிகமாயிற்று. அவர்களிடையே உற்பத்தி செய்த கதரை விற்பதற்காக பலவிதமான போட்டி ஏற்பட்டது. போட்டியினால் வியாபார முறையைப்போல தரத்திலும் விலையிலும் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டது. ஆகவே விற்பனை சம்பந்தமாகவும் சர்க்கா சங்கம் போட்டியில்லாமலும் உற்பத்தியான கதரை தேங்காமலும் விற்பதற்கு கூடுமான உதவி செய்ய வேண்டியிருந்தது. சர்க்கா சங்கத்திற்கு தனது செல்வாக்கினாலும் பிரசாரத்தினாலும் கதர் விற்பனை செய்வது எளிது. ஆகவே அகில இந்தியாவிலும் பெரும்பான்மையான உற்பத்தி, அத்தாட்சி பத்திரம் பெற்றவர்களின் கையிலும், பெரும்பான்மையான விற்பனை சர்க்கா சங்கத்தின் கையிலும் இருந்து வந்தது. தமிழ் நாட்டில் மட்டும் 1925, 26-லிருந்து 1932 வரையிலும் அநேகமாக சங்கம் உற்பத்தி செய்ததைப்போல ஏறக்குறைய இரண்டு மடங்கு கதர் அத்தாட்சி பத்திரம் பெற்றவர்களே உற்பத்தி செய்தார்கள். அத்தாட்சி பத்திரம் பெற்றவர்கள் அநேகமாக வெளி மாகாணத்திற்கு அனுப்பினார்கள்.

1932, 33-ல் கதர் விற்பனை பொதுவாகக் குறையவே அத்தாட்சி பத்திரம் பெற்ற வியாபாரிகளும் குறைந்து போனார்கள். ஜீவாதாரக் கூலி தத்துவப்படி நூற்போர்களுக்கு கூலி அதிகம் கொடுப்பதுடன் நூற்போர்களின் நூல்தரம், நூற்கும் வேகம், சம்பாதிக்கும் திறமை இவைகளையும் அதிகப்படுத்த வேண்டியிருந்தது. கதரில் வரும் லாபத்தை இதற்காக நூற்போர்களின் முன்னேற்றத்திற்கு செலவு செய்யவேண்டும். இந்த புதிய அத்தாட்சிப்

பத்திர விதிகளின்படி தனிப்பட்ட வியாபாரிகள் வேலை செய்ய ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையினால் 1935க்கு பிறகு அத்தாட்சி பத்திரம் பெற்ற தனிப்பட்ட நபர்கள் அநேகமாக எல்லோரும் விலகிக்கொண்டார்கள். திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் போன்ற பொது ஸ்தாபனமும் புதிய கொள்கைகளையும் விதிகளையும் ஏற்றுக்கொண்ட சில நபர்களும்தான் கதர் வேலையை தொடர்ந்து நடத்தி வந்தார்கள்.

1944-45ல் கதரியக்கத்திலே அடிப்படையான மாறுதல்கள் ஏற்பட்டன. ஆதலால் அத்தாட்சி பத்திர விதிகள் இன்னும் அதிக கண்டிப்பாக மாற்றப்பட்டன. அதன்படி தனிப்பட்ட நபர்களுக்கே அத்தாட்சி பத்திரம் கொடுப்பதில்லை. லாபநோக்கமில்லாமல் நூல் விதியுடன் கதர் விற்று சுய தேவையும் கிராம சேவையும் நோக்கமாக கொண்டு வேலை செய்யும் தர்ம ஸ்தாபனங்களுக்கு மட்டும் தான் அத்தாட்சி பத்திரம் வழங்கப்படும். 1948ல் சேவா கிராமத்தில் நடந்த நிர்பாண ஊழியர்களின் கூட்டத்தின் ஸர்வோதய நிர்மானத்திற்கு பிறகு அத்தாட்சி பத்திர விதிகளில் மீண்டும் மாறுதல் ஏற்பட்டது. சர்க்கா சங்கம் கூடுமான வரையிலும் விற்பனைக்காக கதர் உற்பத்தி செய்வதிலிருந்து விலகிக்கொண்டு தன்னுடைய பூரா சக்தியையும் சுய தேவைக்கும் கிராம சேவைக்குமே உபயோகப்படுத்த வேண்டும் என்று நிர்மானித்தது. தன்னுடைய உற்பத்தி விற்பனை வேலையை தர்ம ஸ்தாபனங்கள் அல்லது அவசியமானால் கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்படைக்கலாம் என்றும் நிர்மானித்தது. ஆதலால் அத்தாட்சி பத்திரம் சம்பந்தமாக சில முக்கிய விதிகள் ஏற்பட்டன. தர்ம

ஸ்தாபனங்கள் விரும்பினுல் நூல் விதிப்படி கதர் விற்க லாம். விரும்பினுல் நூல் விதி இல்லாமலும் விற்கலாம். லாபம் ஏற்பட்டால் அதை சர்க்கா சங்கத்தின் யோசனைப் படி நூற்போர்கள் நெய்வோர்கள் முதலிய கதர் உற்பத்தி தொழிலாளர்களின் நன்மைக்கே பயன்படுத்தவேண்டும். சர்க்கா சங்கத்தினுல் நிர்ணயிக்கப்பட்ட கூலியும், விலையும் அனுஷ்டிக்கவேண்டும். ஒரு வருஷத்திய லாபத்திலிருந்து இரண்டாவது வருஷத்திய நஷ்டத்தை சங்கத்தின் அனுமதி பெற்று ஈடு செய்து கொள்ளலாம். சங்கத்தின் அனுமதி பெற்று தான் கதர் வெளி மாகாணங்களுக்கு அனுப்ப வேண்டும். நூல் விதி அனுஷ்டிக்காத தர்ம ஸ்தாபனத் திடமிருந்து சர்க்கா சங்கம் கதர் கொள்முதல் செய்யக் கூடாது, கதர் விற்கவும் கூடாது. நூல் விதி அனுஷ் டிக்கும் ஸ்தாபனத்துடன் வாங்கலாம், விற்கலாம். கூட் டுறவு சொஸைட்டியாக இருந்தால் லாபத்தில் 40 சதம் வரையில் போனஸிற்காகவும், ரிசர்விற்காகவும் வைத்துக் கொண்டு பாக்கி 60 சதம் தொழிலாளிகளின் நன்மைக்காக சர்க்கா சங்கத்தின் அனுமதியுடன் செலவு செய்யலாம்.

மேற்கண்ட விதிகளில் நூல் விதியை வைத்துக் கொள்வதும், வைத்துக் கொள்ளாததும் தர்ம ஸ்தாபனத் திற்கு விட்டு விட்டது பெரிய சலுகையாகும். இதனுல் பல தர்ம ஸ்தாபனங்கள் பல மாகாணங்களிலும் முன் வந்து சர்க்கா சங்க கிளைகளை ஏற்று நடத்தி வருகிருர்கள். இதே மாதிரி சில மாகாண அரசாங்கங்களும், ஜில்லா போர்டுகளும் சங்கத்தின் அத்தாட்சி பத்திரம் பெற்று நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. வேலை இல்லாத கிராம ஏழைகளுக்கு நூற்கும் தொழில் மூலம் சிறிது

பணை உதவி கிடைப்பது உண்மை. ஆனால் இதைவிட கிராம வாசிகளுக்கும் கிராமத்துக்கும் நிரந்தரமான நன்மை செய்யக் கூடியது சுய தேவையும், கிராம சேவையுமே. முதற்கூறிய வேலையில் சர்க்கா சங்கம் தன்னுடைய உழைப்பினாலும், செல்வாக்கினாலும் வழி காட்டி இருக்கிறது. இதை சுலபமாக இதர தர்ம ஸ்தாபனங்கள் தொடர்ந்து நடத்தி மேலும் பெரிய அளவில் அபிவிருத்தி செய்யலாம். கதர் அன்பர்களுக்கு தேவையான கதரையும் உற்பத்தி செய்யலாம். நூல் விதியினால் கதர் வாங்குகிறவர்களுக்கு ஏற்படும் சிரமத்தையும் விலக்கி கொள்ளலாம். இந்த அளவிற்கு பொது ஜன சங்கங்கள் ஏழைகளுக்கு கூலி கொடுத்துப் கதர் அன்பர்களுக்கு கதர் கொடுக்கும் சேவை செய்வதற்காக சர்க்கா சங்கம் இதுவரையில் செய்து வந்த வேலையை ஏற்றுக் கொள்ளலாம். அவ்வப்போது அத்தாக்ஷிப்பத்திர விதிகளில் ஏற்பட்ட மாறுதல்களைப்பற்றி சங்கத்தின் அறிக்கைகளிலிருந்தும் கதர் மலரிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

சர்க்கா சங்கமோ முக்கியமாக நூல் விதியை அடிப்படையாகக் கொண்டு சுய தேவையிலும், சம்பூர்ண கிராம சேவையிலுமே கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

அத்தாக்ஷிப் பத்திரம் பெறுமல் எண்ணற்ற வியாபாரிகள் கதரின் பெயரால் கதர் வளர்ச்சிக்கு இழைத்த தீங்கு அளவற்றது. கதர் இயக்கம் ஆரம்பம் முதல் சுய நல வியாபாரிகள் கதர் அன்பர்களையும், உற்பத்தியாளர்களையும் ஏமாற்றி வந்திருக்கிறார்கள். மகாத்மாவும், காங்கிரசும் எவ்வளவோ பிரசாரம் செய்த போதிலும் இதை

தடை செய்ய முடியவில்லை. இவர்களினால் கதருக்கு ஏற்பட்ட தீங்கைப்பற்றி குடி நூல் பத்திரிக்கையில் 1937-40 ல் காணலாம். இந்த விஷயமாக சர்க்கா சங்கக் காரியதரிசி ஸ்ரீ ஸ்ரீகிருஷ்ணதாஸ் ஜாஜு எழுதிய "அத்தாக்ஷிப் பத்திரம் பெறாத வியாபாரிகளின் புகாருக்கு பதில்" என்ற பிரசுரத்தையும் இதர கட்டுரைகளையும் பார்க்கலாம்.

---

## X

## ஏஜன்ஸிகள்.

சர்க்கா சங்கம் எல்லா இடங்களிலும் விற்பனை கிளைகள் வைப்பது சாத்யமில்லை. மூலதனம் போதாது. நிர்வாக நஷ்டம் ஏற்படாமல் எல்லா இடங்களிலும் போதுமான விற்பனையும் இராது. இதற்காக அத்தாட்சி பத்திரத்துடன் விற்பனைக்கு பூரண பொறுப்பு எடுத்துக் கொண்டு தனிப்பட்ட நபர்கள் வர முடியாமலிருக்கலாம், கோபி, காஞ்சீபுரம் போன்ற இடங்களைப் போல சிற்சில இடங்களில் கதர் அன்பர்களே விற்பனை கிளை வைப்பதற்காக சங்கத்திற்குபணம் வசூல் செய்து நிதி கொடுத்தார்கள். சிறிய இடங்களிலும் கொஞ்ச முதலை வைத்துக் கொண்டு சர்க்கா சங்கத்தின் அங்கீகாரத்துடன் தனி நபர்கள் ஏஜன்ஸி வஸ்திராலயம் நடத்தலாம். இந்த ஏற்பாட்டின் முக்கிய விதிகள் கீழ்கண்டவாறு:-

1. வாங்கும் கதருக்கு ரொக்கம் கொடுக்கவேண்டும். 2. சங்கத்தின் விலைப்படி விற்கவேண்டும். 3. விற்ற

கதருக்கும், பட்டைப் பஞ்சு நூற்புக் கருவிகளுக்கு கமிஷன் கொடுக்கப்படும். 4. ஏஜன்ஸியை நிறுத்தும் பொழுது கதர் ரகங்கள் திருப்தியாக இருந்தால், வாபீஸ் கொடுத்து ரொக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

மற்ற அம்சத்தில் சர்க்கா சங்கத்தின் விற்பனை வஸ்திராலயத்தைப் போலவே கருதப்படும். சங்கத்தி லிருந்தே பில்புத்தகம், சாதல்வார் எல்லாம் விலைக்குக் கிடைக்கும். ஏஜன்ஸி முறை தமிழ் நாட்டில் விசேஷ திறமையுடன் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது. 1942-ல் சுமார் 70 ஏஜண்டுகள் இருந்தார்கள். இப்பொழுது சுமார் 30 பேர் இருக்கிறார்கள். வருஷத்திற்கு 2, 3 லக்ஷம் ரூபாய் வரையில் ஏஜன்ஸிகள் மூலம் கதர் விற்கப் படுகிறது.

சில ஏஜன்ஸிகளுக்கு போதுமான முதல் இல்லாத காரணத்தினால் அதிக கதர் வைத்துக்கொள்ள முடிவதில்லை. நூற்பதற்கு கருவிகள், பட்டை பஞ்சுகொடுக்க போது மான முதலும் வசதிகளும் இல்லை. ஏஜன்ஸிகள் நூல்விதி அனுஷ்டிப்பதிலும் சில சிரமம் இருக்கிறது. ஆகையினால் பத்து ஏஜன்ஸிகள் சங்கத்தின் கிளைகளாக மாற்றப்பட்டன.

சென்ற வருஷத்தில் கதாயி மண்டல் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. கதரன்பர்கள் சுயதேவை பிரசாரம், சம்பூர்ண கிராமசேவை முதலிய துறைகளில் சேவை செய்ய, கதாயி மண்டல்கள் அமைத்துக்கொள்ள முன் வந்துள்ளார்கள். ஆகையினால் தனிப்பட்ட நபர்களுக்கு இனி ஏஜன்ஸி கொடுப்பது காலகிரமத்தில் நிறுத்தப்படும்

கதர் அன்பர்களே சிறு சிறுமண்டல்களாக ஏற்படுத்தி கொண்டு சுயதேவைக்காக ஸ்தலத்திலேயே நூற்று நெய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அதிக தேவைக்கு சங்கத்தி லிருந்து கதர் வாங்கி நூல்விதிப்படி விற்பனை செய்யலாம். இனிமேல் தனிப்பட்ட நபர்களுக்கு பதிலாக கதாயி மண்டல்களுக்கே கதர்ஏஜன்ஸிகொடுக்கப்படும். தற்சமயம் இருக்கும் ஏஜன்ஸிகளை கூடிய சீக்கிரம் கதாயி மண்டல் களாக மாற்ற வேண்டும் என்பது சங்கத்தின் திட்டம்.

---

# XI

## கதாயிமண்டல்.

1945-ல் சர்க்கா சங்கத்தின் வேலையை திருத்தி அமைக்க வேண்டுமென்று மகாத்மா கூறினர். அதை அவர் விரும்பியபடி சங்கம் செய்வதற்கு போதிய சக்தி இல்லை என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ள வேண்டும். பிறகு 1948 மார்ச்சில் சர்வோதய தீர்மானத் துடன் சங்கம் தன் இறுதியான வேலைத் திட்டத்தையும் முடிவு செய்தது. காந்திஜிக்கு பிறகு சர்க்கா சங்கத்தின் அக்கிராசனர் தீரேந்திர மஜூம்தார். அவருடைய தலைமையில் சங்கம் புதிய திட்டத்தை நிறைவேற்ற முயற்சி செய்து வருகிறது. சங்கத்தின் நோக்கம் சுயதேவை, சம்பூர்ண கிராமசேவை மூலம் கிராம சுயராஜ்யமும், பொருளாதார சமூக சுதந்திரமும். இவை இல்லாமல் காந்திய சுதந்திரம் பூர்த்தி அடையாது. கிராமங்கள்

விடுதலை அடையாமல் தேசத்தின் சுதந்திரம் உண்மையான தல்ல. சுயதேவை தத்துவம் என்பது கதரை பற்றியது மட்டுமல்ல. தனிப்பட்ட வாழ்க்கைக்கும், கிராம சமூகத்தின் தேவை எல்லாவற்றையும் பூர்த்தி செய்வதே சுயதேவை திட்டம். பணத்திற்கு பதிலாக உழைப்பு ஆதாரமாகும். சமூகத்திலும் கிராமத்திலும் எல்லா பிரசினைகளையும் ஆராய்ந்து காந்திஜி காட்டிய அஹிம்சை வழிப்படி உழைப்பு, கூட்டுறவு, பண்டம் மாற்றுதல், இருப்பதை வைத்துக்கொண்டு சமாளிக்கும் சக்தி முதலிய குணங்களினாலும் முறையினாலும்தான் கிராமங்கள் அமைதியாக இருக்க முடியும். கதரின் தத்துவத்தையும், லக்ஷியத்தையும் 1945ல் மகாத்மாஜி விபரமாக விளக்கினார். சர்க்கா சங்கம் வியாபார ரூபத்தில் கதர் உற்பத்தி வேலையிலிருந்து விலக வேண்டுமென்று தீர்மானித்தது. இந்த வேலையை தர்ம ஸ்தாபனங்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறது. சர்க்கா சங்கம் சுய தேவைக்கும் கிராம சேவைக்குமே இனி அதிக கவனம் செலுத்த வேண்டும். கதர் மூலம் ஏழைகளுக்கு ஒரு ஜீவனமும், கதர் அன்பர்களுக்கு ஏதோ கதரும் கொடுக்க வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் முதலில் சொன்ன வேலையை செய்யலாம்.

ஆனால் சர்க்காவினாலும், கதர் மூலமும் பொதுவாக பொருளாதார சமூக பிரசினைகளை தீர்த்து காந்தீய வழியில் சமுதாயத்தை நிலைநாட்டுவதென்ற நம்பிக்கையுடன் உழைப்பவர்களுக்கு கதாயி மண்டல் ஒரு பெரிய சாதனமாகும். கதரைப்பற்றியும் சர்க்காவை பற்றியும் சந்தேகம் ஏற்படும் இந்நாளில் கதர் அன்பர்கள் 10 லிருந்து 100 பேர் வரையில்

சேர்ந்து ஒரு பொது சங்கமாக காந்திய வழியில் தொண்டு புரியலாம். இதற்காகத்தான் கதாயி மண்டல் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. அக்ராசனர் இதை சரியான சமயத்தில் ஆரம்பித்தார். சென்ற வருஷம் தேசத்தில் (81 வது காந்தி ஜயந்தி) சுமார் 900 மண்டல்கள் ஏற் பட்டன. 1950 ல் 82 வது ஜயந்திக்குள் 3000 வரை வளர வேண்டும். தமிழ் நாட்டிலுள்ள 120 மண்டல்கள் 300 ஆக வளர வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1950 பிப்ரவரி மீ கதாயி மண்டல்களின் மாகாண சம் மேளனம் இடுவாய் கிராமத்தில் நடந்தது. காந்திய அஹிம்சா புரட்சியின் ஆதார கருத்துக்களை அக்கிராசனர் ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி விளக்கினார். கதாயி மண்டல் களைப் பற்றிய பொது விதிகளை தனி பிரசுரத்தில் காணலாம். ஆனால் மண்டல்களின் சில முக்கிய வேலை திட்டத்தையும், லக்ஷியத்தையும் மட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

1. ஒவ்வொரு கிராமத்திலோ, நகரத்தின் வார்டிலோ 10 லிருந்து 100 பேர் வரை சேர்ந்து மண்டலை அமைக் கலாம்.

2. ஒவ்வொருவரும் சுயதேவைக்காக மாதம் குறைந்தது $7\frac{1}{2}$ சிட்டம் நூற்க வேண்டும்.

3. சர்க்கா சங்கத்தின் லக்ஷியத்தை ஏற்றுக்கொண்டு அதன் அங்கத்தினராக சேர்ந்து தன் உழைப்பின் மூலம் தானே நூற்ற 6 சிட்டம் சந்தாவாக கொடுக்க வேண்டும்.

4. சுயதேவைக்காக பஞ்சு சாகுபடி செய்து பஞ்சடித்து, நூற்று, சரிழையாக்கி நெய்வது வரை

வேண்டிய மூலப்பொருள்கள், கருவிகள், பயிற்சி, இவைகள் மண்டலில் சேர்ந்தவர்களுக்கும், சேராதவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.

5. நூல் விதிப்படி கதர் வாங்கி வினியோகிக்கலாம்.

6. கிராமத்திலுள்ள அல்லது நகர வார்டிலுள்ள எல்லோரும் நூற்போர்களாகவும், கதருடுத்துவோராகவும் செய்ய வேண்டும்.

7. காந்தீய பொருளாதார தத்துவங்களை ஆராய்ச்சி செய்து பரப்பவேண்டும். பிரசங்கங்கள், முகாம்கள் வாசகசாலைகள், பிரசுரங்கள் மூலம் பரப்பலாம்.

8. கிராமங்களில் கூட்டுறவு வாழ்க்கை சண்டை சச்சரவு இல்லாமல் அமைதியாக இருப்பதற்கும், பணத்திற்கு பதிலாக பண்ட மாற்றுதல் முறையை கூடுமான வரை கையாளுவதற்கும் உதவி செய்யவேண்டும்.

9. ஸ்தலத்திலுள்ள பொருளாதார சமூக பிரச்சனைகளை ஆராய்ச்சி செய்து ஸ்தலத்திலிருந்து மூலப்பொருள்கள் மூலம் கிராமத்தின் செல்வம் நகரத்திற்கும் ஆலைகளுக்கும் போகாமல் பாதுகாக்க வேண்டும். நகரங்களிலிருந்தும் ஆலைகளிலிருந்தும் அனுவசிய சாமான்கள் வராமல் பாதுகாக்கவேண்டும்.

10. ஸ்தலத்தில் கூட்டுறவு உழைப்பையும் பக்தியையும் தூண்டுவதற்கு பொது பிரார்த்தனை, நூற்புயக்ஞம், பொது ரோடு போடுவது, கிணறு வெட்டுவது, தோட்டம் வைப்பது இம்மாதிரி பொதுவேலைகளிலும் ஈடுபட வேண்டும்.

11. முதியோர் கல்வி, ஆதாரக்கல்வி, பசுமடம் இதர குடிசைத் தொழில்கள் இம்மாதிரியான பல துறைகளிலும் சேவைசெய்யலாம். நூற்பதிலிருந்து ஆரம்பித்த கதாயி மண்டல் நாளடைவில் வளர்ந்து சமூகத்தில் சாந்தி சேனையாக மாறி காந்தீய கிராம சுயராஜ்யத்தை இறுதியில் ஏற்படுத்துவது சாத்தியமாகும். ஆகவே கதாயி மண்டலின் லக்ஷியம், ராஜீயத் துறையில் கிராம சுயராஜ்யம், பொருளாதாரத் துறையில் சுயதேவையும், பண்டமாற்றுதலும் கூட்டுறவும் சமூகத் துறையில் வர்க்க பேதமற்ற ஒரே மனித சமுதாயமும் ஆகும். இதை உழைப்பு, சஹிப்பு, தன்னம்பிக்கை, சத்தியம், அஹிம்சை முதலிய ஆதார தத்துவங்களினால் அடைய வேண்டும். இதற்கு கதாயி மண்டல் இயக்கம் காந்தீய வழியில் ஒரு தேசீய இயக்கமாகும். சர்க்காவில் இந்த தத்துவத்தில் நம்பிக்கையுள்ளவர்களும், காந்தி பக்தர்களும் கதாயி மண்டல்கள் அமைத்துக் கொள்வதும் அவர்களுடைய கடமையாகும்.

---

## XII

## மாகாண காரியாலயம்.

இது வரையில் பல இலாக்காக்களைப் பற்றி கூறி வந்தோம். எல்லாவற்றையும் அமைத்து மேற்பார்வை பார்த்து மாகாணத்தில் பொதுவாக கதர்வேலை திருப்திகரமாக வளரும்படி பார்க்கும் பொறுப்பு மாகாண காரியாலயத்தை சேர்ந்தது. மாகாண காரியாலயம் விசேஷ

திறமையுடன் தனது லக்ஷியத்தை மறக்காமல் எப்பொழுதும் வேலை செய்து வந்தால்தான் எல்லா இலாக்காக்களும் சரிவரவேலை செய்யும். ஆகையினால் இதைப்பற்றி கடைசி யில் கூறுவது பொருத்தமாகும்.

மாகாணத்தின் கதர்வேலையின் பூரு பொறுப்பும் அகில இந்திய தலைமைக் காரியாலயத்தாரால் மாகாண காரியதரிசியிடம் ஒப்படைக்கப்படுகிறது. மாகாண காரியதரிசி தலைமைக் காரியாலய காரியதரிசிக்கு பொறுப் பாவார். தலைமைக் காரியாலய காரியதரிசி சங்கத்தின் டிரஸ்டிகளுக்கு பொறுப்பானவர். ஆகவே டிரஸ்டிகள் அவ்வப்பொழுது தீர்மானிக்கும் வேலைத் திட்டத்தை நிறை வேற்றும் பொறுப்பு காரியதரிசியிடம் குவிந்து கிடக்கிறது. மாகாண காரியதரிசி திறமையுள்ள சக ஊழியர்களிடம் கலந்து தலைமைக் காரியாலயத்தின் கொள்கைகளின்படி எல்லா வேலைத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். சர்க்கா சங்கத்துக்கு முக்கியமாக ஐந்து முக்கிய பொறுப்பு கள் உண்டு.

1. பொது ஜனங்களிடமிருந்து மஹாத்மா வசூலித்த நிதியை சிக்கனமாகவும், நியாயமாகவும் உபயோகப் படுத்துவது. நிதியை தர்ம கர்த்தாவின் பொறுப்புடன் பாது காப்பது.

2. நூற்போர்களுக்கும் நெய்பவர்களுக்கும் இதர உழைப்பாளிகளுக்கும் நியாயமான கூலி கிடைக்கும்படி பார்த்துக் கொள்வது.

3. கதர் அன்பர்களுக்கு தாமதமில்லாமல், தேவை யான கதர் ரகங்கள் கிடைக்க செய்வது.

4. சர்க்கா சங்கத்தின் லக்ஷியமாகிய சுயதேவைத் திட்டத்தை நிறைவேற்றுதல்.

5. சர்க்காவின் அடிப்படையான தத்துவமாகிய சத்தியத்தை கைவிடாமல், நியாயமாகவும், நேர்மையாகவும் சங்கத்தின் எல்லா வேலைகளையும் நடத்துதல். இதை சரி வர செய்வதற்கு காந்திய தத்துவத்தைப் பற்றிய பூர்ண ஞானமும் நம்பிக்கையும் அவசியம். வியாபார ரீதியிலுள்ள திறமையும் ஓரளவில் அவசியம். கதருக்காக உழைப்பவர்களின் கஷ்டங்களையும் அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமையையும் நன்ருக உணர்ந்திருக்க வேண்டும். கதர் அன்பர்களின் தேவை, மனப்போக்கு முதலியவைகளை கவனித்து சேவை செய்ய வேண்டும். இது சாதாரணமாக வெறும் அதிகாரத்திஞலோ, வியாபார முறையிலோ நடைபெருது. அல்லது வெறும் தத்துவத்தை மட்டும் அனுஷ்டிப்பதிஞல் நிறைவேருது. திறமை, மஞேபாவம், நல்லுணர்ச்சி லக்ஷியத்தில் கருத்து, அடக்கம், பணிவு முதலிய நற்குணங்களிஞல் தான் சாத்யமாகும். மாகாணக் காரியாலயத்தில் இம்மாதிரி ஊழியர்கள் அவசியம். மாகாண காரியாலயம் மற்ற இலாக்காக்களுக்கு ஒரு உதாரணமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் வியாபார காரியாலயம் மாதிரி அமைந்து விடும்.

## மாகாண காரியாலயத்தின் முக்கிய வேலைகள் பின் வருமாறு

மாகாணத்தில் நடக்கும் கதர் வேலைக்கு விபரமான பட்ஜட் தயாரிப்பது. 2. நூற்போர், நெய்வோருக்கு தகுந்தகூலி நிர்ணயிப்பது. 3. கதருக்கு நியாயமான

விலை நிர்ணயிப்பது 4. கிளைகளின் நிர்வாகத்திற்கு ஏற்பாடு. 5. நிதியை சரியாக உபயோகித்து பூர்ணமாக பயன்படுத்திக்கொள்வது. 6. சங்கத்தின் லக்ஷியத்திற்காக உழைக்கக்கூடிய தொண்டர்களை சேர்ப்பது. அவர்களுக்கு தகுந்த ஊதியம், பயிற்சி முதலியவை கொடுப்பது. 7. பரிசீலனை, புள்ளி விவரம் முதலியவை. 8. சங்கத்தின் சுயதேவை லக்ஷியத்திற்கு பிரசாரம், கண்காக்ஷி, பயிற்சி முகாம் முதலிய வேலைகள். 9. இதர விசேஷ வேலைகள்.

1. எந்த செலவும் தலைமைக்காரியாலய அனுமதியின்றி செய்யக்கூடாது. ஒவ்வொரு வருஷமும் ஆரம்பிக்கும் முன்னமே ஒவ்வொரு கிளையிலும் எதிர்பார்க்கும் வேலை, குறைந்த பட்சம் செலவு, உற்பத்தி விற்பனையில் வருமானம், செலவு, அவசியமான புதிய தொண்டர்கள், அவர்களின் சம்பளம், சம்பள உயர்வு, இவைகள் எல்லாவற்றிற்கும் விபரமான பட்ஜட் தயாரிக்கவேண்டும். அத்துடன் இலாகாக்கள், மத்திய வஸ்திராலயம் முதலியவைகளுக்கும் வரவு செலவுத்திட்டம் தயாரித்து தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி பட்ஜட் கமிட்டியின் அனுமதியுடன்தான் செலவு செய்யவேண்டும்.

மாகாணத்தின் வரும் வருஷ உற்பத்தி விற்பனையைக் கீழ்கண்டபடி நிர்ணயிக்கவேண்டும்.

1. சென்ற வருஷ உற்பத்தி. 2. சென்ற வருஷம் விற்பனை. 3. இவ்வருஷம் எதிர்பார்க்கும் விற்பனை. 4. சென்ற வருஷ முடிவில் இருக்கும் ஸ்டாக்போக பாக்கிக்குத்தான் உற்பத்தியை மதிப்பிடவேண்டும். சென்ற

வருஷம் நூல் உற்பத்தி, நெய்ததுபோக இந்த வருஷம் ஆரம்ப இருப்பு, அடுத்த வருஷம் நெசவுக்கு தேவையான நூல், இவைகளை கணக்கிட்டு பாக்கிக்குத்தான் உற்பத்தி மதிப்பிடவேண்டும். உற்பத்தியாகும் நூல் என்னதரம் வேண்டும்? எதில் அதிகம் தேவை, எதில் அதிகம் உற்பத்தி செய்யவேண்டும் என்ற விபரங்களை விபரமாக மதிப்பிட வேண்டும். விசேஷ ஜரிகை பட்டு முதலிய ரகங்கள் எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டும் என்று கணக்கிட வேண்டும். இதேமாதிரியாக பஞ்சு எவ்வளவு தேவை, எவ்வளவு நூற்போர்கள் சொந்த பஞ்சு உபயோகப் படுத்துவார்கள், மீதி சங்கம் கொடுக்கவேண்டிய பஞ்சு எவ்வளவு? அதற்கு சங்கத்திடம் கையிருப்பு போக பாக்கி எவ்வளவு வாங்கவேண்டும், அதற்காகத் தேவையான முதலை கணக்கிடவேண்டும். இதற்காக விற்பனைமூலம் வருமானத்தையும் நிச்சயம் செய்து கொண்டு செலவுகளை அதற்குத் தகுந்தாற்போல் ஈடு செய்வது அவசியம். லாபமேற்படாமலும், நஷ்டமேற்படாமலும் சரிக்கட்டப் படும் பட்ஜட்தான் உயர்ந்தது. லாபமேற்பட்டால் உழைப்பாளிகளிடமிருந்தோ கதரன்பர்களிடமிருந்தோ அது கிடைத்ததாக கருதவேண்டும். கூலியை குறைத்தோ, விலையை உயர்த்தியோ லாபத்தை அடைவது நியாய மாகாது. நமக்கு செலவுக்கு வேண்டிய அளவிற்கு மட்டும் லாபம் வைத்துக்கொள்ளலாம். நஷ்டம் ஏற்பட் டால், சங்கத்தின் பொது சொத்துக்கு நஷ்டம் ஏற்படும். ஆகவே வெகு ஜாக்கிரதையாக சென்ற வருஷ அனுபவத் தைக்கொண்டு வருங்கால விசேஷ நிலைமையை அனுசரித்து பட்ஜட்டை நிர்ணயம் செய்வதற்கு விசேஷ திறமையும்

தூரதிருஷ்டியும் அவசியம். வியாபாரிகள் லாபத்திற்காக செய்வதைப்போலநாம் பரோபகாரத்திற்காக, சுயநலமற்ற சேவைக்காக செய்யவேண்டும். ஆகையினால் பட்ஜட் விஷயத்தில் விசேஷ கவனம் அவசியமாகிறது.

2. அதற்கடுத்தபடியாக நூற்போர், நெய்வோர் முதலியவர்களுக்கு சங்க தத்துவப்படி ஜீவாதாரக்கூலி கிடைக்கவேண்டும். கூடுமானவரையிலும் கதர் உற்பத்தி யாளருக்கு சிரமமில்லாமலும், இடைவிடாமலும் வேலைக்கு மூலப்பொருள்கள் கொடுத்து வரவேண்டும். விற்பனையும் சுயதேவையும் சரியாக நடந்துவந்தால் நூற்போருக்கும், நெய்வோருக்கும் போதுமான வேலை கிடைக்கும். விற்பனையாகாமல் சரக்கு முடங்கி கிடக்கும்பொழுது, மூலப்பொருள் இல்லாமலோ, கூலிகொடுக்க ரொக்க மில்லாமலோ, நிலைமை ஏற்படாமல், விசேஷ காரணங் களினால் தவிர சாதாரணமாக இம்மாதிரி கஷ்டம் ஏற் படாமல் பார்க்கவேண்டும். நூற்புக்கூலியை அல்லது நூல் விலையை அடிக்கடி காரணமில்லாமல் மாற்றக் கூடாது. நூலின் விலை பஞ்சின் விலையைப்பொருத்திருக் கிறது. பஞ்சின் விலையில் பொதுவாக ஏற்ற இறக்கமிருக் கலாம். கைவசமுள்ள ஸ்டாக், கொள்முதல் செய்ய வேண்டிய பஞ்சின் விலை, நிச்சயித்து அதன்படி ஒரு வருஷத்திற்காக நூல் விலையை தீர்மானிக்கலாம். வருஷத் திற்கு ஒரு முறைக்குமேல் ஏற்றுவதும், குறைப்பதும் முறையாகாது.

3. முன்னால் சொன்னதுபோல் கதருக்கும் அடக் கத்திற்கும் செலவுக்கும் மேல் லாயம் வைக்கக்கூடாது.

கதர் விலையை வருஷத்திற்கு ஒருமுறைக்குமேல் ஏற்று வதோ இறக்குவதோ தவிர்க்கவேண்டும். மார்க்கெட் நிலவரம் அனுசரித்து, லாபத்தை உத்தேசித்து வியாபாரிகள் கூலியிலும், விலையிலும் ஏற்ற இறக்கம் செய்கிறார்கள். நாம் கதரன்பர்களின் நன்மையையும், உழைப்பாளிகளின் நன்மையையும் உத்தேசித்து நமது தத்துவத்தை விடாமல் சங்கத்தின் நிதியை பாதுகாக்க அவசியமானபொழுது மட்டும் கூலியிலும், விலையிலும் மாறுதல் செய்யலாம். அடிக்கடி மாற்றினால் கதர் அன்பர்களுக்கு நம்பிக்கை போய்விடும். கதர் விலையை ஏற்றுவதோ, இறக்குவதோ நிதியின் நிலைமையை அனுசரித்தே செய்யவேண்டும். உதாரணமாக முற்பாதி வருஷத்தில் லாபம் கிடைத்து, பிற்பாதியிலே கூலியை ஏற்றவோ, விலையை குறைப்பதோ சாத்தியமாகலாம். இதற்கெல்லாம் ஸ்டாக் நிலைமை, உற்பத்தியின்போக்கு, விற்பனை நிலைமை, கைவசமுள்ள நிதி, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமை இவைகளை தீவிர ஆலோசித்தும் யூகித்தும் அனுபவம் பெற்ற சக ஊழியர்களுடன் கலந்தும், தலைமைக்காரியாலய அனுமதி பெற்று முடிவு செய்யவேண்டும். மேலே சொன்ன காரணங்களை தவிர மார்க்கெட் நிலைமையை உத்தேசித்து நாம் விலையை ஏற்றவோ இறக்கவோ கூடாது. விலை, கூலி சம்பந்தமான முடிவுகள் புள்ளி விபரங்களுடன் நிலைமையை ஆராய்ந்து குறிப்பிட்ட தேதியில் உடனே அமுலுக்கு கொண்டுவரவேண்டும். இதைப்பற்றி வெளி யில் விவாதிப்பதும், தாமதம் செய்வதும் சங்கத்தின் நன்மையையும், கதர் அன்பர்களின் நன்மையையும் பாதிக்கும். விலை ஏற்றுவதனாலும், குறைப்பதினாலும்

ஸ்டாக்கின் மதிப்பு குறையலாம் அல்லது ஏறலாம். இதையும் கணக்கிட்டு கூடுமான வரையிலும் சங்கத்திற்கு லாபமோ, நஷ்டமோ ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. கிளைகள் சம்பந்தமாக நடப்பு வருஷத்தில் எந்த கிளைகள் வேலை செய்யவேண்டும் என்பதை நிச்சயித்துக் கொள்ளவேண்டும். சில கிளைகள் இணைக்கப்படலாம். சில பிரிக்கப்படலாம். சில இடங்களில் புதிய கிளை ஆரம்பிக்கப்படலாம். நஷ்டமாகும் கிளைகளை மூடவேண்டி யிருக்கும். இவைகளை பட்ஜட் தயாரிக்கும்போதே நிச்சயிக்கவேண்டும். கிளைகளுக்கு வேண்டிய திறமை யான தொண்டர்கள், அவர்களின் சம்பளம் முதலிய வற்றையும் பட்ஜட் போடும்போதே நிர்ணயிக்கவேண்டும். நிர்வாக அவசியத்திற்காக செய்யவேண்டிய மாறுதல்கள் செய்வது நலம். ஒவ்வொரு கிளையின் திறமையான நிர்வாகத்திற்கு தகுந்த ஏற்பாடு செய்யப்படவேண்டும். கிளைகளுக்கு தேவையான இடம், தளவாடம் முதலியவை களுக்கும் பட்ஜட்டில் சேர்த்துவிடவேண்டும்.

வஸ்திராலயங்களை அடிக்கடி இங்கும் அங்கும் மாற்று வது சரியல்ல. உற்பத்திக்கிளை கிராம மத்தியில் இருக்க வேண்டும். விற்பனை வஸ்திராலயம் கடை தெருவில் இருக்கவேண்டிய அவசியமில்லை. விற்பனை வஸ்திராலயத் தைப்பற்றி முன்னமே கூறியிருக்கிறோம். கதர் வஸ்தி ராலயம் சுயதேவை வித்தியாலயமாக மாறவேண்டுமென் பதால் கடை தெருவைவிட்டு தெருக்களுக்கு மத்தியில் ஒரு வீடுபோல் அமையலாம். வாடகையும் குறையும்; விளக்கு முதலிய மகட்டுகள் அவசியமில்லை.

கிளைகளிலிருந்து விற்பனை கிளைகளுக்கு கதர் கிடைக்கும்படியும் விற்ற பணம் பாங்கியில் சேர்ந்து உற்பத்திக்கு கிடைக்கக்கூடிய முறையும் ஏற்படுத்தி கொள்ளவேண்டும். தினப்படி கணக்கு, குறிப்பின் நகல், ஐந்தொகை, நிர்வாக விஷயமான கடிதப்போக்கு வரத்து இவைகளுக்குத்தகுந்த ஏற்பாடு அவசியம். கிளைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களும், அன்பர்களுக்கு கதர் ரகங்களும் காலா காலத்தில் உற்பத்திசெய்து வினியோகிக்க ஏற்பாடு செய்வது மாகாணக்காரியாலயத்தின் முக்கிய வேலை. இவை எல்லாம் மத்திய வஸ்திராலயத்தின் பொறுப்பு என்று முன்னால் சொன்னபோதிலும் நிர்வாக ஏற்பாடு செய்யும் பொறுப்பு மாகாண காரியாலயத்தை சேர்ந்தது. ஒவ்வொரு கிளைக்கும் திறமையுள்ள தொண்டர்களை கொடுக்கவேண்டும். கிளைகளின் நிர்வாகத்தில், கைவசமுள்ள ஸ்டாக், ரொக்கம் முதலியவைகளில் தவறுதல் ஏற்பட்டால் உடனே விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

5. முக்கியமான விஷயம் நிதியை பற்றியது. சங்கத்தின் நிதி மக்கள் சேவைக்கு கிடைத்தது. நிதியை உபயோக படுத்தாமல் பாங்கில் வைத்திருந்து வட்டி சம்பாதிப்பது சரியல்ல. அல்லது எதோ பஞ்சிலோ, நூலிலோ, கதரிலோ, கருவி, கட்டிடம் இவைகளிலோ முடக்குவதும் சரியல்ல. நிதி எவ்வளவு முறை சேவைக்காக பயன்படுத்த முடியுமோ அவ்வளவு முறை பயன் படுத்தவேண்டும். இதை மூலதனத்தின் உபயோகம் (turn over of the Capital) என்பார்கள். ஒரு லக்ஷ ரூபாய் மூலதனம் வைத்து வியாபாரிகள் பத்து மடங்கு பலனை

எடுக்கிறார்கள். துரிதமாக உற்பத்தி செய்வதும், விற்பனை செய்வதும் மூலம் மூலதனத்தின் பூரண உபயோகத்தை அடைகிறார்கள். நமது அநுபவத்தில் சங்க நிதி நூலிலோ, பாங்கிலோ முடங்கிக் கிடப்பதை பார்க்கிறோம். நிதி குறையாமலும் அதிகமாகாமலும் வேலையில் பூராவாக சுற்றிக்கொண்டிருக்கவேண்டும். வியாபாரிகள் லாபத்திற்கு செய்வது போல நாம் அறிவுடனும் யூகத்துடனும் சிரத்தையுடனும் காலத்தை வீணாக்காமல் மக்கள் சேவைக்காக செய்யவேண்டும்.

சாதாரணமாக யுத்தகாலத்திற்குமுன் ஒரு லட்சம் முதல் வைத்துக்கொண்டு 2 லட்சம் உற்பத்தி செய்து 2 லட்சம் விற்கமுடியும். யுத்த சமயத்திலோ 4 மடங்கு வரை உற்பத்திசெய்து விற்பனை செய்ய முடிந்தது. தற்சமயம் 3 மடங்காவது செய்யக்கூடும். வேலையின் தேவைக்குமேல் நிதி அதிகமாக இருந்தால் தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பவேண்டும். வேலைக்கு போதாமல் இருந்தால் தலைமைக்காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தலைமைக்காரியாலயம் வேறு, மாகாண காரியாலயம் வேறு என வித்தியாசம் காட்டக் கூடாது. எல்லா நிதியும் தலைமைக் காரியாலயத்தை சேர்ந்ததே. இதில் குறுகிய மாகாண மனப்பான்மைக்கு இடங்கொடுப்பதுசங்கத்தின்கொள்கைக்குவிரோதமானது.

6. சர்க்கா சங்கத்தின் வேலைக்கு தகுந்த தொண்டர்களைச்சேர்த்து அவர்களுக்கு தக்க பயிற்சியும் வேலையும் கொடுப்பது மாகாண காரியாலயத்தின் முக்கியமான வேலையாகும். சங்கத்தின் வேலை முக்கியமாக தொண்டர்களைப் பொருத்ததே. ஒத்துழையாமை இயக்கத்திலும்,

சுதந்திர இயக்கத்திலும் ஈடுபட்டவர்கள், படித்த அறிவாளிகள் தியாகபுத்தியுடனும், சேவாநோக்கத்துடனும் பலர் ஆரம்பகாலத்தில் கதர் இயக்கத்தில் கலந்து கொண்டார்கள். அவர்களுடைய விசேஷ சேவையினாலும் உழைப்பினாலும்தான் கதர் இயக்கம் இவ்வளவு வளர்ந்து வந்தது என்பதை நாம் மறக்கமுடியாது. அவர்கள் தங்கள் குடும்பத்தையும் கவனியாமல் ஓய்வில்லாமல் இராப்பகலாக முழு நேரத்தையும் இதற்கே அர்ப்பணம் செய்தார்கள்.

கதரியக்கம் தேசீய இயக்கத்துடன் கலந்திருந்ததினால் இவ்வளவு தியாகமும் உழைப்பும் உற்சாகமும் காட்டினார்கள். சுதந்திரம் அடைந்த பிறகு சர்க்கா சங்கம் ஒரு ராஜீய-சமூக-பொருளாதார லக்ஷியத்தைக் கொண்டால் தான் ஒரு புதிய உற்சாகமும் ஜீவனும் சங்கத்திற்கு ஏற்பட முடியும். அப்பொழுதுதான் நமது சங்கத்தின் புதிய வேலைக்கு தகுந்த படித்த வாலிபர்களையும் அறிவாளிகளையும் தியாகம் செய்யக்கூடியவர்களையும் சங்கம் வசீகரிக்க முடியும். இதை எண்ணியே சென்ற வருஷம் காந்தி ஜயந்தியில் ஸ்ரீ தீரேந்திர மஜூம்தார் வாலிபர்களுக்கு ஒரு அழைப்பு விடுத்தார்.

சர்க்கா சங்கம் ஏழைகளுக்காகவே சேவை செய்து வருவதால் அவர்களின்வாழ்க்கையை ஒட்டியே தொண்டர்களின் வாழ்க்கையும் ஊதியமும் இருக்கவேண்டும். ஆகையினால் சர்க்கா சங்கத்தில் அதிகபட்ச உயர்ந்த சம்பளம் ஒரு எல்லைக்குள் இருப்பது நியாயம். சர்க்கா சங்கத்தில் இப்பொழுது அதிகமான சம்பளம் 100 ரூபாய். தற்கால விலைவாசிப்படி ரூபாய் 40-ம் கிடைக்கும். சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பதுபோல குறைந்த சம்பளக்

காரருக்கும் உயர்ந்த சம்பளக்காரருக்கும் சங்கத்தில் அதிக வித்தியாசம் இல்லை. ஊழியர்களின் சம்பளம், அவர்களின் படிப்பு, திறமை, ஒழுக்கம், அனுபவம், சங்கத்தின் லக்ஷ்யத்திற்காக உழைப்பு முதலியவைகளைப் பொருத்துள்ளது. மற்ற துறையில் இருப்பதுபோல ஒரு குறிப்பிட்ட கிரேடுகளும், வருஷாந்திர உயர்வும், சாத்தியமில்லை. தொண்டர்களுடைய வேலையும் நிரந்தரமாக இருக்கும் என்பதில்லை. இருந்தாலும் தொண்டர்களுக்கு சங்கத்தில் ஸ்திரமான இடமிருக்காது என்றும் சொல்வதற்குமில்லை. உற்பத்தியும் விற்பனையும் ஏறி இறங்கிக்கொண்டிருக்கிறது. சங்கத்தின் சரித்திரத்தில் எவ்வளவோ கஷ்டமான நிலைமைகள் பலமுறை ஏற்பட்டன. சங்கத்தில் கிடைக்கும் ஊதியம் போராமல் அநேகர் வேறு வேலைக்கோ, வியாபாரத்திற்கோ போய்விடுகிறார்கள். சங்கத்தின் நன்மைக்காகவே பல கிளைகளை மூடி தொண்டர்களையும் வேலையிலிருந்து நிறுத்த வேண்டியிருந்தது. போதிய தகுதியும் திறமையும் அனுபவமும் இல்லாதவர்கள் அநேகமாக நிறுத்தப்பட்டார்கள். அதேபோல் சங்கத்தின் வேலை வளரும்பொழுது புதிய தொண்டர்கள் எடுத்துக்கொள்ளப் படுவார்கள். சங்கத்தின் லக்ஷ்யத்தில் ஊறி பூருவாக கதர் வாழ்க்கையை ஏற்று உண்மையாக சேவை செய்கிறவர்களை சங்கம் எப்படி விலக்க முடியும்? அவர்களும் சங்கத்தை எப்படி விட்டு அகல முடியும்; அவர்களும் சங்கமும் ஒன்றுகி விடுகிறார்கள்.

தொண்டர்களில் எல்லோருக்கும் சம நிலைமைதான். காரியதரிசியாயிருந்தாலும்சரி மற்ற வேலைசெய்யும் தொண்டரும்சரி,ஏற்றத் தாழ்வு இல்லை. ஆபீஸர் என்றும்,குமாஸ்தா

என்றும், பியூன் என்று வகுப்புகள் இல்லை. எல்லோரும் ஒரே வகுப்பும், குடும்பமே. அவரவர்கள் செய்யும் வேலை, பொறுப்பு வாங்கும் சம்பளம் முதலிய வற்றில் பேத மிருந்தாலும், எல்லோரும் ஒரே வித அன்பினாலும் சேவை யினாலும் கட்டுப்பட்டவர்கள். எல்லோரும் பொதுஜன சேவை செய்பவர்கள். பதவி என்பது இல்லை. பதவிக் காக அதிக சம்பளமும் இல்லை. அந்தஸ்திற்காக சம்பள உயர்வு கிடையாது. பரிசோதகர், நிர்வாகியாகவோ, நிர்வாகி உதவியாளராகவே மாற்றப்பட்டாலும் அந்தஸ் திற்கும் சம்பளத்திற்கும் குறைவில்லை. பழைய காரிய தரிசி உதவியாளராகவும் வேலை செய்யலாம். ஏற்றத் தாழ்வில்லை. சமத்துவ உணர்ச்சியும் உயர்ந்த மனோபாவ மும் இந்த ஸ்தாபனத்திற்கு ஒரு விசேஷ குணம். ஒரு வருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்வதல்லாமல் ஒரு வருக்கு கீழ் மற்றவர் ஊழியம் செய்வதாகக் கருத முடி யாது. உயர்ந்த தத்துவங்களுடனும், சமத்துவ பாவத் துடன் ஒரு குடும்பம் போல் இருந்து கொண்டு லக்ஷ கணக்கான மூலதனத்தை பரிபாலித்து லக்ஷகணக்கான மக்களுடன் பலதுறையில் சேவை செய்யும் சந்தர்ப்பம் வேறு ஒரு ஸ்தாபனத்தில் இந்த அளவிற்கு இருக்குமா என்பது சந்தேகம்.

மாகாணத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்புள்ளவர் ஒவ்வொரு தொண்டரையும் நன்றாக அறிந்து, எந்த வேலை யில் அவருக்கு அதிக திறமையுண்டோ அதற்கு தகுந்தாற் போல் வேலை கொடுத்து சங்கத்தின் நன்மைக்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும். தொண்டரின் மன சக்தி யும் வளரும். ஒருவருடைய சக்திக்கு பொருத்த மில்

லாத வேலை கொடுத்தால் தொண்டரின் சக்தியும் பிரகாசிக்காது. தொண்டருடைய திறமையும் குன்றி அவரை இழக்க நேரிடுவதுடன் சங்கத்தின் வேலையும் கெடும். தொண்டருக்கு போதிய ஊக்கம் உற்சாகம், பொறுப் புணர்ச்சி இவைகளை உண்டுபண்ண முயற்சிக்க வேண்டும். தொண்டர்களின் பூர்ண சக்தியை வெளியே இழுத்து சங்கத்தின் நன்மைக்கு பயன்படுத்திக் கொள்வது நிர்வாகஸ்தரின் திறமையை பொறுத்திருக்கிறது. சங்கத்தில் தொண்டர்களுக்கு அதிக படிப்பை விட, சங்கத்தில் நம்பிக்கையும், குணமும், திறமையும் தான் முக்கியமாகும். சங்கத்திற்கு தகுந்தவர்களை தேர்ந்தெடுத்து தகுதியற்றவர்களை அவ்வப்போது விலக்கவேண்டும். தொண்டர் யாரும் ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து விலகலாம். ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து சங்கம் யாரையும் விலக்கலாம்.

சங்கத்தின் சொத்து தொண்டர்கள் கையாளுவதால் ரொக்க ஜாமீன் அவசியமாகிறது. தொண்டர்களுக்காக ரஜா விதிகள் உண்டு. தொண்டர்களின் குடும்ப நன்மைக்காக க்ஷேம நிதியும் உண்டு. நிர்வாகத்தினருக்கும் தொண்டருக்கும் அதிக மனவேற்றுமை அபிப்ராய பேதம், கொள்கையிலும், முறையிலும் பேதம், இருந்தால் தொண்டர்கள் விலகிக் கொள்வதுதான் நலம். இதற்காக சண்டை சச்சரவுகளோ, ஒருவருக்கொருவர் குறைகூறிக் கொண்டிருப்பதோ, ஸ்தாபனத்திற்கு பொருத்தமல்ல. எந்த தனிப்பட்ட நபரையும்விட ஸ்தாபனம் பெரியது. ஆகவே ஸ்தாபனத்தில் இருந்துகொண்டு அதற்கு இடையூறு செய்யாமல் விலகிக் கொள்வதே நலம்.

கணக்கு, ரொக்கம், ஸ்டாக் இவைகளுக்கு தொண்டர்கள் சங்கத்தின் முறைப்படி கணக்கு வைத்துக் கொண்டு சொத்தை பாதுகாக்க வேண்டும். தங்களுடைய அஜாக்கிரதையினுல் ஏற்படும் ஸ்டாக் குறைவுகளை தாங்களே ஈடு செய்ய வேண்டும். ஸ்டாக்கில் ஏற்படும் குறைவு முதலியவைகளை பூரண விசாரணை செய்து சம்பந்தப்பட்ட தொண்டரிடமிருந்து வசூல் செய்யவேண்டியது மாகாண நிர்வாகஸ்தரின் பொறுப்பு. ஏதாவது தொண்டர் சங்கத்தின் சொத்தை கையாண்டு விட்டால் கோர்ட்டு வரையிலோ அல்லது போலீசாரிடம் ஒப்புவிக்க வேண்டியதாக இருந்தாலும் சங்கம் தயங்கக் கூடாது.

தொண்டர்களுக்குள் தனி சங்கமோ யூனியனே, கோஷ்டியோ இருப்பது சரியல்ல. பொது ஜன சேவை யில் உரிமை ஒன்றும் இல்லை. எல்லாம் கடமைகளும், பொறுப்புகளும்தான். ஆகவே தினப்படி வேலைக்கு மணிநேரமோ, விடுமுறையோ, சம்பள விஷயமோ, மற்ற பாதுகாப்புகள் விஷயமாகவோ ஒரு பிரசினையும் எழுப்ப முடியாது. பொதுவாக உள்ள விதியும் சம்பிரதாயங் களுக்கும் நிர்வாகஸ்தர்களுடைய பாரபக்ஷமற்ற முடிவுக் கும் கட்டுப்படவேண்டும். விதிக்கு மாருக நடப்பதாக தோன்றினல் தலைமைக் காரியாலய காரியதரிசியிடம் மனுச் செய்து கொள்ளலாம். அவருடைய முடிவை ஏற்றுக் கொள்ள வேண்டும். பொதுவாக சங்க நிர்வாகஸ்தர் நியாய புத்தியுடனும், பாரபட்சமற்றும் தொண்டர்களை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறைகள் இருந்தால் தலைமைக் காரியாலயமே தக்க நடவடிக்கை

எடுக்க கடமைப்பட்டிருக்கிறது. சங்கத்தின் சொத்தைத் தவிர, அதன் மதிப்பையும், பெயரையும், கொள்கைகளையும் பாதுகாக்க ஒவ்வொரு தொண்டரும் பொருப்பாளியாவார். இவைகளுக்கு ஏதேனும் பங்கம் விளைந்தால் ஒவ்வொரு தொண்டரும் குறைகளைத் திருத்த பாடுபட வேண்டும். நிர்வாகஸ்தரின் கோபத்திற்கு ஆளாகக் கூடுமென்றோ உத்தியோகத்தை இழக்கக்கூடுமென்றோ பயமில்லாமல் தங்கள் கடமையைச் செய்யவேண்டும்.

7. சங்கத்திலுள்ள எல்லா கிளைகளிலும் இலாக்காக்களிலும் கணக்கு பரிசீலனை மிகவும் முக்கியமானது. தினப்படி ரொக்கம் ஸ்டாக் சம்பந்தத்தையும் பரிசீலனை செய்வதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் பரிசோதகர்கள் நியமிக்கப்படவேண்டும். ஒவ்வொரு பரிசோதகரும் சுமார் 10 கிளைகளில் வேலை செய்யலாம். அவசியமாக இருந்தால் உதவி பரிசோதகர்களும் இருக்கலாம். பரிசோதகர்கள் கணக்கு, உற்பத்தி விற்பனை, சங்கத்தின் நிர்வாக முறை, சங்கத்தின் தத்துவம் எல்லாவற்றிலும் அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் அவசியம். கிளைகளிலுள்ள தொண்டர்களுக்கு தன்னுடைய வாழ்க்கையிலும் வேலையிலும் ஒரு உதாரணமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கிளைக்கும் மாதம் ஒரு முறையாவது பரிசோதகர் விஜயம் செய்வது அவசியம். மூன்று மாதங்களுக்கு மேல் ஒரு கிளையிலும் பரிசீலனை செய்யாமல் கணக்கு பாக்கி இருக்கக்கூடாது. பரிசோதகர்கள் ரொக்கம் கணக்குடன் ஸ்டாக் கணக்குகள் எல்லாம் நுட்பமாக சரிபார்க்க வேண்டும். தவறுதல்கள் இருந்தால் அவைகளை உடனுக்குடன் திருத்த வேண்டும்.

ஸ்டாக்கிலோ, ரொக்கத்திலோ விசேஷ தவறுதல்கள் இருந்தால் தலைமைக் காரியாலயத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து பரிகாரம் செய்ய வேண்டும். கிளைகளின் பொது நிர்வாகத்திற்கும் பொதுஜனங்களுடன் தொண்டர்கள் சரிவர நடந்து கொள்வதற்கும், பரிசோதகர்கள் ஓரளவு பொறுப்பாவார்கள். கிளையின் கணக்குகளை அந்தந்த இடத்திலேயே பரிசீலனை செய்வதுதான் முறை. கணக்குகளின் முறையைப்பற்றியும் பரிசீலனை முறை பற்றியும் ஒரு தனி புத்தகத்தில் விவரிக்கலாம். பரிசோதகர்கள் கிளைகளிலே ஸ்டாக், ரொக்கம் முதலியவை அதிகமாக தேங்கினல் மாகாணக் காரியாலயம் மூலம் அவைகளை தேவையான இடத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும். கணக்குகளை மட்டும் பரிசீலனை செய்வதோடல்லாமல் சங்கத்தின் லக்ஷியத்திற்கு போகுமிடமெல்லாம் அவர் ஒரு பிரசாரகராக இருக்கவேண்டும்.

சர்க்கா சங்கத்தின் வருஷாந்திர கணக்குகள் பிரதி வருஷமும் ஜுன் மாதம் 30 உ யுடன் முடிவடைகிறது. ஜுன் மாதத்துடன் முடியும் வருஷாந்திர கணக்குகளினல் இறுதியான கையிருப்புச் சீட்டு தயாரிக்கப்படும். ஆனல் இடைக்காலத்தில் சர்க்கா சங்கத்தின் வரவு செலவின் போக்கை நிர்ணயித்து அதற்கு தகுந்தாற்போல் வருஷாந்திர பட்ஜட்டை மாற்றிக் கொள்ள இடைக்கால அரை வருஷத்திய லாபநஷ்ட கணக்கும் கையிருப்பு சீட்டும் உதவியாக இருக்கும். அதற்காக டிசம்பர் மாதத்துடன் முடியும் இடைக்கால லாப நஷ்ட கணக்கும்

காலதாமதமின்றி தயாரிப்பது அவசியம். ஸ்டாக் பரிசீலனையும், கணக்கு பரிசீலனையும் முடிந்தபிறகே கிளைகளின் லாபநஷ்ட கணக்கு தயாரிக்கப்படவேண்டும். கிளைகளில் தினப்படி ஸ்டாக், ரொக்க கணக்குகளை பரிசீலனை செய்து லாபநஷ்ட கணக்கு தயாரித்துக்கொடுப்பது முக்கிய பரிசோதகரும் மற்ற பரிசோதகர்களும் சேர்ந்து செய்ய வேண்டிய கடமை.

ஆடிட்டர்:— சர்க்கா சங்கத்திற்கு ஆடிட் மிக அவசியம். ஆனால் வெளியிலிருந்து ஆடிட் தொழிலில் உள்ளவர்கள் மூலம் ஆடிட் செய்வதினால், சங்கத்திற்கு பூர்ணபயன் ஏற்படுவதில்லை. முழுநேரம் சங்கத்தின் ஊழியராக இருந்து கொண்டு தினப்படி ஆடிட் செய்யக்கூடியவர்கள் அவசியம். சங்கத்தின் வேலைமுறையையும், தத்துவத்தையும் ஏற்று சங்கத்தின் முழுநேர தொண்டராக ஆடிட்டர் இருந்தால்தான் சங்கத்தின் வேலை திருப்தியாக நடைபெறும். இதற்காகவே சங்கத்திற்கு முழுநேர ஆடிட்டர் அவசியமாகிறது. பரிசோதகர்களுடைய வேலைகள் எல்லாம் மேற்பார்வை பார்ப்பதுடன் கிளைகளின் கணக்குகளை சோதனை ஆடிட் செய்ய வேண்டும். குறிப்பாக மாகாண காரியாலயம், மத்ய காரியாலயம் இவைகளில் எல்லாம் ஆடிட்டரே நேராக தினப்படி ரொக்க கணக்குகளைப் பார்ப்பது நலம். சங்கத்தின் ஆடிட்டர் **2, 3,** மாகாணக்கிளைகளை மேற்பார்வை பார்க்கலாம். தயாரிக்கப்பட்ட கிளைகளின் லாபநஷ்டக் கணக்கையும், கையிருப்புச் சிட்டையும் ஒருமிக்க சேர்த்து மாகாணத்திற்கு ஒரே லாபநஷ்டக்கணக்கும் கையிருப்புச்சிட்டும் தயார் செய்தல் அவசியம். இவைகளையெல்லாம் ஆடிட்டர்

நன்றாக பரிசீலனை செய்து கையொப்பமிட்டு இதை ஒப்புக் கொள்ளும்படி தலைமைக்காரியாலய காரியதரிசிக்கு சிபார்சு செய்யலாம். ஆடிட்டர் நிர்வாகத்தில் சம்பந்தப் படாமலும், அதிக கட்டுப்படாமலும் சுயேச்சையாக யிருப்பது நலம். அப்பொழுதுதான் தனது பாரபக்ஷ மற்ற சுத்தமான தத்துவ ரீதியான மனோபாவத்தைக் கொண்டே எல்லாவற்றையும் நிர்ணயிப்பது சாத்திய மாகும். பிரிட்டிஷ் சட்டத்திலும், இந்திய சர்க்காரிலும், அக்கௌண்டண்டு ஜெனரலின் ஸ்தானம்போல நம் தர்ம ஸ்தாபனங்களில்உள்ள ஆடிட்டர்களின் ஸ்தானம் இருத்தல் பொருத்தமானதாகும். மிகவும் நெருக்கடியான சந்தர்ப் பத்தில் சங்கத்தின் நன்மைக்காக நிர்வாக சம்பந்தமான மாறுதல்களைப்பற்றி தலைமைக்காரியாலயத்திற்கு யோசனை கூறுவதும் ஆடிட்டரின் முக்கிய கடமையாகும். சங்கத் தின் அனுபவத்தில் பார்த்தால் மாகாண நிர்வாகப்பொறுப்பு எடுத்துக் கொள்ளுவதற்கும் ஆடிட்டரின் வேலையும் அதில் கிடைக்கும் அனுபவமும் மிகப்பயன்படுகிறது.

காரியாலயம்:— மாகாண காரியாலயத்தில் கடிதம் இலாகா (Correspondence Section) முக்கியமானது. கிளைகளி லிருந்தும் வெளியிலிருந்தும் வரும் கடிதங்களுக்கு சுருக்க மாகவும், கண்ணியமாகவும் உடனுக்குடன் பதில் எழுத வேண்டும். சங்கத்தின் உயர்ந்த லக்ஷியத்திற்கும் கொள் கைக்கும் பொருத்தமாக கடிதங்களின் பாஷை இருத்தல் அவசியம். ஒருவரையும் அலக்ஷியம் செய்யாமலும் மனதை புண்படுத்தாமலும் சத்தியத்தையும், அஹிம்சையையும் அனுசரித்து நடக்க முயற்சிப்பது நமது கடமை. தபால், தந்தி, போன் முதலியவைகளிலும், சாதல்வார் செலவிலும்

மிக சிக்கனம் அவசியம். வீணாகப்பிரயாணச் செலவு செய்யக்கூடாது. இதர காரியாலயத்தைப்போல பிரயாண பேட்டாவிலிருந்து தொண்டர்கள் மிச்சம் பிடித்து சம்பாதிக்கும் எண்ணம் சங்கத்தைப்போல தர்மஸ்தாபனத்திற்கு பொருத்தமற்றது.

தொண்டர்களை அடிக்கடி அகாரணமாக மாற்றுவது முறையாகாது. விருப்பு, வெறுப்பின்றி சங்கத்தின் நன்மைக்காகவே தொண்டர்கள் மாற்றப்படலாம். சிறிது சொந்த அசௌகரியமிருந்தாலும் தொண்டர்கள் பொது நன்மையை உத்தேசித்தும், தங்களுக்கு கிடைக்கும் புது அனுபவத்தைக் கருதியும் மாறுதல்களை ஏற்கவேண்டும்.

மாகாணக் காரியாலயத்தில் பொதுவாகத் தொண்டர்கள் எல்லோரும், நேரிலோ கடிதம் மூலமோ, கண்ணியமாகவும் மனித மதிப்புடனும் நடத்தப்படவேண்டும். சங்கத்தின் உயர்ந்தலக்ஷியத்திற்கும் பண்புக்கும் மாகாணக் காரியாலயம் ஓர் சிறந்த உதாரணமாக விளங்கினால்தான் சங்கத்தின் கீர்த்தியும் சக்தியும் உயரும்.

புள்ளி விவரங்கள்:— மாகாணத்தின் ஒவ்வொரு மாதமும் மொத்தமாக நடக்கும் வேலையை அறிந்துகொள்ள புள்ளி ரிஜிஸ்டர் (Statistical Register) அதிக அவசியம். நூல் உற்பத்தியின் எடை, சிட்டம் எண், சராசரி நெம்பர், பஞ்சின் கிரயம், நூற்பவர்களுக்கு கிடைத்த வருமானம் முதலியவைகளுக்கு கிளைவாரியாக ரிஜிஸ்டர் இருக்க வேண்டும். அதேபோல, நெய்த கதரின் எடை, சதுர கெஜம், நெய்தவர்களின் வருமானம் முதலிய புள்ளி

விபரங்களும் கிராமத்தில் கதர் விற்பனை. நகரத்தில்விற்பனை நூற்போர்களுக்கு விற்றது, நூல் விதிப்படி விற்றது, சுய தேவை நூலுக்கு கதராக மாற்றிக்கொண்டது, சுய தேவைக்கு நூற்றதை நெய்ததற்கு புள்ளி விவரங்கள், நூற்புக்கருவிகள், பிரசுரங்கள், உற்பத்தி-விற்பனை முதலிய புள்ளிவிவரங்களும் அவசியமாகும். இவைகளுக்காக மாதாந்திர அறிக்கை பாரங்களை கிளைகள் பூர்த்தி செய்து அனுப்பியதிலிருந்து, மாதாமாதம் மொத்தமாக மாகாணத் திற்கு புள்ளிகளை சேர்த்து வேலையின் அளவையும் போக் கையும் அறிந்து நிலைமைக்குதகுந்தாற்போல் அடுத்த மாதம் குறைகளை திருத்தவும்,அபிவிருத்தியை இன்னும் அதிகமாக் கவும் விசேஷ பிரயத்தனம் செய்ய உதவும். இவைகளைக் கொண்டு ஆறுமாத அறிக்கையும்,வருஷாந்திர அறிக்கையும் தயாரித்து கதர் அன்பர்களுக்கு வெளியிடவேண்டும். பத் திரிகை மூலம் அடிக்கடி கதர் வேலையின் விசேஷ போக் கைப்பற்றி சிறிய சிறிய அறிக்கைகள் விடுவதும் அவசிய மாகும்.

பயிற்சி:— சங்கத்தின் வேலை முறையிலும், தத்துவத் திலும் அடிக்கடி தொண்டர்களுக்கும் இதரர்களுக்கும் பயிற்சி கொடுப்பது சங்கத்தின் முக்கிய வேலை. இதற்காக சிறு, சிறு, பயிற்சி முகாம்கள் அவசியம். இரண்டு, மூன்று வாரத்திற்கு சுமார் 30 முதல் 40 தொண்டர்கள் வரை ஒன்று சேர்த்து ஆசிரமத்தைப்போல் முகாம் நடத்தலாம். வேலை ஆள் இல்லாமல், தாங்களே சமைப்பது, துப்பரவு செய்வது, தோட்டவேலை, சுயதேவைக்கிரியைகள் செய் வது, தத்துவ விசாரணையும் வேலையைப்பற்றி சர்ச்சையும் சமூக பிரார்த்தனை நடத்துவது முதலியவைகள் முகாமின்

முக்கிய அம்சங்கள். தத்துவம் அறிந்து பொறுப்புள்ள அனுபவம் பெற்றவர்களின் தலைமையில் முகாம் நடத்த வேண்டும். வெளியிலிருந்து மற்றவர்களும் சேர்ந்து கொள்ளலாம். முகாமின் செலவை வருகிறவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். முகாமினால் சங்கத்திற்கு செலவு ஏற்படக் கூடாது. இதுபோல மூன்று நாள் முகாம், ஏழுநாள் முகாம் முதலியவைகள் நடத்தலாம். வருஷத்தில் ஒரு மாகாணத்தில் குறைந்தது பத்து முகாமாவது நடைபெற வேண்டும். தவிர, தொண்டர்களின் கூட்டங்கள் வருஷம் இரு முறையாவது ஒவ்வொரு வட்டாரத்தில் நடத்தி, சங்கத்தின் வேலைத்திட்டம், நிலைமை, மாறுதல்களின் அவசியம், தொண்டரின் விசேஷ கடமை முதலியவைகளைப்பற்றி மாகாண நிர்வாகஸ்தர்கள் விளக்கிக் கூறவேண்டும். இதில் ஏற்படும் பலன் அளவுகடந்தது.

பிரசாரம்:— விசேஷ அறிக்கைகளைத்தவிர, கண்காக்ஷிகள் மூலம் பிரசாரம் அவசியம். பழைய கண்காக்ஷிகளில் கதர் விற்பனையே நோக்கமாக இருந்தது. இப்பொழுதோ கதர் விற்பனை கூடாது. கருவிகளும், சுயதேவை கிரியைகளும், பிரசுரங்களும் மட்டும் தான் காட்டி விற்கலாம். சுய தேவைக்கு தூண்டக்கூடிய வகையில் கண்காக்ஷி, பயிற்சிக் கூடம் அல்லது வித்தியாலயமாக அமைய வேண்டும். இதில் நஷ்டம்தான் ஏற்படலாம். இதை பொது ஜனங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். சங்கம் ஏற்க முடியாது. பொதுவாக மகாநாடுகள், சர்வோதய சம்மேளனம் முதலிய சமயங்களில் நடத்துவது பொருத்தமாகும்.

தவிர, தொண்டர்கள் ஒருகோஷ்டியாக 4, 5 பேராக சேர்ந்து பருத்தி அரைப்பதிலிருந்து நெய்யும்வரையில் செய்து காண்பித்து பிரசாரம் செய்யலாம். ஒரு கோஷ்டி ஓர் கிராமத்தில் ஒரு மாதம்தங்கி இம்மாதிரி நேராக வேலை செய்து காண்பித்து சுயதேவை பிரசாரம் செய்து கொண்டே போகலாம். ஒரு ஜில்லாவுக்கு ஒரு கோஷ்டி இருந்தால் நலம்.

காந்தி ஜயந்தி ஸர்வோதய ஸம்மேளனம், முதலிய தேசீய தினங்களை தகுந்தவாறு கொண்டாட தகுந்த திட்டம் வகுத்து அதை நிறைவேற்றுவது மாகாண நிர்வாகஸ்தரின் கடமையாகும். இம்மாதிரி கொண்டாட்டங்களில் பக்தியோடு கூடிய செய்கைதான் விசேஷம். நாடகம், சங்கீதக்கச்சேரி முதலிய விசேஷ ஆர்ப்பாட்டங்கள் செய்யாமல், கிராமவாழ்க்கையுடன் நாம் கலந்து அதைப்புதிய காந்தீய ஆக்கல் வழியில் இழுத்துச் செல்லக் கூடியதாக இருக்கவேண்டும். நமது நோக்கமும், தத்துவமும் மாகாண நிர்வாகஸ்தர் மனதின்முன் எப்பொழுதும் இருக்கவேண்டும்.

சர்க்கா சங்கத்திற்கு நூல் நிதி சேர்ப்பதும், சங்கத்தின் அங்கத்தினர்கள் சேர்ப்பதும் மாகாண காரியாலயத்தின் முக்கிய வேலையாகும். சங்கத்தின் லக்ஷியத்தை ஏற்றுக்கொள்ளுபவர்கள் தாங்களே நூற்ற நூல் ஆறு சிட்டம் வருஷ சந்தாவாக கொடுத்து அங்கத்தினர்களாக பதிவு செய்து கொள்ள வேண்டும். மாதம் தவறாமல் குறைந்தது 7½ சிட்டம் நூற்பவர்கள் சுய தேவைக்கு நூற்போர் என்று கருதப்படுவார்கள். இவர்களும்

ரிஜிஸ்டர் செய்து கொள்ளப்பட வேண்டும். இதற்கெல்லாம் தகுந்த பிரசாரம் செய்து, ஒவ்வொரு கிளையிலும் பதிவு செய்வதற்கும் வேண்டிய ரிஜிஸ்டர் முதலியவைகளுக்கு மாகாண நிர்வாகஸ்தர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். காலம் தவருமல், முறைப்படி அதிக பலன் கிடைக்கும்படி முன் ஏற்பாடு செய்வது மாகாணநிர்வாகஸ்தரின் திறமையைப் பொருத்திருக்கிறது.

---

## முடிவுரை.

சங்கத்தின் பொதுவான லக்ஷியம், வேலைத்திட்டம், அதன் தத்துவம், வேலைமுறை, நமது அனுபவம், அவசியமான மாறுதல்கள், இலாக்காக்கள், தொண்டர்களின் கடமை, தொண்டர்களுக்கும் சங்கத்திற்கும் சம்பந்தம், தொண்டர்களுக்கும் கதர் அன்பர்களுக்கும் உள்ள சம்பந்தம், கதருக்காக உழைப்பவர்களுக்கும் உள்ள சம்பந்தம், நமது இறுதி லக்ஷியத்தை அடைய நாம் என்ன செய்யவேண்டும் என்ற பல விஷயங்களைப்பற்றி பொதுவாக விவரித்தோம். புத்தகத்தின் எல்லைக்குள், விவரமாக பலவற்றை விஸ்தரிக்கக்கூடவில்லை. இடமில்லாமையால் பல விஷயங்களை விடவேண்டியிருந்தது. ஆகவே நாம் எதிர்பார்த்தபடி இதைப் பூர்த்தியாக்க முடியவில்லை. சர்க்கா சங்கத்தொண்டர்களுக்கும்,ஆயிரக்கணக்கான கதர் அன்பர்களுக்கும், இதர நிர்மாணத்துறையில் முக்கியமாக ஆதாரக்கல்வித் துறையிலும் கிராம அபிவிருத்திக்காக வேலை செய்யும் தொண்டர்களுக்கும் கதர் சேவையைப் பற்றிய தத்துவ ஆராய்ச்சிக்கு இது ஓர் ஆரம்ப புத்தகமாக பயன்படுமென்று நம்புகிறோம்.

# கதர்மலர்-ஸர்வோதய பிரசுரங்கள்.

| கதர் - சாஸ்திரம், சரித்திரம் - கலை. | விலை. | | | தபால் செலவு. | | |
|---|---|---|---|---|---|---|
| 1. கைராட்டை சரித்திரமும் புத்துயிரும். புந்தாம் பேகர்—வரதாச்சாரி பதிப்பு—2. | 1 | 8 | 0 | 0 | 2 | 0 |
| 2. சர்க்கா சங்க வரலாறு | 1 | 0 | 0 | 0 | 1 | 3 |
| 3. சர்க்கா சங்க வேலைத்திட்டம் | 0 | 8 | 0 | 0 | 1 | 0 |
| 4. கிசான் - பெட்டி - ஈரிழைராட்டை | 1 | 0 | 0 | 0 | 1 | 3 |
| 5. கதர் உபகரணங்கள் | 1 | 0 | 0 | 0 | 1 | 3 |
| ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி எழுதிய நூல்கள்:— | | | | | | |
| 6. நூற்புக்கணிதம்-பாகம் I - பதிப்பு-3 | 0 | 6 | 0 | 0 | 0 | 9 |
| 7. ,, ,, II - ,, 1 | 0 | 8 | 0 | 0 | 1 | 0 |
| 8. ,, ,, III- | 0 | 14 | 0 | 0 | 1 | 3 |
| 9. ,, ,, IV- | 1 | 0 | 0 | 0 | 1 | 3 |
| 10. நூற்புக்கலையின் நுணுக்கங்கள் (பதிப்பு 2) | 1 | 0 | 0 | 0 | 1 | 3 |
| 11. தக்ளியால் நூற்பதெப்படி? சத்தியன் (பதிப்பு 3) | 0 | 8 | 0 | 0 | 1 | 0 |
| 12. நரம்பு செய்தல் | 0 | 8 | 0 | 0 | 0 | 9 |
| 13. பட்டை போட சுலபவழி பதிப்பு—2. | 0 | 4 | 0 | 0 | 0 | 9 |
| 14. சுயதேவைக்கதர்—பருத்தி பிரசினை | 0 | 6 | 0 | 0 | 0 | 9 |

## சம்பூர்ண கிராம சேவை.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15. சேவாகிராம முகாம் அல்லது சம்பூர்ண கிராம சேவை | 1 | 0 | 0 | 0 | 1 | 3 |
| 16. சுயம்பூர்ண கிராமம் எப்படியிருக்கும் | 0 | 4 | 0 | 0 | 1 | 0 |
| 17. துப்புரவு விஞ்ஞானம்—தீரேந்திர மஜூம்தார் -பதிப்பு 2 | 0 | 8 | 0 | 0 | 1 | 3 |
| 18. மலஜலசுத்தி—வல்லபஸ்வாமி | 0 | 8 | 0 | 0 | 0 | 9 |

## காந்தீய-ஸர்வோதய தத்துவம்.

| | விலை. | | | தபால் செலவு. | | |
|---|---|---|---|---|---|---|
| 19. காந்திய நவநீதம்-கிஷோரிலால் மஷ்ருவாலா(-பதிப்பு 2) | 2 | 0 | 0 | 0 | 1 | 6 |
| வினோபாஜியின் நூல்கள், | | | | | | |
| 20. காந்திஜியின் குரல்-பதிப்பு 3 | 0 | 6 | 0 | 0 | 0 | 9 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21. அறிவுரைகள் | 0 | 12 | 0 | 0 | 1 | 3 |
| 22. திருப்பூர் பிரார்த்தனை பிரசங்கங்கள் | 0 | 8 | 0 | 0 | 1 | 0 |

**மகாத்மா எழுதியவை.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 23. ஸர்வோதயம்-பதிப்பு 2 | 0 | 6 | 0 | 0 | 1 | 0 |
| 24. சமூகத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம் பதிப்பு 4 | 0 | 4 | 0 | 0 | 0 | 9 |
| 25. ஆசிரம வாழ்க்கை | 1 | 4 | 0 | 0 | 1 | 6 |
| 26. நீதிதர்மம் | 0 | 4 | 0 | 0 | 0 | 9 |
| 27. சர்க்காவும் அஹிம்சா சமுதாயமும் | 1 | 0 | 0 | 0 | 1 | 9 |
| 28. காந்தி ஆசிரம பஜனாவளி | 0 | 6 | 0 | 0 | 1 | 0 |

**மகாத்மா வாழ்க்கை சித்திரங்கள்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 29. பாபு என் தாய்-மனுகாந்தி | 0 | 10 | 0 | 0 | 1 | 0 |
| 30. பாப்பாவின் காந்தி-ஜுகத்ராம்தவே பதிப்பு 3 | 0 | 12 | 0 | 0 | 1 | 6 |
| 31. காந்திக் காக்ஷிகள்-காக்கா கலேல்கர் | 1 | 4 | 0 | 0 | 1 | 9 |
| 32. எமது பா—ஸ்ரீமதி வனமாலா பரீக் —ஸ்ரீமதி சுசீலா நையார் பாகம் 1 | 1 | 4 | 0 | 0 | 1 | 9 |
| பாகம் 2 | 1 | 4 | 0 | 0 | 1 | 9 |
| 33. ராட்டைப்புரட்சி-திரேந்திர மஜும்தார் | 0 | 6 | 0 | 0 | 1 | 0 |
| 34. கதர்சேவையும்-தத்துவமும் | 0 | 12 | 0 | 0 | 1 | 9 |

**இதர நூல்கள்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 35. தன்னம்பிக்கை-எமர்சன் எழுதியது ஸ்ரீ V. V. S. ஐயர் மொழிபெயர்ப்பு | 0 | 8 | 0 | 0 | 1 | 3 |
| 36. நீக்ரோ மஹான்—புக்தர் வாஷிங்டன் ஸ்ரீ V. V. S. அய்யர் எழுதியது | 0 | 8 | 0 | 0 | 1 | 3 |

**ஆங்கில நூல்கள்.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 37. Revolutionary Charka | 0 | 6 | 0 | 0 | 1 | 0 |
| 38. Demand of the Times | 0 | 12 | 0 | 0 | 1 | 0 |
| 39. A. I. S. A's New Programme | 0 | 10 | 0 | 0 | 1 | 0 |
| 40. Pacifists' Prayer for Peace | 0 | 2 | 0 | 0 | 0 | 9 |

**கதர் மலர்** (ஸர்வோதய) **பிரசுராலயம்,**

அகில பாரத சர்க்கா சங்கம், தமிழ்நாடு,

வீரபாண்டி, திருப்பூர்.